தரம்

# 9

# சைவநெறி

## ஆசிரியர் வழிகாட்டி

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)



சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம, இலங்கை

**Web**| www.nie.lk **Email**| info@nie.lk

# சைவநெறி

## தரம் - 09

# ஆசிரியர் வழிகாட்டி

(2018 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம, இலங்கை
www.nie.lk
info@nie.lk

# சைவநெறி
## தரம் - 09
## ஆசிரியர் வழிகாட்டி

தேசிய கல்வி நிறுவகம்
முதற் பதிப்பு - 2018

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி மாம்புல்கொட சுமனரதன தேரர்,**
பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்

தேசிய கல்வி நிறுவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டி சைவநெறிப் பாடத்தை கற்றலால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடையும் வகையில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய இறைநம்பிக்கை,சமய நம்பிக்கை, சமய ஒழுகலாறு, வழக்காறு, விழுமியங்கள், தத்துவங்கள், சமய சமூக நடைமுறைகள், இலக்கியம் செயன்முறை அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் தேர்ச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டே ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களினால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான விடய உள்ளடக்கம் இவ் ஆசிரியர் வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உதவும் பொருட்கள், தரவிருத்தி உள்ளீடுகள் கொடுக்கப்பட்டிருப்பதால், முன் கூட்டியே அவற்றை உரிய நேரத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு இதன் மூலம் வாய்ப்புக் கிடைக்கின்றது.

பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை உறுதி செய்து கொள்வதற்குரிய பெறுமதிமிக்க ஆலோசனைகள் பல, கணிப்பீடும் மதிப்பீடும் என்ற பகுதியிலே உள்ளடக்கப்பட்டுள்ளன பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் என்ற பகுதியை பாடசாலைக் கல்வியோடு சார்ந்த அனைவரும் முறையாக வாசித்து விளங்க வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்களுக்குக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வழங்கும் போதும் ஆசிரியர் பணிகளை மேற்பார்வை செய்யும் போதும், உரியவாறு நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கும், பாடசாலை முகாமைத்துவத்தில் உள்ளவர்களுக்கு இது தேவையான விளக்கத்தை அளிக்கிறது.

ஆசிரியர் வழிகாட்டியில் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகளை ஆசிரியர் அவ்வாறே நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை. தமது ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனைகளுக்கும் ஏற்ப, செயற்பாடுகளை ஏற்றவிதமாக ஒழுங்குபடுத்திக் கொள்வது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணமாக நான்கு குழுக்களை அமைக்க வேணடுமென கூறியிருப்பினும் வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப அதை மாற்றிக் கொள்ளலாம். குழுச் செயற்பாடுகளுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் விதமாக உரிய தீர்மானங்களை எடுக்கும் போது ஆசிரியர் சாதுர்யமாக நடந்து கொள்ளவேண்டும். உரிய தேர்ச்சி மட்டத்தை நிறைவு செய்யும் விதமாகச் செயற்பாடுகளுக்கு உரிய நேரம் வேறாக்கப்பட்டுள்ளது. ஒரு பாடவேளைக்கு அப்பாற் செல்ல ஆசிரியருக்கு நேரிடலாம் ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதியளவு நேரம் அந்தச் செயற்பாடுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் நேர அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தனிப் பாடவேளை, இருபாடவேளைகளுக்கு ஏற்றவாறு இச் செயற்பாடுகளைப் பகுதிகளாகச் செய்து கொள்ள வேண்டியது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. முன்னைய நாள் ஆரம்பித்த செயற்பாடொன்றை தொடர்ந்து மறுநாள் செய்யும் போது முதன் நாள் நிறைவு செய்தவற்றை மீண்டும் அறிமுகம் செய்து, தொடர வேண்டும் என்பதும் உங்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

யாதேனும் ஒரு தேர்ச்சி மட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வெவ்வேறான செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன்படி உத்தேச செயற்பாடானது அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என உங்களிடம் எதிர்பார்க்கபட்டவில்லை. மிகவும் சிறந்த பிரவேசத்துடன் கூடிய, ஆய்வுகளைக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவுபடுத்தக்கூடிய வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி, மேற் கொள்ளப்படும் சிறந்த கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டையே நாம் உங்களிடம் எதிர்பார்க்கின்றோம். புதிய விடயங்களை அறிமுகப்படுத்தும் போது உங்களின் வினைத்திறனையும், விளைதிறனையும் மேம்படுத்தும் நோக்கில் இவ் வழிகாட்டியை தேசிய கல்வி நிறுவகம் வழங்குகிறது. கணிப்பீட்டு, மதிப்பீட்டு செயற்பாடுகளைப் பயன்படுத்தி கற்றலைப் பரிசீலனை செய்து, உரிய மீளவலியுறுத்தல்களைச் செய்வது உங்கள் பணியாகும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றிக்கு மதிப்பீட்டு முறைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. வழிகாட்டியில் செயற்பாடுகளின் இறுதியில் வீட்டில் செய்யப்படவேண்டியதும் ஆசிரியர்களால் அவதானிக்கப்பட வேண்டியதுமான செயற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது அவற்றை ஆசிரியர்கள் உரியவாறு செயற்படுத்தும் அதேவேளை மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல். சமூகத்திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பயனுள்ள கற்றல் கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

**திரு. பொன் ஜெயரூபன்,**
உதவி விரிவுரையாளர்
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

# கலைத்திட்டக் குழு

**வழிகாட்டலும் அனுமதியும் :** **கல்விசார் அலுவல்கள் சபை,**
தேசிய கல்வி நிறுவகம்.

**பணிப்பு :** **கலாநிதி . திருமதி . ஜெயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

**வண. கலாநிதி மாம்புல்கொட சுமனரதன தேரர்**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,

**இணைப்பாக்கம் :** **திரு பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**விடய ஆலோசனை :** **பேராசிரியர். எம்.வேதநாதன்**
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

**திருமதி. சாந்தி கேசவன்,**
தலைவர், இந்து நாகரிகத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு.

**எழுத்தாளர் குழு :** **திரு. பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

- **திரு. பெ. பேரின்பராசா,**
ஆசிரியர், மட்/களுதாவளை மத்திய மகா வித்தியாலயம்,
களுவாஞ்சிக்குடி. மட்டக்களப்பு.
- **திரு. என். அகிலன்,**
ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.
- **செல்வி. ஆர். சசிகலா,**
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம்,
கொழும்பு.
- **செல்வி கே. தாட்ஷாயணி,**
ஆசிரியர், கொ/றோயல் கல்லூரி
கொழும்பு-7
- **திருமதி. வி. குலராஜா** -
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம்,
வவுனியா தெற்கு.
- **திருமதி. வ.சியாமளா**
ஆசிரியர், மத்/கம்/கதிரேசன் மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி.
- **செல்வி. யோ. யோகினி,**
ஆசிரியர், மன்/ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயம்
மன்னார்.

**கணனி வடிவமைப்பு** - **திரு. பொன் ஜெயரூபன்**
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

**அட்டைப்படம்** - **திரு. சதுர மதுசங்க**

**காரியாலய உதவி** - திருமதி எஸ்.சி.பிரியதர்சனி
- திருமதி மங்கலிகா விஜேயரதன
- திரு. டயஸ் அமரசிங்க

# உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | - i |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | - iii |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | - iv |
| கலைத்திட்டக் குழு | - v |
| 9.1.0 பாடத்திட்டம் | |
| 9.1.1 அறிமுகம் | - 02 |
| 9.1.2 தேசிய கல்விக் குறிக்கோள்களும் அடிப்படைத் தேர்ச்சிகளும் | - 03 |
| 9.1.3 பாடத்திட்டத்தின் நோக்கம், தேர்ச்சிகள் | - 06 |
| 9.1.4 பாடத்திட்டம் | - 07 |
| 9.1.5 கற்றல் - கற்பித்தல் முறை | - 16 |
| 9.1.6 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | - 17 |
| 9.1.7 கணிப்பீடும் மதிப்பீடும் | - 19 |
| 9.2.0 பாடத்திட்ட செயற்பாடுகள் | |
| 9.2.1 கற்றல் கற்பித்தல் முறை - விளக்கம் | - 20 |
| 9.3.0 கணிப்பீடும் மதிப்பீடும் | |
| 9.3.1 கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம் | - 135 |

# சைவநெறி

## பாடத்திட்டம்

## தரம் - 09

(2018 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித்துறை
மொழிகள் மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுறுவகம்
ஸ்ரீலங்கா
www.nie.lk

## 8.1.1 அறிமுகம்

விஞ்ஞான விருத்தியும் பொருளாதார மாற்றமும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், மாணவர்களின் வாழ்வில் குறுக்கிடும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கத்தக்க ஆளுமையுள்ளவர்களாக்குவது கல்வியில் கடமையும் பொறுப்புமாகும். மாணவர்களை ஆளுமையுள்ளவர்களாக வளர்ப்பதில் சமய பாடம் முக்கிய பங்கினை வகிக்கிறது. சமயம் ஒரு வாழ்க்கை நெறி. மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கான நெறிமுறைகளையும் பண்புகளையும் அது அமைத்துத் தருகின்றது.

மனித வாழ்வில், சமயம் வகிக்கின்ற முக்கியத்துவம் உணரப்பட்டமையாலேயே சைவநெறி இலங்கையின் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒரு பாடமாக இடம் பெற்று வருகின்றது. அத்துடன்,2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கலைத்திட்டத்தில் இப்பாடம், கட்டாய பாடங்கள் ஐந்தினுள் ஒன்றாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சைவநெறி பாடத்தினூடாக மாணவர்களின் அறிவு, திறன்,மனப்பாங்கு மட்டுமன்றி,சமய அடிப்படையில் வையத்துள் வாழ்வாங்கு வாழும் திறனை விருத்தி செய்யக் கூடிய ஒழுக்கம், பண்பாடு முதலான ஆளுமைப் பண்புகளும் ஆன்மீகப் பண்புகளும் விருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் சமய அபிமானம், சமய நம்பிக்கை,சமய உணர்வுகள் என்பன வளர்க்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும் இக்கலைத்திட்டமானது, நடைமுறை வாழ்வியலுக்குத் தேவையான அடிப்படையான தேர்ச்சிகளை வழங்கி, மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதற்குச் சமயக் கல்வியைப் பயன்படுத்துவதைப் பிரதான நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன்,

- இறைசிந்தனை
- சமய நம்பிக்கை
- சமய ஒழுகலாறுகளும் விழுமியங்களும்
- சமய இலக்கியங்களும் தத்துவங்களும்
- சமயமும் சமூக நடைமுறைகளும்
- சமய சமரசம்

முதலான விடயங்களையும் உள்ளடக்குவதாக இப்பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தில் மாணவர்கள் அடையவேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய தேர்ச்சிகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ள ஆசிரியர்கள் தம்மாலான ஒத்துழைப்பபை வழங்க முன்வர வேண்டும்.

## 2.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்கு தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போஷிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

***தேசிய கல்விச் சேவை ஆணைக்குழுவின் அறிக்கை (2003)***

## 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்:**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்துதல். எண்ணுதல், கணித்தல், ஒழுங்குமுறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழில் நுட்பத் தகைமை : கணனி அறிவு கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்துதல்.

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்:**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வு சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்:**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்.

**சமூகச் சூழல்** : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

**உயிரியல் சூழல்** : வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரினத் தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதீகச் சூழல்** : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருட்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வு, நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்:**
அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்:**
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும், விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும், உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்:**
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுனர் போட்டிகள், ஓய்வு நேர பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மன எழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**(vii) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்:**
விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்துக்கு ஏற்ப இயங்கவும், அதனை முகாமை செய்யவும், வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## 9.1.4 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

01. தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடித்தல்.
02. பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனைத் தமது வாழ்வில் மேற்கொள்ளல்.
03. திருமுறைப் பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுதல்.
04. ஆலயங்களில் சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுதல்
05. சைவசமய குரவர்கள்,சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுதல்
06. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி கருத்துக்களை வெளிப்படுத்துதல்.
07. நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுதல்.
08. ஈழத்து சைவசமய வளர்ச்சியின் தொன்மையும் வரலாறும் பற்றி அறிந்து வெளிப்படுத்துதல்
09. ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளல்.
10. பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிக்கு மதிப்பளித்தல்.

## 9.1.4 பாடத்திட்டம் சைவநெறி - தரம் - 09

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 1.0 தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார். | 1.1 கடவுளின் மேலான தன்மையையும் (பரத்துவம்) கருணைத்திறத்தையும் அறிந்து இறைசிந்தனையில் ஈடுபடுவார். | • கடவுளின் பரத்துவம் அடிமுடி தேடியகதை – விளக்கம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இறைவனின் வியாபகத்தன்மை பற்றி அறிந்து கூறுவார்<br>• கடவுள் தொடக்கமும் முடிவுமற்றவர் என்பதை விளக்கிக் கூறுவார்<br>• புராணங்கள் மூலம் இறைவனின் பரத்துவத்தை உணர்வார்<br>• புராணக்கதைகள் உணர்த்தும் உண்மைத் தத்துவத்தை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பார். | 02 |
| | 1.2 தமது வாழ்வியலில் நாளாந்தச் செயற்பாட்டில் இறைசிந்தனையுடன் ஈடுபடுவார் | வாழ்வியலில் பஞ்சாங்கம் பெறும் முக்கியத்துவம்<br>- நாளாந்த செயற்பாட்டில் பஞ்சாங்கத்தை உபயோகப்படுத்தல் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• பஞ்சாங்கத்தின் அவசியத்தை எடுத்துரைப்பார்<br>• பஞ்சாங்கங்கள் குறிப்பிடும் நாளாந்த செயற்பாடுகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• இறைசிந்தனைக்கும் பஞ்சாங்கம் பார்த்தலுக்குமான தொடர்புகளை முன்வைப்பார்<br>• பஞ்சாங்கத்தின் முக்கிய விடயங்களை மற்றவர்களுக்கும் எடுத்துரைப்பார்<br>• வாழ்வியலுக்கும் பங்சாங்கத்துக்குமான தொடர்புகளை எடுத்துரைப்பார்.<br>• பஞ்சாங்கமும் விஞ்ஞானமும் பற்றி அறிந்து கூறுவார்<br>• பஞ்சாங்கக் கருத்துக்களை சமூகத்திற்குக் கொண்டு செல்வார் | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 1.3 சைவ சமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் பின்பற்றும் முறையினை வெளிப்படுத்துவார். | • நித்திய கருமம்<br>- தேவ வழிபாடு<br>பிதிர் வழிபாடு-<br>விருந்தோம்பல்<br>உயிர் ஓம்புதல்<br>உடல் ஓம்புதல்<br>( அறிமுகம் செய்தல்) | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• நித்திய கருமங்களில் செய்யவேண்டிய அறச் செயல்கள் பற்றிக் கூறுவார்.<br>• சமூக நலன் கருதிய செயற்பாடுகளின் பயன்கள் பற்றி விளக்குவார்<br>• சைவசமயத்தில் சமூக நலன் கருதி பெரியார்கள் மேற்கொண்ட அறச் செயல்களைத் தொகுப்பார்<br>• அறச் செயல்கள் இம்மையில் இன்பத்தையும் மறுமையில் புண்ணியத்தையும் சேர்க்கும் என்பதை ஏனையோருக்கு எடுத்துரைப்பார். | 02 |
| | | • விழுமியப் பண்புகள்<br>- இல்லற ஒழக்கம்<br>- சகிப்புத் தன்மை<br>- கூட்டுப்பொறுப்பு<br>- சமூக நல்லிணக்கம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சமூக விழுமியப் பண்புகளை வரையறுப்பார்<br>• விழுமியப்பண்புகளைக் கடைப்பிடிப்பதன் நன்மைகளைத் தொகுப்பார்.<br>• சமூகத்திற்கும் தமக்கும் எத்தகைய உயர்வைத் தரும் என்பதை மதிப்பிடுவார்<br>• சைவசமயப் பெரியார்கள் கடைப்பிடித்த விழுமியப்பண்புகளையும் அதனால் அவர்கள் பெற்ற நன்மைகளயும் விரித்துரைப்பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 1.4 வாழ்வியல் மேம் பாட்டிற்காக சடங்கு களை அறிந்து அவற்றை முறைப்படி கடைப் பிடிக்கும் முறையை இனங்காட்டுவார். | • **பூர்வக் கிரியை**<br>பூப்புனித நீராட்டு விழா | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• பூப்புனித நீராட்டு விழாவின் போது இடம்பெறும் கிரியைகளை அறிவார்.<br>• பூப்புனித நீராட்டு விழாவின் கிரியைகளின் முக்கியத்துவம் குறித்து விவரிப்பார்.<br>• பூப்புனித நீராட்டு விழாவின் போது செய்யப்படும் சடங்குகளின் பொருளைக் கேட்டறிந்து கொள்வார்<br>• பூப்புனித நீராட்டு விழா தொடர்பான விஞ்ஞான ரீதியான கருத்துக்களையும் தேடிப் பெறுவார். | 02 |
| | 1.5 வாழ்வின் மேம்பாட்டில் விரதங்கள் பண்டிகைகள் வகிக்கும் முக்கியத்துவத்தை விளங்கி அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவார் | • **விரதங்கள்**<br>- ஆடிப் பூரம்<br>- ஆவணிச் சதுர்த்தி<br>- நவராத்திரி விரதம்<br>- கேதார கௌரி விரதம்<br>• **பண்டிகைகள்**<br>- ஆடிப் பிறப்பு | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• விரதங்களின் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றினை அனுட்டிப்பார்.<br>• நாள் விரதங்களையும் மாத விரதங்களையும் அறிவார்.<br>• விரதங்களை அனுட்டிக்கும் போது விரத நியதிகளைக் கடைப்பிடிப்பார்.<br>• ஆன்மீக மேம்பாட்டிற்கு விரதம் உதவுகின்றது என்பதை உணர்வார்.<br>• பண்டிகைகளின் முக்கியத்துவத்தினை அறிந்து கடைப்பிடிப்பார்.<br>• ஆடிப்பிறப்புப் பற்றி அறிந்து அதனைக் கொண்டாடுவார்.<br>• கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 2.0 பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனைத் தமது வாழ்வில் மேற்கொள்வார். | 2.1 சமய நூல்களையும் அவற்றின் பக்தி வெளிப்பாடுகளையும் அறிந்து வெளிப்படுத்துவார். | • **நாலாயிரத் திவ்விய பிரபந்தங்கள்** | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்கள் என்றால் என்ன என்பதை அறிவார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் வைப்பு முறையையும் அதன் ஆசிரியர்களையும் அறிந்து அதற்கு மதிப்பளிப்பார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் பொருள் மரபின் அறிமுகத்தினைப் பெறுவார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்கள் வெளிப்படுத்தும் புராண இதிகாசக் கதைகளை இனங்காண்பார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் சிறப்புப் பற்றிய விடயங்களைத் தேடியறிவார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் பக்தி வெளிப்பாடுகளை இனங்காண்பார் | 03 |
| | 2.2 நாயன்மாரின் வரலாறுகளினூடாக அவர்களது இறை நம்பிக்கையையும், பக்தி உணர்வையும் அறிந்து அவற்றின் வழி ஒழுகுவார், பக்தியின் சிறப்பை எடுத்துரைப்பார் | • **மங்கையற்கரசியார்** வரலாற்றுக்கதையினூடாக அவரது பக்தி வெளிப்பாடுகளைப் போற்றுதல் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• மங்கையற்கரசியாரின் வரலாற்றை அறிந்து இறைபக்தியின் மேன்மையை விளங்கிக் கொள்வார்<br>• மங்கையற்கரசியார் செய்த சமூகப் பணிகளை அறிந்து தாமும் சமூக நலனுடன் செயற்படும் பண்பை வளர்த்துக் கொள்வார்<br>• மங்கையற்கரசியாரின் நற்பண்புகளையும் சமூக நல செயற்பாடுகளையும் எடுத்துரைப்பார்<br>• கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதனை இக் கதைமூலம் விளக்கிக் கூறுவார் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 3.0 திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவார். | 3.1 பஞ்ச புராணத்தையும், தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார். | • பஞ்சபுராணமும் தோத்திரப்பாடல்களும் பஞ்ச புராணங்களைப் பாடும் ஒழுங்கு முறையை அறிவார். தலம், பாடப்பட்ட சந்தர்ப்பம், பாடல் அடங்கியுள்ள திருமுறை ஆகியவற்றைக் குறிப்பிடல். பாடலுக்கு பொருள் சொல்லல், பொழிப்பு எழுதுதல்.<br><br>1. திருஞானசம்பந்தர் தேவாரம்<br>1.“ துஞ்சலும் துஞ்சலில்லாத போழ்தினும்”<br>2. “ காதலாகிக் கசிந்து”<br><br>2. திருநாவுக்கரசர் தேவாரம்<br>3.“ இல்லக விளக்கது…”<br>4. “காப்பதோர் வில்லும் அம்புஞ்...”<br><br>3. சுந்தரர் தேவாரம்<br>5.“ ஏழிசையாய் இசைப்பயனாய்…”<br>6 .“ மற்றுப் பற்றெனக்கின்றி நின்திரு…”<br><br>4. திருவாசகம்<br>7.“ போற்றி ஓம் நமச்சி வாய….”<br><br>5. திருவிசைப்பா<br>8.“ நையாத மனத்தினை…”<br><br>6. திருப்பல்லாண்டு<br>9.“ சொல்லாண்ட சுருதி….”<br><br>7. திருமந்திரம்<br>11. “ சிவனொடொக் குந்தெய்வம்….”<br><br>8. பெரியபுராணம்<br>12. “ ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள..”<br><br>9. திருப்புகழ்<br>13.” கைத்தல நிறைகனி ….” | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• தேவாரங்களினதும் தோத்திரப் பாடல்களினதும் சிறப்பினை அறிவார்.<br>• தேவாரங்களையும் தோத்திரங்களையும் மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.<br>• எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாகத் தேவாரத்தினையும் தோத்திரத்தினையும் எழுதுவார்.<br>• பஞ்சபுராணம் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் பாடும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.<br>• பாடல்களைப் பண்ணோடு பாடுவார்<br>• வரிக்கிரமமாக, பிழைகளின்றி இறைசிந்தனையுடன் தோத்திரப்பாடல்களைப் பாடுவார்<br>• பஞ்ச புராணத்தில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் என்பன அடங்கும் என்பதை அறிந்து கொள்வார்.<br>• முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும் என்பதை விவரிப்பார்.<br>• பஞ்ச புராணப் பாடல்களின் பொருள் விளக்கத்தையும் அவைகள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 4.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுவார் | 4.1 ஆன்மீக வழியில் தலயாத்திரை பற்றி அறிந்து தமது வாழ்வில் பேணும் முறையை எடுத்துரைப்பார் | • **தலயாத்திரையும் ஆன்மீகமும்** | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• தலயாத்திரை சைவமக்கள் வாழ்வில் பெறும் இடத்தை அறிந்து கொள்ள விரும்புவர்களுக்கு விளக்கிக் கூறுவார்<br>• தலயாத்திரையின் ஆன்மீக முக்கியத்துவத்தை விளங்கிக் கூறுவார்<br>• தலயாத்திரை மூலம் இறைபக்தியும் ஆன்மீக விருத்தியும் ஏற்படும் என்பதை விபரிப்பார்<br>• தலயாத்திரை மூலம் வளர்க்கப்படும் விழுமியங்களை தனி வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து நடப்பார் | 02 |
| 5.0 சைவ சமய குரவர்கள்,சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவார் | 5.1 சமய குரவர்கள் வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகும் முறையை அறிந்து கூறுவார் | • **சமய குரவர் நால்வரும் நாற்பாதங்களும்**<br>நால்வர் பணிகளுடாக நாற்பாதங்கள் விளக்கப்படவேண்டும். | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சமய குரவர் நால்வரும் இறைவன் அருள் பெற்றவர்கள் என்பதை அறிந்து கொள்வார்.<br>• சமய குரவர்கள் நால்வரும் இறைபக்தியுடன், அற்புதங்களைச் செய்து மக்களின் துன்பங்களை நீக்கினார் என்பதை கதைகளினூடாக விபரிப்பார்.<br>• சமய குரவர்கள் நாற்பாதங்களின் வழிநின்று எம்மையும் வழிப்படுத்தியமையை விளங்கிக் கொள்வார்<br>• சரியை, கிரியை, யோகம், ஞான நெறிகளின் முறைமைகளை அறிந்து அவற்றைப் பின்பற்ற முயற்சிப்பார்.<br>• சைவ நாற்பாதங்களைப் பின்பற்றுவதன் பயன்களைத் தேடி அறிவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 5.2 ஈழத்தில் சமயம் வளர்த்த பெரியார்களையும் அவர்களது பணிகளையும் அறிந்து அவர்களுக்கு மதிப்பளிக்கும் முறையை விளக்குவார். | • அருணாசல தேசிகர் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஈழத்தின் சைவப் பெரியார்களை அறிவார்<br>• ஈழத்தின் சைவப் பெரியார்கள் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளைத் தொகுப்பார்<br>• ஈழத்தின் சைவப் பெரியார்களின் பணிகளை அறிந்து தாமும் சமயத்திற்கு ஆற்றவேண்டிய பணிகளை அறிந்து செயற்படுவார்<br>• சைவசமயத்தின் வளர்ச்சிக்கு சைவர்கள் ஆகிய நாம் செய்யவேண்டிய பணிகளை அருணாசல தேசிகரின் வாழ்க்கை வரலாறு மூலம் அறிந்து எடுத்துரைப்பார் | 02 |
| 6.0 சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கிக் கருத்துக்களை வெளிப்படுத்துவார். | 6.1 சைவ சித்தாந்தம் தொடர்பாக அடிப்படை விளக்கம் பெற்று தத்துவத்தின் அடிப்படை அம்சங்களை இனங்காண்பார், அவை தொடர்பாக விளக்கம் பெறுவார். | • **பாசம்**<br>முப்பொருளுக்கும் மும்மலங்களுக்கும் இடையிலான தொடர்பு (ஆணவம், கன்மம், மாயை பற்றிய விளக்கம்)<br>(எளிமையான அறிமுகம்) | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சைவ சித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் எனும் முப்பொருட்கள் பற்றி அறிவார்.<br>• ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களும் முப்பொருள்களுள் ஒன்று என்பதை அறிவார்.<br>• மும்மலங்களுள் முதலில் நீங்குவது மாயை இறுதியில் நீங்குவது ஆணவம், ஆணவத்தின் வலிமைகளை அறிந்து கொள்வார்.<br>• மும்மல நீக்கத்திற்கான வழிமுறைகளை அறிந்து விளங்கிக் கொள்வார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 7.0 நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவார். | 7.1 நாட்டார் வழிபாட்டு முறைகளை அறிந்து தமது வாழ்வில் கடைப்பிடிக்கும் முறைகளை எடுத்துரைப்பார். | • **நாட்டார் வழிபாடு**<br>- பத்ததி / பத்தாசி அறிமுகமும் அவற்றின் அடிப்படையிலான விளக்கம்<br>- பெரியதம்பிரான்<br>- காத்தவராயன்<br>- ஐயனார் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• நாட்டார் வழிபாட்டின் வரைவிலக்கணத்தைக் கூறுவார்<br>• நாட்டார் வழிபாடு இன்று வரை நிலைத்து நிற்பதற்கான காரணத்தை ஏற்றுக் கொள்ளுவார்.<br>• பெரிய தம்பிரான், காத்தவராயன், ஐயனார் வழிபாடு நடைபெறும் இடங்களை அடையாளப்படுத்துவார்.<br>• பெரிய தம்பிரான், காத்தவராயன், ஐயனார் சடங்கின் போது நிகழ்த்தப்படும் கதைகள் எவையெனக் குறிப்பிடுவார்.<br>• சடங்கு முறைகளினூடாக கிராமிய நம்பிக்கை, பண்பாடுகளைப் பேணிக்காக்க முன்வருவார். | 04 |
| 8.0 ஈழத்தில் சைவத்தின் தொன்மை யையும்,வரலாற்றுச் சிறப்பையும் ஆதாரங்கள் துணைக் கொண்டு வெளிப்படுததுவார். | 8.1 ஈழத்து சைவசமய வளர்ச்சியின் தொன்மை, வரலாறு என்பவற்றை ஆதாரத்துடன் முன்வைப்பார். | • **ஈழத்து சைவ சமய வளர்ச்சியின் தொன்மையும்வரலாறும்**<br>- அனுராதபுரக்காலம்<br>- பொலனறுவைக் காலம் எமது சைவசமயத்தவர்களின் பாரம்பரியங்களை அறிந்து பேணிக்காத்தல் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஈழத்தின் வரலாற்றுத் தொன்மையை அறிய உதவும் ஆதாரங்களைப் பட்டியற்படுத்துவார்.<br>• ஈழத்துச் சைவ மரபின் தொன்மை,வரலாற்றை அதனைப் போற்றும் மனப்பாங்கினைப் பெறுவார்.<br>• ஈழத்தின் சைவசமய வளர்ச்சி அனுராதபுர, பொலநறுவைக் காலங்களில் காணப்பட்டவாற்றை எடுத்துரைப்பார்.<br>• ஈழத்தின் தொன்மை வரலாற்றையும் தொன்மையையும் தேடி அறிந்து பாதுகாக்க முன்வருவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 9.0 ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வார். | 9.1 ஈழத்துச் சைவ ஆலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பார் | • **விநாயகர் ஆலயங்கள்**<br>- கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர்<br>• **சிவாலயங்கள்**<br>பொன்னம்பலவாணேஸ்வரம்<br>- ஈழத்துச் சிதம்பரம் காரைநகர் சிவன் ஆலயம்<br>• **அம்மன் ஆலயம்**<br>- மாத்தளை முத்துமாரியம்மன்<br>- பெரியபோரைதீவு காளியம்மன்<br>• **முருகன் ஆலயம்**<br>- தாந்தாமலை முருகன் ஆலயம்<br>தொண்டமானாறு செல்வச் சந்நதி<br>• **விஷ்ணு ஆலயங்கள்**<br>மட்டக்களப்பு திமிலைதீவு மகாவிஷ்ணு ஆலயம்<br>யாழ்ப்பாணம் பெருமாள் ஆலயம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம் பற்றி அறிந்து தலயாத்திரை மேற்கொள்வார்<br>• பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் பற்றி அறிந்து அதன் சிறப்புக்களைப் போற்றுவார்<br>• மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் பற்றிய வரலாற்றுக் கதைகளைத் தேடிப் பெறுவார்<br>• போரைதீவு காளியம்மன் ஆலய சிறப்புக்களை அறிந்து அதனைப் போற்றுவார்<br>• தாந்தாமலை முருகன் ஆலயம் மற்றும் தொண்டமானாறு சந்நதி முருகன் ஆலயம் பற்றிய செய்திகளையும் சிறப்புக்களையும் போற்றுவார்<br>• மட்டக்களப்பு திமிலைதீவு மகாவிஷ்ணு ஆலயம் பற்றிய செய்திகளையும் சிறப்புக்களையும் போற்றுவார்<br>• யாழ்ப்பாணம் பெருமாள் ஆலய சிறப்புக்களை அறிந்து அதனைப் போற்றுவார் | 06 |
| 10.0 பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிக்கு மதிப்பளிப்பார். | 10.1 பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து கொள்வர், அவை பற்றி விளக்குவர். | • **இலங்கையிலுள்ள சமயங்கள் பற்றிய பொது விளக்கம்** | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இலங்கையிலுள்ள அனைத்து மதங்கள் பற்றியும் அறிந்து அவைகள் கூறும் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பார்.<br>• சமயங்கள் கூறும் மனித விழுமியங்கள் மற்றும் விழாக்கள், விசேட தினங்கள் பற்றி அறிந்து அதற்கேற்ப அவற்றுக்கு மதிப்பளிப்பார். | 01 |

## 9.1.5 கற்றல் - கற்பித்தல் முறை

கற்றல் என்பது வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதாகும். கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது அடைவு மட்டம், பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தலிலேயே தங்கியுள்ளது. பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில் மாணவரிடம் உருவாக்கப்படும் கற்றல் பற்றிய கட்டுருவாக்கவியல் சிந்தனையில் உருவாகும் புதிய கருத்துக்கள், விடயங்கள் போன்றன பற்றித் தாமாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலை, மாணவர்களிடம் கட்டியெழுப்புவதே இதன் பிரதான அடிப்படை நோக்கமாகும்.

மாணவர்களது வாழ்வியலுக்குத் தேவையான ஆக்கத்திறன், கற்பனைத்திறன், தொடர்பாடல் திறன் முதலானவற்றையும் ஒழுக்கம், விழுமியம், ஆன்மீகம் என்பன சார்ந்த பண்புகளையும் விருத்தி செய்யக் கூடிய ஒரு கற்றல் முறையாகவும் இது அமைந்துள்ளது. குறிப்பாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றினூடாக மாணவர் நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும், நிலையானதுமான மாற்றமொன்றை இலக்காகக் கொண்டு தேர்ச்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சைவசமய பாடத்தைப் பொறுத்தவரை முக்கியமாக எதிர்பார்ப்பது, மனப்பாங்கு விருத்தியும் நடத்தை மாற்றமுமாகும். அதனை ஏற்படுத்த ஓர் இலகு வழியாகத் தேர்ச்சி மையக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை அமைந்துள்ளது.

தேர்ச்சி மையக் கல்வியில் ஆசிரியரது வகிபாகம் தெளிவானதொரு மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. தாம் பெற்றிருக்கும் அறிவை மாணவர்களுக்கு அப்படியே ஒப்புவிப்பதன் மூலம் அறிவை இடமாற்றம் செய்பவராக விளங்கிய ஆசிரியரின் செயன்முறை மாற்றப்பட வேண்டியதொன்றாகும். தேர்ச்சியை மையமாகக் கொண்டமைக்கப்பட்ட சைவநெறி பாடத்திட்டத்தில், சமயம் சார் செயன்முறை அனுபவங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், இங்கு மாணவரின் செயற்பாடு, பங்கு பற்றல் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தினூடாக மாணவர் அடையவேண்டுமென எதிர்பார்க்கின்ற குறைந்தபட்ச அடைவு மட்டத்தையேனும் அடையச் செய்வதற்கு உதவி செய்யவேண்டியது ஆசிரியரின் கடமையாகும். அத்துடன் மாணவரைச் சரியாக இனங்கண்டு, கற்றலுக்குத் தேவையான முறையான உபகரணங்களினூடாக அவர்களது அடைவு மட்டத்தை எய்துவதற்கு வழி காட்டுவது ஆசிரியரது கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் ஆரம்பத்திலேயே மாணவரிடம் விருப்பு, எதிர்பார்ப்பு என்பவற்றை ஏற்படுத்த வேண்டும். இங்கு விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படுவது அவசியமாகும். இதற்குப் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்களைக் கேட்டல், அட்டைகளைக் காட்சிப்படுத்தல், திருமுறைப்பாடல்கள், தோத்திரப்பாடல்கள் என்பவற்றைப் பாடச் செய்தல், ஓதச் செய்தல், ஒளி, ஒலி நாடாக்கள் என்பவற்றைப் பயன்படுத்துதல், செய்து காட்டல் முதலானவை அவற்றுட் சிலவாகும்.

சைவநெறி வாழ்வியலுடன் தொடர்புடைய ஒரு பாடமாகும். அதனால், கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் ஊடாக மாணவரிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆதலால், ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை நடத்துவதற்காகத் திறந்த உள்ளத்துடனும் போதிய திட்டமிடலுடனும் தயாராக வரவேண்டும். இங்கு மாதிரிகள் மட்டுமே தரப்பட்டுள்ளன. தமது தற்றுணிவுக்கேற்ப மாதிரிகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு ஆசிரியர் உரிமையுடையோராவர்.

### 9.1.6 பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

சமயக் கல்வி கற்றல் - கற்பித்தல் தொடரப்பாக பாடசாலையிலும் அயலிலும் கிடைக்கின்ற பௌதிக வளங்களையும், மனிதவளங்களையும் உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு ஒவ்வொரு பாடசாலையும் திட்டமிட்டுச்சயற்படுத்துவது அவசியம்.

சைவ சமய வழிபாட்டு முறைகளுக்கும், சமயம் சார்ந்த நடவடிக்கைகளுக்குமென பாடசாலைக் கொள்கை இருத்தல் அவசியம்.

சமயக் கல்வியின் அவசியத்தை, தகுந்த ஆதாரங்களுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும் எடுத்துக் கூறுவதன் மூலம் அவர்களின் உதவிகளைப் பெற்று கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ளலாம்.

சைவசமயத்தைக் கற்பிப்பதற்கு, பாடசாலையில் வளப் பற்றாக்குறை ஏற்பட்டால் அதனை நிவர்த்தி செய்வதற்குப் பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் முதலானோரதும் சமய நிறுவனங்களதும் ஒத்துழைப்புக்களைப் பெறலாம்.

மேற்படி கொள்கைகளை நடைமுறைபடுத்துவதற்கும், ஆற்றல்மிக்கோரை உருவாக்குவதற்கும், சமயக் கல்வியையும் அதன் பாரம்பரியத்தையும் வளர்த்தெடுப்பதறக்குப் பொருத்தமான பின்னணியைப் பாடசாலைகளில் உருவாக்கத்தக்க வகையில், பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இசைவுபடுத்தப்படல் அவசியமாகும்.

சைவநெறிப் பாடத்தினூடாக, புதிய ஆக்கபூர்வமான சிந்தனையின் பால் வழிப்படுத்தப்படும் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பாடசாலை வேலைத்திட்டத்தை அமைத்துக் கொள்ளல் பொருத்தமுடையதாகும். இப்பாடத்திட்டத்தை பாடசாலையில் அமுலாக்கும்போது சைவசமய பாரம்பரியங்களைப் பின்பற்றும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கமைக்கலாம்.

- பாடசாலையில் தினசரிப் பிரார்த்தனைகள், வெள்ளிக்கிழமைப் பிரார்த்தனை என்பவற்றுக்கு ஏற்ற வசதிகள் அளித்தலும், மாணவர் அனைவரும் கலந்து கொள்ள வழிவகை செய்தலும்
- ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் நற்சிந்தனை கூற இடமளித்தல்
- வகுப்பறையில் சுவாமிப்படங்களை வைத்து வழிபட ஊக்குவித்தல்
- பாடசாலைக்கு அண்மையிலுள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபட வழிப்படுத்தல்
- சமய தீட்சை வழங்கல்
- குருபூசை, பாடசாலைச் சமய விழா,சமயப் பேச்சு, பண்ணிசை, நாடகப்போட்டி முதலானவற்றினை நடத்த ஒழுங்கு செய்தல்.
- சமய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க ஒழுங்கு செய்து கொடுத்தல்.
- மாணவரின் ஒத்துழைப்புடன் கூட்டாகச் செயற்படக் கூடிய சைவசமய மன்றங்களை அமைத்து நடத்தல்
- சமயம் தொடர்பான கல்விக் கண்காட்சிகளை வகுப்பறைகளிலும் பாடசாலைகளிலும் நடத்த ஒழுங்கு செய்தல்
- பாடவிடயம் தொடர்பான முக்கிய இடங்களுக்கு வெளிக்களச் சுற்றுலாக்களையும் திட்டமிட்டு, சரியாக நிறைவேற்றுதல்.
- ஒப்படைகள், செயற்றிட்டங்கள், புத்தாக்கம் போன்றவற்றில் ஈடுபட மாணவரை ஊக்குவித்தல்
- வெவ்வேறு தலைப்புக்களில் திட்டமிடப்பட்ட விவாதங்கள், உரையாடல்கள் போன்றவற்றை நடத்துதல்

- சமயக் கருத்தரங்குகள், சமய விழாக்கள் என்பவற்றில் பங்கு கொள்ள ஊக்குவித்தல் மாணவரின் பல்வேறு திறன்களும், மனப்பாங்குகளும் விருத்தியடையக் கூடிய வகையில் இவ்வாறான செயற்பாடுகளை வழங்கலாம்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்க அதிபர் தயங்கலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கைகள், வேலைத்திட்டங்ளிலிருந்து சற்று விலகி, பாடசாலைக்கெனச் சிறப்பான கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும். அதனை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காகப் பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காகத் தகைமை வாய்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியரை ஈடுபடுத்தலும் பயனுறுதிமிக்க நேரமுகாமையும் மிக அவசியம்.

ஓவ்வொரு சமய பாட ஆசிரியரும் தமது வகுப்பில் பயிலும் மாணவர்களைக் கீழ்வரும் நற்பழக்கவழக்கங்களை உடையவர்களாக ஆக்குதல் வேண்டும்.

- கடவுள் பக்தி
- தாய், தந்தை, குரு ஆகியோரைத் தினம் தினம் வணங்குதல்
- மூத்தோரிடம் மரியாதை
- ஒழுக்கம்
- தியாகமும், தொண்டும்
- சமய அறிவில் ஆர்வம்
- சைவ தர்ம நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல்

மாணவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் ஆக்குவதை ஆசிரியர்கள் இலட்சியமாகக் கொண்டு செயற்படல் வேண்டும். பாடசாலைகளில் இக்கலைத்திட்டத்தை மேற்குறிப்பிட்டவாறு நடைமுறைப்படுத்துவதனால் அடுத்த தசாப்தத்தில் எமது நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான தேர்ச்சிகளைக் கொண்ட புத்தாக்கம் புரிவோரையும் மனிதப் பண்புள்ளவர்களையும் குறைவின்றி உருவாக்கலாம்.

### 9.1.7 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினூடாக, மாணவர் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடைந்துள்ளனரா என்பதை அறிவதற்கு ஏற்ற இலகுவான வழிமுறைகளாக கணிப்பீடும் மதிப்பீடும் அமைந்துள்ளது.
மாணவரின் நடத்தைசார் பண்புகள், சமய வழிபாடுகளில் அவர்கள் கொண்டுள்ள அக்கறை, சமய, சமூக செயற்பாடுகளில் காட்டும் ஆர்வமும் ஈடுபாடும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் போது வெளிக்காட்டும் தன்மை, பங்கேற்கும் தன்மை என்பன கணிப்பீடு செய்யப்பட வேண்டும். இவற்றை முறை சார்ந்த வழிகளில் வகுப்பறைக்கு உள்ளேயும், வெளியேயும் கணிப்பீடு செய்ய முடியும்.

மதிப்பீட்டினைப் பல வழிகளில் மேற் கொள்ள முடியும். பாடம் தொடர்பான மதிப்பீடு பாட அலகின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது, வாய்மொழிப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை, செயற்றிட்டம் போன்ற செயற்பாடுகளினூடாக மேற் கொள்ள முடியும். தவிர, தவணை இறுதியில் ஒப்படை, செயற்றிட்டங்களை வழங்குதல் என்பவற்றினூடாகவும் மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியும்.

மேலும், திருமுறைகள் தோத்திரப்பாடல்கள் பாடும் போது, மாணவர் பிழையற மனனம் செய்து, உச்சரிப்புத் தெளிவு, பண், இசை என்பவற்றுடன் சரியான நிலையில் நின்று பாடுகிறார்களா என்பதையும் கணிப்பீடு செய்ய வேண்டும். அவ்வாறே, ஆலய வழிபாடு, அங்கு செய்யப்படும் அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்கார முறைகளையும் தெய்வங்களை வழிபடும் ஒழுங்கு முறைகளையும் அவதானிக்க வேண்டும். இவற்றுக்கு எற்ற மாதிரி மதிப்பீட்டுக் கருவிகைள முன்கூட்டியே தயாரித்துக் கொள்ள வேண்டும்.

| தவணை | தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாடவேளை | மொ.பா.வேளை |
|---|---|---|---|---|
| தவணை -1 | 1.0 | 1.1 | 02 | 16 |
| | | 1.2 | 04 | |
| | | 1.3 | 06 | |
| | 3.0 | 3.1 (1,2, ஆம் பாடல்) | 04 | |
| தவணை -2 | 1.0 | 1.4 | 02 | 24 |
| | | 1.5 | 04 | |
| | 2.0 | 2.1 | 03 | |
| | | 2.2 | 02 | |
| | 3.0 | 3.1(3,4,5,6 ஆம் பாடல்) | 05 | |
| | 4.0 | 4.1 | 02 | |
| | 5.0 | 5.1 | 04 | |
| | | 5.2 | 02 | |
| தவணை -3 | 3.0 | 3.1 (7,8,9ஆம் பாடல்) | 03 | 20 |
| | 6.0 | 6.1 | 03 | |
| | 7.0 | 7.1 | 04 | |
| | 8.0 | 8.1 | 03 | |
| | 9.0 | 9.1 | 06 | |
| | 10.0 | 10.1 | 01 | 60 |

# செயற்பாடுகள்

## கற்றல் கற்பித்தல் முறைகள் - விளக்கம்

| தொடர் இல. | தேர்ச்சி மட்டம் | செயற்பாட்டின் தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 01. | 1.1 | கடவுளின் பரத்துவத்தை உணர்ந்து இறைசிந்தனையில் ஈடுபடுவோம். | 30 |
| 02. | 1.2 | தமது அன்றாட வாழ்வில் பஞ்சாங்கத்தைப் பயன்படுத்தப் பழகுவோம் | 32 |
| 03. | 1.3 | நித்திய கருமவியலின் முக்கியத்துவத்தை அறிந்து வாழ்க்கையில் பின்பற்றுவோம். | 34 |
| 04. | 1.3 | அன்றாட வாழ்வில் விழுமியங்களைக் கடைப்பிடித்து வாழ்வோம். | 37 |
| 05 | 1.4 | எமது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய சடங்குகளை அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்போம். | 41 |
| 06. | 1.5 | விரதங்களை முறைப்படி அனுட்டிப்போம். | 45 |
| 07. | 1.5 | பண்டிகைகளை உரிய முறைப்படி கொண்டாடுவோம். | 50 |
| 08. | 2.1 | நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் வெளிப்படுத்தும் பக்தி அனுபவங்களை இனங்கண்டு போற்றுவோம். | 52 |
| 09. | 2.2 | மங்கையர்கரசியார் கதை மூலம் நாமும் இறைபக்தி உடையவர்களாக இறைபணி செய்து வாழ்வோம் | 55 |
| 10. | 3.1 | திருஞான சம்பந்த நாயனார் பாடியருளிய தேவாரங்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | 58 |
| 11. | 3.1 | திருநாவுக்கரச நாயனார் பாடியருளிய தேவாரங்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | 61 |
| 12. | 3.1 | சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய தேவாரங்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | 64 |
| 13. | 3.1 | மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகத்தினைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | 67 |
| 14. | 3.1 | திருவிசைப்பா பாடல்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | 70 |
| 15. | 3.1 | சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு பாடல்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | 72 |
| 16 | 3.1 | திருமூலர் பாடிய திருமந்திரப் பாடல்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | 74 |
| 17. | 3.1 | சேக்கிழார் சுவாமிகளின் பாடிய பெரிய புராணப் பாடல்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | 76 |
| 18. | 3.1 | அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் பாடல்களைப் பக்தியோடு பாடுவோம் | 78 |
| 19. | 4.1 | ஆன்மீக வளரச்சியில் தலயாத்திரை பற்றி அறிந்து கொள்வோம் | 80 |
| 20. | 5.1 | நாயன்மார்களின் வரலாறுகளுக்கூடாக நாற்பாதங்களை அறிந்து அவற்றை வாழ்வில் பின்பற்றுவோம் | 83 |
| 21. | 5.2 | சைவப் பெரியார் அருணாசலதேசிகர் பணிகளை முன்மாதிரியாகக் கொண்டு நாமும் சமயப் பணிகளில் ஈடுபடுவோம் | 87 |
| 22. | 6.1 | சைவ சித்தாந்தம் கூறும் பாசம் பற்றிய தத்துவக் கோட்பாட்டினை அறிந்து ஆன்ம விடுதலைக்கான செயற்பாடுகளில் ஈடுபடுவோம். | 90 |
| 23. | 7.1 | நாட்டார் வழிபாட்டில் பத்ததி (பத்தாசி) பற்றிய அடிப்படை விடயங்களை அறிந்து கொள்வோம் | 93 |
| 24 | 7.1 | நாட்டார் வழிபாட்டு முறைகளை அறிந்து அவற்றின் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாப்போம் | 96 |
| 25. | 8.1 | ஈழத்தில் சைவசமயத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்புக்களையும் அறிந்து கொள்வோம் | 100 |
| 26. | 9.1 | கண்டி கட்டுக்கலை விநாயகர் ஆலயம் பற்றிய வரலாற்றுச் சிறப்புக்களை அறிந்து கொள்வோம் | 104 |
| 27. | 9.1 | பொன்னம்பலவாணேச்சரம், காரைநகர் சிவன் ஆலயம் பற்றிய வரலாற்றுச் சிறப்புக்களை அறிந்து கொள்வோம் | 107 |
| 28. | 9.1 | மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம்,போரைதீவு பத்திரகாளியம்மன ஆலயம் பற்றிய வரலாற்றுச் சிறப்புக்களை அறிந்து கொள்வோம் | 110 |
| 29. | 9.1 | தாந்தாமலை முருகன் ஆலயம் பற்றிய வரலாற்றுச் சிறப்புக்களை அறிந்து கொள்வோம் | 113 |
| 30 | 9.1 | தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயம் பற்றிய வரலாற்றுச் சிறப்புக்களை அறிந்து கொள்வோம் | 116 |
| 31 | 9.1 | திமிலைதீவு மகாவிஷ்ணு ஆலயம் யாழ்ப்பாணம் பெருமாள் ஆலய வரலாற்றுச் சிறப்புக்களை அறிந்து கொள்வோம் | 119 |
| 32. | 10.1 | இலங்கையிலுள்ள சமயங்களின் வழக்காறுகளுக்கு மதிப்பளிப்போம். | 130 |

**தேர்ச்சி 1.0** : தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : கடவுளின் மேலான தன்மையையும் (பரத்துவம்) கருணைத் திறத்தையும் அறிந்து இறைசிந்தனையில் ஈடுபடுவார்.

**செயற்பாடு** : கடவுளின் மேலான தன்மையையும் (பரத்துவம்) கருணைத் திறத்தையும் கதைகளுடாக அறிந்து கொள்வோம்.

**நேரம்** : 2 பாடவேளைகள்.

**கற்றற் பேறுகள்** :

- இறைவனின் வியாபகத் தன்மை பற்றி அறிந்து கூறுவார்.
- கடவுள் தொடக்கமும் முடிவுமற்றவர் என்பதை விளக்குவார்
- புராணக் கதைகள் மூலம் இறைவனின் பரத்துவத்தை உணர்த்துவார்.
- புராணக் கதைகள் உணர்த்தும் உண்மைத் தத்துவத்தை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1.1.1:**
- கருவுற்றுப் பிறந்து இறந்துபோகும் மனிதர்களைக் கடவுள் என்று எண்ணி வணங்கி பிறவியை வீணடிக்காமல், முழுமுதற் கடவுளாகிய பிறப்பு இறப்பு அற்ற சிவபெருமானைத் தொழுங்கள் என்ற கருத்தை முன்வைத்து மாணவர்களிடம் கலந்துரையாடுங்கள்.
- உலகில் யார் பெரியவர்? என்னும் கருத்தை மையமாகக் கொண்டு எமது புராணத்தில் குறிப்பிடப்பட்ட கதையையும் அதனுடன் தொடர்பான விரதத்தையும் வினாவுங்கள் அதுபற்றி மாணவர்களிடம் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**படி 1.1.2:**
- மாணவரின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் உரிய செயற்பாட்டுப் பத்திரங்களையும் தர உள்ளீடுகளையும் பகிர்ந்தளியுங்கள்.
- குழுச் செயற்பாட்டின் போது உதவுங்கள்.

**படி 1.1.3:**
- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது அறிக்கைகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அவர்கள் தமது கருத்துக்களை முன்வைக்க நேரம் வழங்குங்கள்.
- செயற்பாடுகள் பற்றிய கருத்துக்களை கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4:**
- மாணவர் செயற்பாட்டின் பின் தொகுப்பு ஒன்றினை மேற்கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.
- அறிவு எல்லை மீறும்போது செருக்கு எற்படுகின்றது. எனவேதான் அறிவுக் கடவுளான பிரம்மாவும் செல்வத்தின் அதிபதியான திருமாலும் அகங்காரம், செருக்கு என்பவற்றால் உந்தப்பட்டு, தாமே பெரியவர் என்று போட்டியிட்டனர். அப்போட்டியால் அவர்கள் இருவராலும் இறைவனைக் காணமுடியாது போனது.
- இறைவனை அன்பினாலும் பக்தியினாலும் மட்டுமே அடையமுடியும் என்பதை உணர்த்துவதே அடிமுடிதேடிய கதையாகும்.
- இறைவனின் பரத்துவத்தையும் அவரே முழுமுதற்கடவுள் என்பதையும் இக்கதை உணர்த்தி நிற்கின்றது.

- பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் இடையில் ஏற்பட்ட வாதத்தை நிறுத்தும் பொருட்டும் தானே பிரம்மம் என்பதை ஆன்மாக்கள் அறிந்து உய்யும் பொருட்டும் பரமசிவன் திருவுளம் கொண்டு மாசி மாதத்து கிருஷ்ண பட்ச (தேய்பிறை) சதுர்த்தசித் திதியும் சோமவாரமும் திருவோண நட்சத்திரமும் கூடிய புண்ணிய தினத்தில் இரவு பதினான்கு நாளிகை அளவில் சோதி வடிவமாகத் தோன்றினார். அப்பொழுது உங்கள் வலிமையைக் காட்ட இச்சோதியின் அடிமுடிகளைக் காணுங்கள் என்று ஒரு அசரீரி கேட்டது. பிரம்மா அன்னப்பட்சி வடிவமாக முடியையும் விஷ்ணு பன்றி வடிவமாக அடியையும் காணச் சென்று எதையும் காணமுடியாமல் மீண்டும் அச்சோதியை வழிபட்ட கதை மூலம் அன்பினாலும் பக்தியினாலும் மட்டுமே அடையமுடியும் என்பதை உணர்த்துவதே அடிமுடிதேடிய கதையாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- குறித்த புராணக்கதை கொண்ட புத்தகம், பாடநூல்
- டிமை கடதாசி, பிளாட்டினம் பேனா, செயற்பாட்டுப் பத்திரம்.

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- இறைவன் எங்கும் நிறைந்தவர் என்பதை அடிமுடி தேடிய கதையை ஆதாரமாகக் கொண்டு விளக்குவார்.
- கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை வாழ்வின் எல்லாப் படிநிலைகளிலும் உறுதியாகக் கடைப்பிடிப்பார்.
- இறைசக்தி பரத்துவமானது, வியாபகமானது என்பதை ஏற்றுக் கொள்வதற்குரிய உதாரணங்களைக் குறிப்பிடுவார்.
- கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை உணர்ந்து வாழ்வில் கடவுள் நம்பிக்கையை வளர்த்துக் கொள்வார்.
- இறைவன் எங்கும் உள்ளார் என்பதை உணர்ந்து, அதனை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1 அடிமுடி தேடிய கதை மூலம் உணர்த்தப்படும் தத்துவக் கருத்துக்களை முன்வையுங்கள்.

குழு 2 உலகில் யார் பெரியவர் என்பதற்கு விடையளிக்கும் முகமாகக் காணப்படும் இக்கதை மூலம் நீங்கள் பெற்றுக் கொண்டபடிப்பினை பற்றி கருத்துரைக்குக.

குழு 3 கடவுள் உண்டா? எனக் கேட்கும் ஒருவருக்கு இக்கதை மூலம் நீங்கள் எடுத்துக்காட்டும் கருத்துக்களை முன்வையுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ................................................................................................................................
2. ................................................................................................................................
3. ................................................................................................................................

**பெற்றோருக்கானது:**

யாரும் யாரையும் விடவும் உயர்ந்தவருமில்லை தாழ்ந்தவரும் இல்லை என்ற கருத்தியலை பிள்ளைகளுக்கு உணரச் செய்து, உயிர்களிடத்தில் அன்பாய் இருக்கப் பழக்குங்கள் ஆணவ வலிமையை குறைக்கும் செயற்பாடுகளில் பங்குபற்றச் செய்யுங்கள்.

**தேர்ச்சி 1.0** : தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : தமது வாழ்வியலில் நாளாந்தச் செயற்பாட்டில் இறை சிந்தனையுடன் ஈடுபடுவார்.

**செயற்பாடு** : தமது அன்றாட வாழ்வில் பஞ்சாங்கத்தைப் பார்த்து கால, நேரங்களை அறிந்து ஒழுகப் பழகுவோம்.

**நேரம்** : 4 பாடவேளைகள்.

**கற்றற் பேறுகள்** :

- பஞ்சாங்கத்தின் அவசியத்தை எடுத்துரைப்பார்.
- பஞ்சாங்கங்கள் குறிப்பிடும் நாளாந்த செயற்பாடுகளைப் பட்டியற்படுத்துவார்.
- இறை சிந்தனைக்கும் பஞ்சாங்கம் பார்த்தலுக்குமான தொடர்புகளை முன்வைப்பார்.
- பஞ்சாங்கத்தின் முக்கிய விடயங்களை மற்றவர்களுக்கும் எடுத்துரைப்பார்.
- வாழ்வியலுக்கும் பஞ்சாங்கத்துக்குமான தொடர்புகளை எடுத்துரைப்பார்.
- பஞ்சாங்கமும் விஞ்ஞானமும் பற்றி அறிந்து கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1:**
- மாணவரிடம் சோதிடம் பார்க்கும் சந்தர்ப்பங்களைக் கேட்டறியுங்கள்.
- சைவமக்கள் தமது வாழ்வில் சுபகாரியங்கள் தங்கு தடையின்றி நிறைவேற்றிக் கொள்ள சுபநேரங்களைப் பார்த்துத் தொடங்குவார் என்பதையும் பாரம்பரியமான இந்த பழக்கமானது இன்று வரை பின்பற்றப்பட்டு வருகிறது என்பதையும் விளக்கிக் கூறுங்கள்.

**படி 1.1.2:**
- மாணவரின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் உரிய செயற்பாட்டுப் பத்திரங்களையும் தர உள்ளீடுகளையும் பகிர்ந்தளியுங்கள்.
- குழுச் செயற்பாட்டின் போது உதவுங்கள்.

**படி 1.1.3:**
- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது அறிக்கைகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அவர்கள் தமது கருத்துக்களை முன்வைக்க நேரம் வழங்குங்கள்.
- செயற்பாடுகள் பற்றிய கருத்துக்களைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்

**படி 1.1.4:**
- மாணவர் செயற்பாட்டின் பின் தொகுப்பு ஒன்றினை மேற்கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.
  - பஞ்சாங்கம் என்பது ஐந்து அங்கங்களைக் கொண்ட நூல் ஆகும்.
  - **அ. வாரம்.**
    வாரம் என்பது ஏழு நாட்கள். இவை ஞாயிறு தொடக்கம் சனி என சுழற்சி முறையில் மாறாது வந்து கொண்டிருக்கும்.
  - **ஆ. திதி**
    திதி என்பது சந்திரன் பூமியைக் கடக்க எடுக்கும் காலத்தைக் குறிக்கும். ஒவ்வொரு திதியும் 80 பாகை சமகோணத்தில் சந்திரனைக் கடக்கும். இவை பூர்வபக்க திதிகள் 15, அபரபக்க திதிகள் 15 ஆக மொத்தம் 30 திதிகளாகும்.

இ. **கரணம்.**

- ஒரு திதியின் முற்காலம், பிற்காலம் என திதி இரண்டாகப் பிரித்து கணிக்கப்படுகிறது. எனவே 30 திதிகளும் 60 கரணங்களைக் கொண்டமையும்.

ஈ. **நட்சத்திரம்.**

- இராசிச் சக்கரத்தில் ஒவ்வொரு நட்சத்திரமும் 13.33 அளவைக் கொண்டது. சந்திரன் பூமியைச் சுற்றி வரும் போது குறிப்பிட்ட நேரத்தில் நிற்கும் இடத்தைக் கொண்டு நட்சத்திரம் கணிக்கப்படுகிறது. இவை அச்சுவினி தொடக்கம் ரேவதி வரையாக 27 ஆகும்.
- விஞ்ஞானம் வளர்ச்சியடையாத காலத்தில் ஞானிகளின் சோதிட அறிவால் அமாவாசை, பௌர்ணமி, சந்திரகிரகணம், சூரியகிரகணம் என்பன துல்லியமாகக் கணித்துக் கூறப்பட்டதை அடிப்படைப் பஞ்சாங்கம் எனலாம்.
- இந்நாட்கள் சாதாரண நாட்களைப் போன்றவாறல்ல என்பதை உணர்ந்த மகான்கள் அந்நாட்களை சமயவாழ்வுடன் இணைத்து மக்கள் உன்னத வாழ்வு வாழ வழி அமைத்தனர்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- பஞ்சாங்கம்,
- டிமை கடதாசி, பிளாட்டினம் பேனா,
- செயற்பாட்டுப் பத்திரம்.

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- பஞ்சாங்கம் பற்றிய விளக்கத்தைப் பெறுவார்.
- பஞ்சாங்கம் பற்றி எடுத்துக் கூறுவார்.
- பஞ்சாங்கத்தின் அங்கங்களை விளக்குவார்.
- பஞ்சாங்கம் எவ்வாறு வாழ்க்கைக்கு உதவுகிறது என்பதை எடுத்துரைப்பார்.
- பஞ்சாங்கத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் இடையிலான தொடர்பினை முன்வைப்பார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1 • பஞ்சாங்கம் கொண்டுள்ள அங்கங்கள் எவையெனக் கூறி விளக்குக.

குழு 2 • தனி மனித வாழ்வில் பஞ்சாங்கம் செல்வாக்குச் செலுத்தும் சந்தர்ப்பங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

குழு 3 • பஞ்சாங்கத்தின் ஒரு அங்கமான திதி என்பது எவ்வாறு பிதிர்களுடன் தொடர்பு படுத்தப்படுகிறது என்பதை விளக்குக. புண்ணிய காலம் என்பது யாது?

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

பஞ்சாங்கம் என்பது விஞ்ஞானரீதியாக ஆராயப்பட்ட ஒன்று அதன் கருத்துக்கள் வாழ்நாளில் மிகவும் பயனுடையது என்னும் கருத்தியலை பிள்ளைகளுக்கு உணரச் செய்து அவற்றைக் கடைப்பிடிக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0** : தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : சைவசமய ஒழுகலாறுகளையும், வழக்காறுகளையும் பின்பற்றும் முறையினை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு** : நித்திய கருமவியலின் முக்கியத்துவத்தை அறிந்து வாழ்க்கையில் பின்பற்றுவோம்.

**நேரம்** : 04 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- நித்திய கருமங்களில் செய்ய வேண்டிய அறச்செயல்கள் பற்றிக் கூறுவார்.
- சமூகநலன் கருதிய செயற்பாடுகளின் பயன்கள் பற்றி விளக்குவார்.
- சமூக நலன் கருதி சைவசமயப் பெரியார்கள் மேற்கொண்ட அறச்செயல்களைத் தொகுப்பார்.
- அறச்செயல்கள் இம்மையில் இன்பத்தையும் மறுமையில் புண்ணியத்தையும் சேர்க்கும் என்பதை ஏனையோருக்கு எடுத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1** :
- மாணவர்கள் அறிந்த நித்திய கருமங்களைக் கூற இடமளியுங்கள்.
- நித்திய கருமங்களில் தனிமனித வாழ்க்கைக்கு உரியனவற்றையும், சமூக நலன்கள் பற்றியனவற்றையும் வேறுபடுத்திக் கலந்துரையாடுங்கள்.
- அறச்செயல்களின் முக்கியத்துவம், பயன் என்பவற்றைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**படி 1.1.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களைப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தர உள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3** :
- குழுச் செயற்பாட்டின் போது மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4** :

- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- இறை வழிபாடானது தெய்வீகப் பண்புகளை எமக்குள் வளர்க்க உதவும்.
- கடவுள் வழிபாட்டிற்கு மனத்தூய்மை மிகவும் அவசியமானது.
- பொறாமை, ஆசை, கோபம், செருக்கு, பகைமை உணர்வு என்பன எம்மை விட்டு அகன்று விடும்.
- இதனால் நாம் எமது அன்றாட வாழ்வில் பிறருக்கு நன்மை செய்பவர்களாக, கடமையுணர்வு மிக்கவர்களாக, மனமகிழ்வுடன் வாழ்வோராக மனம், மொழி, மெய் தூயோராக வாழும் சிறப்புக்களைப் பெறலாம்.
- வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகளில் இறைவழிபாடு முக்கியம் பெறுகிறது என்பதை எடுத்துக் காட்டி விளக்குங்கள்.
- இவ்வுலகில் எம்மை வாழ்வாங்கு வாழ வழிகாட்டி உயர்த்தி இவ்வுலகை விட்டு மறைந்த எமது மூதாதையர்களை நாம் பிதிர்கள் எனக் குறிப்பிடுகின்றோம்.
- அவர்களுக்காக வருட சிராா்த்தம் செய்வது எமது கடமை ஆகும்.
- இறந்தோரின் பிள்ளைகள் சிராா்த்த தினத்திலே பின்வரும் புண்ணிய காரியங்களில் ஈடுபட வேண்டும்.
  - சிவனடியார்களுக்கு அன்னம், ஆடை முதலியவற்றை வழங்குதல்.
  - திருக்கோயிலில் இறைவனுக்கு அபிடேகம் செய்தல். பூசை செய்தல், திருவிளக்கேற்றல்.
  - ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குதல்.
  - பிதிர்கள் நற்கதியும், திருப்தியும் அடைவதற்காக எள்ளும், தண்ணீரும் இறைத்தல்.
- மகாளயம் என்பது எமது பிதிர்கள் பூவுலகில் வந்து 16 தினங்கள் எம்முடன் இருக்கின்றனர் என்பதைக் குறிப்பதாகும்.
- புரட்டாதி மாத அபரபட்சத்துப் பிரதமை முதல் அமாவாசை வரையான காலமே மகாளய பட்ச தினமாகும்.
- பிதிர்கள் தமது பாவ வினைகளை எண்ணியவாறு பசியாலும் தாகத்தாலும் தமது பிள்ளைகள் முதலியோரின் இல்லம் நாடிவந்து, தமக்கு நெய், தேன், பாயாசம், எள், நீர் என்பன கிடைக்காதா? என ஏங்குவார்கள் என்பது ஐதீகம்.
- எனவே இக்காலத்தில் விரதமிருந்து சிராா்த்தம் செய்வது உத்தமம். எம்மால் செய்யப்படும் புண்ணிய காரியங்களால் பிதிர்களின் ஆன்மா ஈடேறும்.
- விருந்தோம்புதல் என்னும் அறவாழ்க்கைப் பண்பு பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என வள்ளுவரால் சிறப்பிக்கப்படுகிறது. (உதாரணம்- இளையான் குடிமாற நாயனார் வரலாறும் அப்பூதியடிகள் வரலாறும்)
- பின்னாளில் சைவப் பெரியார்கள் பலரும் பசிப்பிணி நீக்கி உயிரையும், உடலையும் பேணும் மகத்துவமான சமூகப் பணிகளைச் செய்தனர். (உ-ம்) சுவாமி விவேகானந்தர் அமைத்த இராமகிருஷ்ண மடங்கள்.
- ஆறுமுக நாவலர் 1876ஆம் ஆண்டுகளில் செய்த கஞ்சித் தொட்டித் தருமம்.

- இந்துபோட் இராஜரத்தினம் அவர்களின் ஆதரவற்றோர், ஏழைகளுக்கான பணிகள்.
- உயிரின் உறைவிடம் உடலாக இருப்பதால் இரண்டும் ஒன்று இன்றி மற்றொன்று நிலைபெற முடியாதவை என்னும் பேருண்மையை சைவசமயம் ஏற்பதால் அவற்றை பேணுவதன் அவசியத்தை அறங்களின் மூலமாகப் போதிக்கின்றன.
- சத்தியமும், ஜீவகாருண்யமும் சைவசமயி ஒருவனின் இரு கண்களாகும். இவை கொல்லா அறத்திற்கு அடிப்படையாகும்.
- அறச்செயல்கள் தனிமனித வாழ்விற்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழிவகுக்கும் சாதனங்களாகும்.
- நாம் அறச் செயல்களைச் செய்வதால் இப் பிறவியில் இன்பத்தையும், மறுபிறப்பில் புண்ணியங்களையும் அனுபவிக்கலாம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் : -**

- நித்திய கருமவியல் எனும் நூல்
- மனித அறங்கள் பற்றிய கதை நூல்கள்
- உயிர் உடம்பு பற்றிய விளக்கப் படங்கள்,கதைகள், பாடல்கள்

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- நித்திய கருமங்கள் எவையெனக் கூறுவார்.
- நித்திய கருமங்களில் சமூக நலன் கருதிய கருமங்கள் எவையென வேறுபடுத்திக் காட்டுவார்.
- வாழ்வில் அறச்செயல்கள் பெறும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பார்.
- அறச் செயல்களுக்கும், சமய வாழ்விற்கும் இடையிலான தொடர்பை அறிந்து தமது வாழ்வில் அவற்றைக் கடைப்பிடிப்பார்.

## மாதிரி செயற்பாட்டுப் பத்திரம் இணைப்பு 1.1.1

குழு 1 – இறைவழிபாட்டால் எம்மிடம் வளரக் கூடிய அறப்பண்புகள் யாவை?

குழு 2 – நீங்கள் உங்களது பிதிர்களின் ஞாபகார்த்தமாக மேற்கொள்ளும் விரதம் ஒன்றைக் குறிப்பிட்டு அதனை எவ்வாறு கடைப்பிடிக்கின்றீர்கள் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

குழு 3 – சைவசமயப் பெரியார்கள் செய்த சமூக நலப் பணிகளை அட்டவணைப்படுத்துக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..............................................................................................................................
2. ..............................................................................................................................
3. ..............................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீடுகளில் முறையாக நித்திய கருமங்களை ஆற்றுங்கள் அதன் போது பிள்ளைகளையும் இணைத்துக் கொள்ளுங்கள்.
- இறைவழிபாட்டின் போதும், பிதிர்வழிபாட்டின் போதும் இடம்பெறும் அறச் செயல்களைப் பற்றி விளக்கிக் கூறுங்கள்.
- அறச்செயல்களின் இன்றியமையாமையும், மேன்மையையும் கதைகளுக்கூடாக விளக்குங்கள்.

**தேர்ச்சி 1.0** : தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : சைவசமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் பின்பற்றும் முறையினை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு** : அன்றாட வாழ்வில் விழுமியங்களைக் கடைப்பிடித்து வாழ்வோம்.

**நேரம்** : 04 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- சமூக விழுமியப் பண்புகளை வரையறுப்பார்.
- விழுமியப்பண்புகளைக் கடைப்பிடிப்பதன் நன்மைகளைத் தொகுத்துக் கூறுவார்.
- விழுமியப் பண்புகள் சமூகத்திற்கும் தமக்கும் எத்தகைய உயர்வைத் தரும் என்பதை மதிப்பிடுவார்.
- சைவசமயப் பெரியார்கள் கடைப்பிடித்த விழுமியப் பண்புகளையும் அதனால் அவர்கள் பெற்ற நன்மைகளையும் விரித்துரைப்பார்.
- கலைகளை இரசித்தல் மற்றும் கலையாக்கத் திறன்களையும் வெளிப்படுத்துவார்.
- ஏனைய சமூகங்களுக்கிடையிலான சமூக நல்லிணக்கத்தில் ஈடுபடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1.1.1** :
- விழுமியப் பண்புகள் சிலவற்றை மாணவர்கள் கூற இடமளியுங்கள்.
- விழுமியப் பண்புகள் கடைப்பிடிக்கப்படுவதன் முக்கியத்துவம், அதனால் நாம் அடையும் பயன்கள் என்பவற்றை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- சமூக நல்லிணக்கத்திற்கு எவ்வாறு விழுமியங்கள் உதவுகின்றன என்பதை எடுத்துக் காட்டுக்கள் மூலம் விளங்குங்கள்.

**படி 1.1.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களைப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3** :
- குழுச்செயற்பாட்டின் போது மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள். செயற்பாட்டுப் பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4 :**

- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

**இல்லற ஒழுக்கம்**

- இல்லறமல்லது நல்லறமன்று என்றார் ஔவையார்.
- மனிதனின் பிறப்பு முதல் அவன் பல்வேறு அனுபவங்களையும், ஆற்றல்களையும், ஆளுமையையும் வளர்த்தெடுக்கும் நிலைக்களமாக இல்லம் திகழ்கிறது.
- கணவனும், மனைவியுமாக இணைகின்ற ஆணும் பெண்ணும் தமக்குள்ளும் பின்னர் தமது பிள்ளைகளோடும் மிகுந்த அன்போடும், விட்டுக் கொடுப்புடனும் ஒற்றுமையாகக் கூடி வாழ்வார்.
- கலையழகும், புனிதமும், பண்பும் நிறைந்த இடமாகவும் பிள்ளைகளுக்கு நற்பழக்கவழங்கங்களை பயில்வதற்கான களமாகவும் இந்து இல்லம் விளங்கும்.
- மனப்பக்குவமும், இறையுணர்வும் பெருகும் இல்லறநிலையானது துறவறத்திற்கு துணை செய்யும் சாதனமாகும். இந்நிலையில் உயர்வெய்திய பல ஞானியரை நாம் பெரியபுராணத்தில் காணலாம். உ-ம் இளையான் குடிமாற நாயனார், அப்பூதியடிகள், மெய்ப்பொருள் நாயனார்.

**சகிப்புத்தன்மை**

- ஆணவமற்ற அமைதியான உள்ளமே இறைவன் விரும்பி உறைகின்ற இடமாகும். தூய்மையும் பொறுமையும் உள்ள அன்பு நிறைந்த மனிதனிடம் சகிப்புத்தன்மையும் இயல்பாக அமைந்து விடுகிறது..
- சகிப்புத்தன்மையுடன் வாழும் மனிதர்களை சமூகம் மதித்துப் போற்றுகிறது. அவர்கள் வாழ்விலும் பல வெற்றிகளை அடைந்தவர்களாகவும், சமூக நல்லிணக்கத்துடன் வாழ்வோராகவும், திகழ்கின்றனர். இவ்விழுமியப் பண்பினை சிறுவயது முதலே கடைப்பிடித்து வாழ்வில் உயர வேண்டும்.

**கூட்டுப்பொறுப்பு**

- சைவசமய பாரம்பரிய கல்வி முறையான குருகுலக் கல்வி முறையில் கூட்டுப் பொறுப்பு என்னும் சீரிய விழுமியப் பண்பு வளர்க்கப்பட்டதைக் காணலாம். கல்வி பெறும் நோக்குடன் குருவின் இல்லத்தில் வாழும் சீடர்கள் அறிவுடன் நடைமுறை வாழ்வியல் உண்மைகளையும் அனுபவங்களுக்கு ஊடாகக் கற்றனர். அவ்வாறு வாழும் போது கூட்டுப் பொறுப்பு என்பது இயல்பாகவே சீடர்களிடம் வளர்வதற்கு குரு துணையானார். கூட்டுப்பொறுப்பு கடமையுணர்வும், செயலாற்றலும் வளரச் செய்யும் ஒரு சிறந்த பண்பாகும்.

**கலை ஆக்கத்திறனும் ரசனையும்**

- சைவசமயமானது கலை ஆக்கத்திறனுக்கும் இரசனைக்கும் முக்கிய இடம் வகிக்கிறது. கோயில்களின் அமைப்பு, வழிபாடுகள், திருவுருவங்கள் என்ற அனைத்துடனும் கலை ஆக்கத்திறனானது பின்னிப்பிணைந்துள்ளமையை நாம் காணலாம். கலையாக்கத்திற்கு அடிப்படையாக அமைவது இரசனை ஆகும். மனித மனங்களில் எழும் மிருகங்களை ஒத்த தீயகுணங்களை நீக்கி, மனிதப் பண்புகளையும், தெய்வீகப் பண்புகளையும் வளர்க்க உதவுவன இவையாகும். எனவே தான் நாம் கோயிலுக்குச் சென்று வழிபடும் போது மன அமைதியும், மனநிறைவும் ஆனந்தமும் அடைகிறோம்.
- கலைகளானவை மனித மனதைச் செம்மைப்படுத்தி ஒழுங்கும் படுத்தும் கருவியாக உள்ளத்துடன் புத்துயிர்ப்பையும், புத்தாக்கச் சிந்தனையையும் வளர்க்கக் கூடிய ஆற்றல் மிக்கவை.

**சமூக நல்லிணக்கம்**

- அனைத்து சமயங்களையும் மதித்து வாழும் தன்மையை சைவசமயம் வலியுறுத்துகிறது. இன்றும் நம் மத்தியில் அவரவர் ஊர்களில் அமைந்திருக்கும் ஆலயங்களின் மகோற்சவ திருவிழாவிற்குச் செல்வதும், செல்ல முடியாதோர் விரதம் அனுட்டிக்கும் நடைமுறையும் உள்ளது.
- சமய சமூக விழாக்கள் யாவும் சமூக நல்லிணக்கத்திற்கு வித்திடும் விழுமியப் பண்புகள் பலவற்றின் அடிநாதமாய் விளங்குவது தெளிவு. ஊரோடும், உலகோடும், உறவுகளோடும் மனிதன் இணங்கி வாழ சமூக நல்லிணக்கம் அவசியமாகும்.
- பல்லின, பலமத மக்கள் சேர்ந்து வாழும் எமது நாட்டிற்கு இது மிகவும் அவசியமான ஒரு விழுமியமாக உள்ளது. எனவே சிறுவயது முதலே ஏனையோரின் கருத்துக்கள், அனுட்டான முறைகள், பழக்கவழக்கங்கள், பண்டிகைகள் என்பவற்றை மதித்து வாழப் பழகுதல் வேண்டும்.
- அனர்த்தங்கள் ஏற்படும் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன, மத பேதமின்றி உதவுவதன்மூலம் சமூக நல்லிணக்கததை ஏற்படுத்த முடியும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- விழுமியங்கள் சார்ந்த கதைநூல்கள்
- வீடியோ காட்சிகள்
- விளக்கப்படங்கள், டிமை கடதாசி, பேனா.

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- விழுமியப் பண்புகள் எமது வாழ்வை மேம்படுத்தும் என்பதை விளக்குவார்.
- சகிப்புத்தன்மை, கூட்டுப்பொறுப்பு என்பவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து பின்பற்றுவார்.
- விழுமியப் பண்புகளைக் கடைப்பிடிப்பதால் அடையக்கூடிய உயர்வுகளைக் கூறுவார்.
- கலையாக்கத்திறனும், இரசனையும் மனித வாழ்வையும் மனதையும், மகிழ்வுடன் உயிரோட்டமாகத் திகழச் செய்பவை என்பதை அறிந்து அவற்றைப் போற்றுவார்.
- நாட்டிலுள்ள அனைவருடனும் இன,மத, மொழி பேதமின்றி வாழப்பழகுவார்

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1 சைவ இல்லம் ஒன்று எவ்வாறு கலையழகுடன் திகழ வேண்டும் என்பதற்கு மூன்று உதாரணங்கள் தந்து விளக்குக.

குழு 2 சகிப்புத்தன்மை, கூட்டுப்பொறுப்பு என்பவற்றை பின்பற்றுவதன் மூலம் நீங்கள் அடைந்த பயன்கள் நான்கினை எழுதுக

குழு 3 சமூக நல்லிணக்கத்தின் அவசியம், முக்கியத்துவம் பற்றிய பேச்சு ஒன்றினை உமது குழுவினரின் உதவியுடன் நிகழ்த்திக் காட்டுக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

இல்லத்தில் ஒழுங்கு, தூய்மை, அழகு என்பன அமைவதற்கான பழக்க வழக்கங்களை பிள்ளைகளுக்குப் பழக்குங்கள். சமூக இணக்கப்பாடு அல்லது சமூக நல்லிணக்கத்திற்கான ஆரம்பகட்ட செயற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்துங்கள் உ-ம் இலங்கையில் உள்ள சமயங்களை அறிந்து அவற்றின் கருத்துக்களை ஏற்று மதிப்பளிக்கச் செய்யுங்கள்.

**தேர்ச்சி 1.0** : தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : வாழ்வியல் மேம்பாட்டிற்காகச் சடங்குகளை அறிந்து அவற்றை முறைப்படி கடைப்பிடிக்கும் முறையை இனங்காட்டுவார்.

**செயற்பாடு** : எமது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய சடங்குகளை அறிந்து அவற்றை கடைப்பிடிப்போம்.

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- பூப்புனித நீராட்டு விழாவின் போது இடம்பெறும் கிரியைகளை அறிவார்.
- பூப்புனித நீராட்டு விழாக் கிரியைகளின் முக்கியத்துவத்தைக் குறித்து விபரிப்பார்.
- பூப்புனித நீராட்டு விழாவின் போது செய்யப்படும் சடங்குகளின் பொருளைக் கேட்டறிந்து கொள்வார்.
- பூப்புனித நீராட்டு விழா தொடர்பான விஞ்ஞான ரீதியான கருத்துக்களையும் டிேப்பெறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1.1.1:**

- மாணவர்களுக்குத் தெரிந்த பூர்வக் கிரியைகள் பற்றிக் கேட்டறிந்து கொள்ளுங்கள்.
- வீட்டில் விசேடமாகப் பெண்களுக்காக செய்யப்படும் கிரியைகள் பற்றி கேட்டறியுங்கள்.
- பூப்புனித நீராட்டு விழா பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- பூப்புனித நீராட்டு விழாவின் முக்கியத்துவத்தினையும் அச்சடங்கு முறைகளையும் கலந்துரையாடுங்கள்.

**படி 1.1.2:**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**

- குழுச்செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4:**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- பூப்புனித நீராட்டு விழா என்பது பூப்படைந்த பெண்ணை புனிதமாக்குவது அல்லது சிறுமி பருவமாற்றம் பெற்று பக்குவப்படும் போது நடாத்தப்படும் ஒரு சமயச்சடங்காகும்.
- இச்சடங்கு செய்வதன் மூலம் அப்பெண்ணிற்கு ஆசௌசம், கண்ணூறு, தோஷநிவர்த்தி, மாங்கல்ய பாக்கியம், சந்தான விருத்தி என்பன கிடைக்கும் என்பது இந்துக்களின் ஐதீகம்.
- இச்சடங்கு இடத்துக்கிடம், வாழ்நிலை என்பவற்றுக்கு ஏற்ப சில முறைகள் மாறுபடலாம்.
- பெண் பூப்படைந்தவுடனே கிணற்றடியில் தாய்மாமன் தேங்காய் உடைக்க மாமி தண்ணீர் ஊற்றி நீராட்டுவார்கள்.
- பின் புதிய ஆடை அணிந்து தாய்மாமனிடம் ஆசீர்வாதம் பெற்ற பின்னர் பெண்ணை ஒரு தனியறையில் விடுவர்.
- அவ்வறையில் பெண்ணுக்கு காவலாக வேப்பிலை, உலக்கை மற்றும் காம்புச்சத்தகம் என்பவற்றை இருப்பிடத்தின் அருகில் வைப்பார்கள்.
- இச் சடங்குகளில் முக்கிய அந்தஸ்து தாய்மாமனுக்கே உண்டு. வீட்டில் உள்ள அனைவருக்கும் ஆசௌசம் (துடக்கு) ஏற்படுகின்றது. அதனை நிவர்த்தி செய்வதற்கு ஒரு குருவை அழைத்து புண்ணிய வாசம் செய்வார்கள்.
    - சடங்கு செய்தல்
    - சுபநாள் ஒன்றைத் தெரிவு செய்து தத்தமது வசதிக்கேற்பக் கொண்டாடுவார்கள்.
    - பெண்ணின் கைகளில் வெற்றிலை, பாக்கு, சில்லறைக்காசு என்பன கொடுத்து வெள்ளைத்துணியால் முகத்திரை இட்டு மாமியார் மூலம் பாலறுகு வைக்கும் இடத்திற்கு அழைத்து வரப்படுவர்.
    - அவ்விடத்தில் நிறைகுடம், குத்துவிளக்கு, பால், அறுகம்புல், பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய் ஆகிய அனைத்து மங்கலப் பொருட்களும் காணப்படும்.
    - பெண்ணின் முகத்திரையை விலக்கி பிள்ளையாருக்கு கற்பூரத்தீபம் காட்டி அனைத்து காரியங்களும் இனிதே நடைபெற வேண்டும் என வேண்டிக்கொள்வர்.
    - முதலில் மாமியார் பால், அறுகு பெண்ணின் தலையில் வைத்து ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து ஏனையோரும் ஆசீர்வதிப்பர்.
    - பின் பெண்ணை நீராட்டும் இடத்திற்கு அழைத்து சென்று வடக்கு கிழக்கு முகமாக இருத்தி மஞ்சள் பூசி நீராட்டுவார்கள்.
    - அதன் பின் பெண் அலங்காரம் செய்த பின் தாய்மாமனிடம் கும்பம் (நிறைகுடம்) கொடுப்பார்.
    - ஆராத்தி இடம்பெறும்.

- நிறைநாழி ஆரார்த்தி எடுக்கப்படும்.
- முதலில் பெண்ணுக்கு கண்ணூறு கழிக்குமுகமாக வேப்பிலை சுற்றி தடவி பால் ரொட்டியை உடைத்து 4 பக்கமும் எறிந்து வேப்பிலையை மென்று துப்பச் செய்வார்கள்.
- பின் வாழைப்பழதிரி ஆராத்தி எடுப்பார்கள்.
- பெற்றோர் பெண்ணிற்கு ஆண்டாள்மாலை அணிவார்கள். (பெண்ணை பாவையாக கருதுவதால் ஆண்டாள் மாலை அணியப்படுகிறது)
- உணவுப்பொருட்கள் கொண்டு ஆரார்த்தி எடுப்பர்.
- ஆரார்த்தி அனைத்தும் முடிவடைந்ததும் பெண்ணின் முன்னிருக்கும் நிறைகுடத்தை தாய்மாமனும் குத்துவிளக்கை மாமியாரும் எடுத்துக்கொண்டு பெண்ணையும் பூசை அறைக்கு அழைத்து செல்வர்.
- அங்கு பெண்ணின் கையிலிருக்கும் கும்பத்தை மாமனார் வாங்கி பூஜை அறையில் வைப்பர்.
- பின் பெண் பெற்றோரிடமும் மாமன் மாமியாரிடமும் ஆசீர்வாதம் பெறுவாள்.

- **ஆரார்த்தி எடுக்கும் முறை**
  - கண்ணூறு கழிக்கும் போது - சுமங்கலிப் பெண்கள் எதிரெதிரே நின்று மூன்று முறை வலதுபக்கமாக உயர்த்தி எடுத்து பின் தலைக்கு மேல் மணிக்கூடு சுற்றும் திசையின் மூன்றுமுறை சுற்றி அதைப் பின்னுக்குக் கொடுப்பார்கள்.
  - உணவுப் பொருட்கள் கொண்டு ஆரார்த்தி எடுக்கும் போது மூன்றுமுறைமேலும் கீழுமாக சுற்றி பின் பெண்ணின் தலைக்கு மேல் மூன்றுமுறை சுற்றி பின்னால் நிற்பவரிடம் கொடுப்பார்கள். பின் இவ்வுணவுகளை சலவைதொழிலாளியிடம் அல்லது ஆற்றில் அல்லது கடலில் சேர்த்து விடப்படும்.
  - நிறைநாழியும் பன்னீர் தட்டமும் ஆரார்த்தியின் பின் முன்வைக்கப்படும்.
  - பூத்தட்டால் ஆரார்த்தி எடுத்த பின் பூவை பெண் மேல் தூவி விடுவார்கள்.

- **ஆரார்த்திப் பொருட்கள்**
  - நிறைநாழி - கொத்தில் நெல்லை நிரப்பி அதன் நடுவே காம்புச் சத்தகத்தை குத்தி நுனிகாம்பில் ஒரு வெற்றிலை செருகி வைப்பார்கள்.
  - பிட்டு,களி, பால்சாதம், சோறுகறி, தேங்காய்த் தட்டம்-3

**தரவிருத்தி உள்ளீடுகள் : -**

- சடங்கு பற்றிய விளக்கப்படங்கள், வீடியோக்கள்
- செயற்பாட்டுப் பத்திரம்

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய சடங்குகள் எவையென கூறுவார்.
- பூப்புனித நீராட்டு விழாவின் முக்கியத்துவத்தினை குறிப்பிடுவார்.
- இச் சடங்கினை செய்வதால் பெண்ணிற்கு கிடைக்கும் நன்மைகளை உணர்ந்து அதனை கடைப்பிடிப்பார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1 • பூப்புனித நீராட்டு விழா பற்றிக் குறிப்பிட்டு அதனை விளக்குக

குழு 2 • பூப்புனித நீராட்டு விழாவின் சடங்குமுறைகளை விவரிக்குக

குழு 3 • ஆரார்த்தி எடுக்கும் முறைகளை எடுத்துரைப்பர்

குழு 4 • ஆரார்த்தியின் போது உபயோகிக்கும் பொருட்களைக் குறிப்பிடுக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ................................................................................................................................
2. ................................................................................................................................
3. ................................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- பூப்புனித நீராட்டு விழாவின் முக்கியத்துவத்தினை உணர்ந்து வசதிக்கேற்ப அதனை கடைப்பிடியுங்கள்.

**தேர்ச்சி 1.0** : தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 1.5** : வாழ்வின் மேம்பாட்டில் விரதங்கள், பண்டிகைகள் வகிக்கும் முக்கியத்துவத்தை விளங்கி அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவார்.

**செயற்பாடு** : விரதங்களை முறைப்படி அனுட்டிப்போம்.

**நேரம்** : 03 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- விரதங்களின் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றினை அனுட்டிப்பார்.
- கடவுளுக்குரிய விரதங்களையும் பிதிர்களுக்குரிய விரதங்களையும் அறிவார்.
- விரதங்களை அனுட்டிக்கும் போது விரத நியதிகளைக் கடைப்பிடிப்பார்.
- ஆன்மீக மேம்பாட்டிற்கு விரதம் உதவுகின்றது என்பதை உணர்த்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1.1.1:**

- மாணவர்கள் அறிந்த விரதங்கள் பற்றிக் கேட்டறிதல்.
- வீட்டில் அனுட்டிக்கப்படும் விரதங்களைக் கூற இடமளித்தல்.
- விரதங்களின் மூலம் எமக்குக் கிடைக்கும் நன்மைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கடவுளுக்குரிய, பிதிர்களுக்குரிய விரதங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**படி 1.1.2:**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தர உள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**

- குழுச்செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4 :**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- விரதங்கள் என்பதற்கு ஆறுமுகநாவலர் "விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு விதிப்படி வழிபடல்" ஆகும் என வரைவிலக்கணம் கூறியுள்ளார்.
- விரதங்களினை அனுட்டிப்பதால்
  - மனிதனை ஆட்சி செய்யும் மூன்று குணங்கள்

    தாமத குணம் - சோம்பலும் சோர்வும் மிக்கது.

    இராட்சத குணம் - கோபமும் தாபமும் மிகுந்தது.

    சத்துவ குணம் - சாந்தமும் அமைதியும் நிறைந்தது. இவற்றுள் சிறந்ததான சத்துவ குணம் மேலோங்குவதற்கு விரதங்கள் உதவுகின்றன.
- மனிதன் தொழிற்படுவதற்கு உதவுகின்ற திரிகரணங்களாகிய மனம், மொழி, மெய் என்பவற்றின் தொழிற்பாடுகள் புனிதத்தன்மையுடன் சிறந்து விளங்குவதற்கு விரதங்கள் உதவுகின்றன.(திரிகரண சுத்தி)
- விரதங்களின் மூலம் இறைவன் எம்மனதில் உறைவான் என்பதை அப்பர் சுவாமிகளின் **தூண்டு சுடரனைய சோதி கண்டாய்** என்ற பாடலில் வரும்

  ".....மெய்ந்நெறி கண்டாய் விரதமெல்லாம்
  மாண்டமனத்தார் மனத்தான் கண்டாய்..... "

  என்ற பாடலடியின் மூலம் உணரலாம். அதாவது பல விரதங்களால் மாட்சிமையடைந்த அடியார்களின் மனதில் உறைபவன் என்பதாகும்.
- **ஆடிப்பூரம்**

  ஆடிமாதத்தில் வரும் பூர நட்சத்திரத்தன்று அனுட்டிப்பதாகும். ஆடிப்பூரம் அம்பிகை பூப்பெய்திய தினம் ஆகும்.
- **ஆவணிச்சதுர்த்தி**
  - ஆவணி மாதத்தில் வரும் சுக்லபட்ச சதுர்த்தி தினத்தன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.
  - விநாயகர் அவதரித்த தினம் விநாயகருக்குரிய விரதமாகும்.
  - இந்நாளில் இளம்பிறைச் சந்திரனைப் பார்த்தலாகாது.
  - இந்நாட்களில் விநாயகருக்கு அறுகம்புல்லால் அர்ச்சித்து வழிபடுதல் சிறந்ததொன்றாகும்.
  - இவ்விரதத்துடன் கஜமுகாசுரனை அழித்த கதை தொடர்புபடுகின்றது.
  - கஜமுகாசுரன் ஓர் அசுரன். அவன் இறைவனிடம் மனிதர், விலங்குகள், ஆயுதங்கள் எவற்றாலும் தான் கொல்லப்படாதவாறு ஒரு வரம் பெற்றிருந்தான். அவ்வரத்தின் காரணமாக அவன் தேவர்களுக்குக் கொடுமை செய்தான். தேவர்கள் சிவபெருமானிடம் தம்மைக் காப்பாற்றும்படி முறையிட்ட போது சிவன் விநாயகரைத் தோற்றுவித்தார். அவ்வாறு தோற்றுவித்த தினமே ஆவணிச் சதுர்த்தி ஆகும்.

- **வழிபடும் முறை**
  - அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து உள்ளத்தையும், உடலையும் சுத்தம் செய்து, பின்பு விநாயகரை மனம் உருகி வழிபட்டு முறைப்படி நெய், சர்க்கரை, எள் சேர்த்துச் செய்த கொழுக்கட்டைகளை நிவேதனம் செய்ய வேண்டும்.
  - விநாயகரை இருபத்தொரு பத்திரம், இருபத்தொரு புஸ்பம், இருபத்தொரு அறுகம்புல் கொண்டு அர்ச்சித்தல் வேண்டும்.
  - இவ்விரதத்தினால் கிடைக்கும் பலன்கள்
    - சிறந்த கல்வி அறிவு கிடைக்கும்.
    - காரிய சித்தி பெறுவர்
    - வாழ்வில் செல்வமும் இன்பமும் கிடைக்கும்.
    - புகழ் கிடைக்கும்.

- **நவராத்திரி விரதம்**
  - நவம் என்பது ஒன்பது. ஒன்பது இராத்திரி நவராத்திரி எனப்படுகிறது. மனிதனுக்குத் தேவையான ஆற்றல் சக்தியை வழங்குகின்ற சக்தியைப் போற்றுகின்ற விரதமாகும்
  - நவராத்திரி விரதம் புரட்டாதி மாதத்தில் வருகின்ற அமாவாசையைப் அடுத்து வரும் பிரதமை தொடக்கம் நவமி ஈறாக உள்ள ஒன்பது நாட்களும் ஆகும்.

  1. கும்பம் வைத்தல்

     முதல் நாள் காலையில் பிரதமை திதியில் ஒரு பாத்திரத்தில் மண்பரப்பி அதில் நவதானியங்கள் தூவி நீர் தெளித்து அதன் மேல் கும்பம் வைப்பர்.

  2. கொலு வைத்தல்.

     அடுத்த நாள் மாலையில் கும்பத்தின் பின்னால் ஒன்பது அடுக்குகள் கொண்ட படிமுறையில் கொலு வைப்பர். பொம்மைகள், பாவைகளை படிகளிலும் அடுக்கி கொலு வைப்பர். சக்தி ஒன்றாய் அரும்பி எல்லாப் பொருட்களிலும் ஜீவராசிகளிலும் ஊடுருவி நிற்கின்றார் என்பதை உணர்த்துகிறது.

  3. கும்பம் சொரிதல். விரத ஆரம்ப நாள் வைத்த கும்ப கலசத்தை எடுத்துச் சென்று ஓர் நன்னீர்நிலையில் விடுவர். இங்கு தூவப்பட்ட நவதானியம் சிறப்பான முறையில் வளர்ந்திருந்தால் நற்பலன்களைக் கொடுக்கும் என்றும் செழிப்பற்றிருந்தால் நலன்கள் குன்றிக் காணப்படும் எனவும் நம்புவர்.

- **விஜயதசமி**

  பத்தாவது நாள் ஆகும். இந்நாள் தசமி திதியாகக் காணப்படும். வெற்றித் திருநாள் எனவும் அழைப்பர். எல்லாச் செயல்களிலும் வெற்றி கிடைக்கும் என்பதாகும். அதனால் தான் அன்று கல்வி, கலைகள், வித்தைகள் என்பவற்றைத் தொடங்குவார்கள்.

  **கன்னிவாழை வெட்டுதல்**

  விஜயதசமியன்று இடம்பெறும்.இதனை மானம்பூத் திருவிழா என்பர். அன்னை பராசக்தி மகிஷாசுர மர்த்தனம் செய்யப்படும்.மகிஷ என்ற அசுரனை அழித்து மனிதர்களைக் காத்தார் என்பதாகும். அதனால் தான் கன்னி வாழையை மகிஷாசுரனாக பாவித்து அதனை வெட்டுதல் இடம்பெறுகின்றது. எனினும் இவை வன்னி மரத்தையே அசுரனாக பாவிக்கின்ற போதிலும் வன்னிமரம் கிடைப்பது அரிது என்பதால் ஆகும்.

- **வழிபடும் முறை**
    - முதல் மூன்று நாட்களும் சக்தியை, வீரத்தை வழங்குகின்ற துர்க்கா தேவியாகவும் அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தை வழங்குகின்ற இலக்குமிதேவியாகவும் இறுதி மூன்று நாட்களும் கல்வியைத் தருகின்ற சரஸ்வதி தேவியாகவும் பாவனை செய்து வழிபடுதல் வேண்டும்.
    - முதல் எட்டு நாட்களும் பகல் உணவின்றி இரவில் பூசை முடிந்த பின்னர் அன்று நிவேதனம் செய்த பிரசாதங்களை உட்கொள்ளுதல் வேண்டும். இக்காலம் முழுவதும் கடலை, வடை, அவல், மோதகம், கற்கண்டு போன்றவற்றை நிவேதிப்பார்.
    - இறுதிநாளான ஒன்பதாவது நாள் மகாநவமியன்று உபவாசம் இருத்தல் வேண்டும்.
    - இம் மகாநவமி அன்று சரஸ்வதி தேவிக்கு பூசை செய்து வழிபடுவர். இதனை ஆயுத பூசை என்றும் அழைப்பர்.
    - பூசையில் மாணவர்கள் தங்களுடைய பாடப்புத்தகங்கள், கலைஞர்கள் தத்தமது கருவிகள் என்பவற்றைப் பூசையில் வைத்து மகாநவமியில் புத்தகங்களை படிப்பர், கருவிகளை வாசிப்பார்.
    - தம் வாழ்வின் உயர்வுக்கு உதவுகின்ற பொருட்களைப் பூசையில் வைத்து அவற்றை இறைபொருளாகப் பாவித்து வணங்குவர்.
    - விஜயதசமி அன்று அதிகாலையில் சமைத்து பாறணை செய்து ஏழைகளுக்கு உணவிட்டு விரதத்தினை முடிப்பார்.
    - விஜயதசமியன்று பாடசாலைகள், அலுவலகங்கள் போன்ற இடங்களில் இவ்விழா கொண்டாடப்படுகின்றது.
    - இவ்விரதத்தைக் கடைப்பிடித்து நாமும் நமக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுக்கொள்வோமாக.
- **கேதாரகௌரி விரதம்**
    - அம்பிகை சிவபெருமானை நோக்கி அனுஷ்டிக்கப்பட்ட விரதம் ஆகும். திருக்கேதார நாதராகிய கேதாரேஸ்வரப் பெருமானை அத்தலத்து நாயகியாகிய கேதாரகௌரி அம்பாள் பூஜித்து வழிபட்ட விரதமாகையால் இவ்விரதத்திற்கு கேதார கௌரிவிரதம் எனப் பெயர் வந்தது.
    - இவ்விரதம் புரட்டாதி மாத வளர்பிறைஅட்டமி அல்லது நவமி அல்லது தசமி திதியில் ஆரம்பமாகி ஐப்பசிமாதத் தேய்பிறை சதுர்த்தசியில் முடிவுறுகின்றது. இருபத்தொரு நாட்களைக் கொண்ட விரதமாகும்.
- **விரதம் அனுஷ்ட்டிக்கும் முறை**
    - விரத ஆரம்பநாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சுக்களாக இடப்பட்டு இறுதிநாளன்று அந்நூலை பெண்கள் இடக்கையிலும் ஆண்கள் வலக்கையிலும் அணிதல் வேண்டும். விரத நாட்களில் பகல் முழுவதும் விரதமிருந்து சாயங்காலத்தில் பூஜை முடிவில் நிவேதனங்களை மட்டும் உண்டு பூஜைக்கு பயன்படுத்திய தீர்த்தத்தை அருந்தி வர வேண்டும். இருபத்தோரிழைகள் கொண்ட பட்டுநூல் ஒன்றை முறுக்கி லிங்கம் அல்லது கும்பத்தின் மீது வைத்து பூஜை முடிவில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முடிச்சுக்களும் இடவேண்டும். இறுதி நாளாகிய இருபத்தோராம் நாள் பூரண உபவாசமிருந்து காப்புக் கட்டி, மறுநாள் அதிகாலை பாறணை செய்தல் வேண்டும்.

- **விரதத்துடன் தொடர்பான கதை**
- திருக்கைலாயத்தில் பார்வதி பரமேஸ்வரராக பரமசிவன் வீற்றிருக்கும் போது சிவபக்தரான பிருங்கி முனிவர் சிவனை மட்டும் வலம் வந்து வணங்கினார். இதனைக்கண்டு வியப்புற்ற பார்வதி ஏன் என்று சிவனை கேட்க சிவத்திற்கும் சக்திக்கும் உள்ள உறவு உயிருக்கும் உடலுக்கும் உள்ள உறவு போன்றது.தேகப்பற்றை நீக்கி அதிபக்குவமடைந்தவர்கள் உடலைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அக்கருத்தினால் உயிர் விஷயத்தில் மட்டும் பற்றுள்ளவராதலால் சக்திபற்றிய அக்கறை இன்றி உயிராகிய சிவத்தை மட்டும் வழிபடலானார் என விளக்கினார். எனவே பார்வதி முனிவருக்கு ஏன் தேகவலுவாகிய சக்தி எதற்கு என்றெண்ணி அவரது உடல் வலிமையும் ஊன் உதிராகிய பசையையும் விலக்கி விட்டார். அவர் எலும்பும் தோலுமாகி இயங்கும் ஆற்றலின்றி தடுமாறினார். முனிவர் மீது இரக்கம் கொண்ட சிவன் அவருக்கு தண்டொன்று கிடைக்கச் செய்து அதனை ஊன்றி இயக்கச் செய்தார். உடனே பார்வதி அவ்விடம் விட்டகன்று யாம் பரமசிவனோடு ஒரே உருவில் சரிபாதியாய் பொருந்த வேண்டும் என்றெண்ணி இவ்விரதத்தை வில்வமரத்தின் கீழ் அமர்ந்திருந்து அனுஷ்டித்து அர்த்த நாரீஸ்வரர் பேற்றினைப் பெற்றார்.
- **விரத பலன்கள்**

  சகல ஐஸ்வர்யங்களும் பெருகும், குடும்ப வாழ்வும் இல்லற வாழ்வும் விருத்தியடையும், நினைக்கும் எண்ணங்கள் கைகூடும், புத்திர பாக்கியம் கிட்டும், ஆரோக்கியம், புகழ், ஆயுள் அனைத்தும் விருத்தியாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் : -** விரதங்கள் பற்றிய கதைகள், செயற்பாட்டுப்பதிதிரம், எழுதுகருவிகள், விரதபலன் பற்றிய பாடல்கள்.

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- விரதங்கள் என்றால் என்ன? என்பதை விளக்குவார்.
- விரதங்களை அனுஷ்டிப்பதால் கிடைக்கும் பயன்களை எடுத்துக்கூறுவார்.
- விரதங்கள் அனுஷ்டிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டியவை பற்றி எடுத்துக் கூறுவார்.

## மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம் இணைப்பு 1.1.1

குழு 1 ஆடி, ஆவணி மாதங்களில் வரும் விரதங்களைக் குறிப்பிட்டு. ஆவணிச்சதுர்த்தி விரதத்தின் கதையினைக் கூறுங்கள்.

குழு 2 புரட்டாதி மாத விரதங்களைக் குறிப்பிட்டு நவராத்திரி விரதம்பற்றி கூறுங்கள்.

குழு 3 கேதார கௌரி விரதக்கதையினை நாடகமாக்கி அதனை நடித்துக் காட்டுங்கள்

குழு 4 விரதங்களினால் கிடைக்கும் பயன்களை குறிப்பிடுங்கள்

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ........................................................................................................................................

2. ........................................................................................................................................

**பெற்றோருக்கானது:**

விரதங்களினை புனிதமாகக் கடைப்பிடித்து ஆலயத்திற்கு சென்று வழிபாட்டில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 1.0** : தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 1.5** : வாழ்வின் மேம்பாட்டில் விரதங்கள் பண்டிகைகள் வகிக்கும் முக்கியத்துவத்தை விளங்கி அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவார்.

**செயற்பாடு** : பண்டிகைகளை உரிய முறைப்படி கொண்டாடுவோம்.

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்** :

- பண்டிகைகளின் முக்கியத்துவத்தினை அறிந்து கடைப்பிடிப்பார்.
- ஆடிப்பிறப்பு பற்றி அறிந்து அதனைக் கொண்டாடுவார்.
- கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவார்.
- சமூகத்தில் நல்லிணக்கத்துடன் வாழப்பழகுவார்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1** :
- மாணவர்களிடம் தமக்குத் தெரிந்த பண்டிகைகள் பற்றிக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்களால் கொண்டாடப்படும் பண்டிகைகள் பற்றிக் கூற இடமளியுங்கள்.
- ஆடிப்பிறப்பு பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- பண்டிகைகளின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**படி 1.1.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3** :
- குழுச்செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4** :
- ஆடி பிறக்கும் போது மாரி பிறக்கிறது என்பது நம்பிக்கை. எனவே எமக்குத் தேவையான விளைபொருட்களை விளைவிப்பதற்கு மாரி இன்றியமையாததாகையால் ஆடிப்பிறப்பைக் கொண்டாடி மாரி காலம் வரவேற்கப்படுகின்றது. இதனால் ஆடிமாதத்தில் விளைபொருட்கள் வித்திடப்படுகின்றது. இவை காரணமாக ஆடிப்பிறப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.
- ஆடி மாதத்தின் முதல் நாள் கொண்டாடப்படுவது ஆடிப்பிறப்பாகும்.

- சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நகரும் தட்சணாயண புண்ணிய காலத்தில் கூழ் காய்ச்சி மகிழ்ச்சியுடன் ஆடிப்பிறப்பு கொண்டாடப்படுகின்றது.
- ஆடிக்கூழ், ஆடிக்கொழுக்கட்டை என்பன செய்து பிதிர்களுக்கு படைக்கப்படுகிறது.
- ஆடிமாதம் தேவர்களுக்குரிய மாதம் ஆகும்.
- ஆடிப்பிறப்பை முன்னிட்டு சுற்றுச்சூழலை சுத்தம் செய்தல், கோலம் போட்டு ஆடிமாதத்தினை வரவேற்றல் வேண்டும்.
- ஆடிப்பிறப்புப் பண்டிகையின் மூலம்
  - ஆடிக்கூழ், ஆடிக்கொழுக்கட்டை என்பன இறைவனுக்குப் படைத்தல்.
  - பின உற்றார் உறவினர்களுடன் பகிர்ந்துண்ணல் இடம்பெறும்.
  - நன்றி செலுத்துதல்.
  - சமூக ஒற்றுமையை வளர்க்கும் முகமாக பாட்டுப்பாடுதல், நடனமாடுதல் போன்றனவற்றில் ஈடுபட்டு ஆடிப்பாடி மகிழ்வார்.
  - சமூக நல்லிணக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்

**தரவிருத்தி உள்ளீடுகள் : -** ஆடிப்பிறப்புப் பற்றிய பாடல்கள் எழுதிய அட்டை, ஒளிப்படங்கள், எழுதுகருவிகள், செயற்பாட்டுப் பத்திரங்கள்

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- பண்டிகைகள் என்றால் என்ன? என்பதனை விளக்குவார்.
- பண்டிகைகளைக் கொண்டாடும் முறையினைக் குறிப்பிடுவார்.
- பண்டிகையினைக் கொண்டாடுவதன் மூலம் தாங்கள் கற்றுக்கொண்ட படிப்பினைகளை அட்டவணைப்படுத்துவார்.
- பண்டிகைகள் மூலம் சமூக நல்லிணக்கச் செயற்பாடுகளில் பங்கு கொள்வார்

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1 ஆடிப்பிறப்பு பண்டிகைகள் கொண்டாடப்படுவதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

குழு 2 ஆடிப்பிறப்பு தினத்தில் செய்ய வேண்டிய கருமங்களைப் பட்டியற்படுத்துக.

குழு 3 பண்டிகைகள் மூலம் சமூக நல்லிணக்கத்தை எவ்வாறு ஏற்படுத்தலாம்?

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

ஆடிப்பிறப்பினை வீட்டில் குடும்பத்தினருடன் இணைந்து உரிய ஒழுங்கு முறைகளின்படி கொண்டாடுங்கள் அதன் தத்துவார்த்த உண்மைகளைக் கதைகளாகக் கூறுங்கள்.

**தேர்ச்சி 2.0** : பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனை தமது வாழ்வில் மேற்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : சமய நூல்களையும் அவற்றின் பக்தி வெளிப்பாடுகளையும் அறிந்து வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு** : நாலாயிர திவ்விய பிரபந்தம் வெளிப்படுத்தும் பக்தி அனுபவங்களை இனங்கண்டு போற்றுவோம்.

**நேரம்** : 03 பாடவேளைகள்.

**கற்றற் பேறுகள்** :

- நாலாயிர திவ்விய பிரபந்தம் என்றால் என்ன? என்பதை அறிவார்.
- நாலாயிர திவ்விய பிரபந்தத்தின் வைப்பு முறையினையும் அதன் ஆசிரியர்களையும் அறிந்து மதிப்பளிப்பார்.
- நாலாயிர திவ்விய பிரபந்தத்தின் பொருள் மரபின் அறிமுகத்தினைப் பெறுவார்.
- நாலாயிர திவ்விய பிரபந்தத்தின் வாயிலாக வெளிப்படுத்தப்படும் புராண, இதிகாசக் கதைகளை இனங்காண்பார்.
- நாலாயிர திவ்விய பிரபந்தத்தின் சிறப்புப் பற்றிய விடயங்களைத் தேடியறிவார்.
- நாலாயிர திவ்விய பிரபந்தத்தின் பக்தி வெளிப்பாடுகளை இனங்காண்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1:**
- மாணவர்கள் நாலாயிர திவ்விய பிரபந்தம் பற்றி அறிந்த விடயங்களை கூற இடமளியுங்கள்.
- அதன் ஆசிரியர்களின் பெயர்களையும், திவ்விய பிரபந்தத்தில் அடங்கியுள்ள நூல்களைப் பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- நாலாயிர திவ்விய பிரபந்தத்தின் பொருள் மரபினை விளக்குங்கள். அதன் சிறப்பினையும் பக்தி அனுபவ வெளிப்பாட்டின் உயர்வையும் தெளிவுபடுத்துங்கள்.

**படி 1.1.2:**
- மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரங்களின் நோக்கங்களைத் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.

**படி 1.1.3:**
- மாணவர்கள் குழுக்களாக செயற்படுவதை அவதானியுங்கள்
- சகல மாணவரும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு வழி காட்டுங்கள்.
- செயற்பாடு வெற்றியளிக்கக் கூடிய ஆக்க பூர்வமான ஆலோசனைகளை வழங்குங்கள்.

**படி 1.1.4:**

- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- கூறப்படும் கருத்துகளின் ஐயப்பாடுகள் முரண்பாடுகளைத் தீர்த்து வையுங்கள்.
- மாணவரின் முயற்சியைப் பாராட்டி உற்சாகப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துங்கள்.
- திருமாலின் பக்தியில் ஆழ்ந்த இறையடியார்கள் ஆழ்வார்கள் எனப்படுவர்.
- இவர்களில் பன்னிருவர் முக்கியத்துவம் பெறுகின்றனர்.
- இவர்கள் பாடிய பாசுரங்களின் தொகுப்பே நாலாயிர திவ்விய பிரபந்தமாகும்.
- இதனைத் தொகுத்தவர் நாதமுனிகள் ஆவார்.

| **நூல்கள்** | | **ஆசிரியர்கள்** |
|---|---|---|
| 1ஆம் திருவந்தாதி | --- | பொய்கையாழ்வார் |
| 2ஆம் திருவந்தாதி | --- | பூதத்தாழ்வார் |
| 3ஆம் திருவந்தாதி | --- | பேயாழ்வார். |
| நான்முகன் திருவந்தாதி | | திருமழிசையாழ்வார். |
| திருச்சந்த விருத்தம் | | |
| திருவிருத்தம் | | நம்மாழ்வார். |
| திருவாசிரியம் | | |
| பெரிய திருவந்தாதி | | |
| திருவாய்மொழி | | |
| பெருமாள் திருமொழி | --- | குலசேகராழ்வார். |
| பெரிய திருமொழி | | திருமங்கையாழ்வார். |
| திருக்குறுந்தாண்டகம் | | |
| திருநெடுந்தாண்டகம் | | |
| பெரிய திருமடல் | | |
| சிறிய திருமடல் | | |
| திருவெழுகூற்றிருக்கை | | |
| திருப்பள்ளியெழுச்சி | | தொண்டரடிப் பொடியாழ்வார் |
| திருமாலை | | |
| அமலனாதிபிரான் | --- | திருப்பாணாழ்வார். |
| திருப்பல்லாண்டு | | பெரியாழ்வார் |
| திருமொழி | | |
| நாச்சியார் திருமொழி | | ஆண்டாள் |
| திருப்பாவை | | |
| கண்ணினுண் சிறுதாம்பு | --- | மதுரகவியாழ்வார். |

- காலத்தால் முற்பட்டவர்கள் முதல் மூன்று ஆழ்வார்கள்.
- ஏனைய ஒன்பது ஆழ்வார்களும் பல்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு காலப்பகுதிகளில் வாழ்ந்து அரங்க நாதனின் திருவருள் பெற்று உய்வெய்தினர்.
- இவர்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கை வரலாறுகளும் அற்புதங்களும் பக்தி வைராக்கியமும் நிறைந்த அருட் கொடையாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் : -**

- திவ்விய பிரபந்த நூல்கள்
- பாடநூல், ஆழ்வார்களின் திருவுருவப் படங்கள்
- செயற்பாட்டுப் பத்திரங்கள்.

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- ஆழ்வார்களின் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து கூறுவார்.
- அவர்களின் சிறப்புக்களை அட்டவணைப்படுத்துவார்.
- நாலாயிர திவ்விய பிரபந்தத்தின் பக்தி அனுபவங்களைப் பாடிக் காட்டுவார்.
- நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் வெளிப்படும் அரங்க நாதனின் அருட் செயல்களை எடுத்துக் கூறுவார்.
- ஆழ்வார்களின் பக்திச் சிறப்பின் மேன்மையை உணர்ந்து மதித்துப் போற்றுவார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1
- வைணவ ஆழ்வார்கள் என்போர் யாவர்?
- அவர்களின் முக்கியத்துவத்திற்கான காரணங்கள் மூன்றினை எழுதுக.

குழு 2
- முதல் மூன்று ஆழ்வார்களின் சிறப்புப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

குழு 3
- நாலாயிர திவ்விய பிரபந்தத்தையும் அவற்றை எழுதியோரையும் அட்டவணைப்படுத்துக.

குழு 4
- பின்வரும் ஆழ்வார்கள் இருவரைப் பற்றி விபரித்து எழுதுக.

1. குலசேகராழ்வார்.
2. திருமங்கை ஆழ்வார்.
3. தொண்டரடிப் பொடியாழ்வார்.
4. ஆண்டாள்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ........................................................................................................................
2. ........................................................................................................................
3. ........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

சமய வழிபாட்டின் போது திவ்விய பிரபந்தங்களைப் பாட வழிப்படுத்துங்கள். ஆழ்வார்களின் வரலாறுகள் பற்றிய திரைப்படங்களைப் பிள்ளையுடன் சேர்ந்து பார்த்து கதை கூறுங்கள்.

**தேர்ச்சி 2.0** : பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனை தமது வாழ்வில் மேற்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : நாயன்மார்களின் வரலாறுகளினூடாக அவர்களது இறை நம்பிக்கையையும், பக்தி உணர்வையும் அறிந்து அவற்றின் வழி ஒழுகுவர், பக்தியின் சிறப்பை எடுத்துரைப்பார்.

**செயற்பாடு** : மங்கையற் கரசியார் கதையினூடாக அவரது பக்தி வெளிப்பாடுகளைப் போற்றுவோம்.

**நேரம்** : 02 பாடவேளைகள்.

**கற்றற் பேறுகள்** :

- மங்கையற்கரசியாரின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து இறைபக்தியின் மேன்மையை விளங்கிக் கொள்வார்.
- மங்கையற்கரசியார் செய்த சமூகப் பணிகளை அறிந்து தாமும் சமூக நலனுடன் செயற்படும் பண்பை வளர்த்துக் கொள்வார்.
- மங்கையற்கரசியாரின் நற்பண்புகளையும் சமூக நலச் செயற்பாடுகளையும் எடுத்துரைப்பார்.
- கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதனை இக்கதைமூலம் விளக்கிக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1:**
- மாணவர்கள் பெரியபுராணத்தில் கூறப்படும் நாயன்மார்கள் பற்றிக் கூறுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்த நாயன்மார்களில் பெண் அடியார்களை இனங்காணச் சந்தர்ப்பமளியுங்கள்.
- சைவசமயத்தை தழைத்தோங்கச் செய்தவர்களில் இவரும் ஒருவர். தேவாரத்தில் பெயர் குறிப்பிட்டுப்பாடிய பெருமை பெற்றவர்
- ‘‘மானினேர் விழி…’’ என்ற தேவாரக் கருத்துக்களை முன்வைத்துச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுங்கள்.

**படி 1.1.2:**
- மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரங்களின் நோக்கங்களைத் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.

**படி 1.1.3:**
- மாணவர்கள் குழுக்களாக செயற்படுவதை அவதானியுங்கள்
- சகல மாணவரும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு வழிகாட்டுங்கள்.
- செயற்பாடு வெற்றியளிக்கக் கூடிய ஆக்க பூர்வமான ஆலோசனைகளை வழங்குங்கள்.

**படி 1.1.4:**

- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- கூறப்படும் கருத்துக்களின் ஐயப்பாடுகள் முரண்பாடுகளைத் தீர்த்து வையுங்கள்.
- மாணவரின் முயற்சியைப் பாராட்டி உற்சாகப் படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துங்கள்.
- **அறிமுகம்**
    - மங்கையற்கரசியாரின் இயற்பெயர் - மானி
    - கணவர் - பாண்டிய நெடுமாறன்
    - காலம் - 7ஆம் நூற்றாண்டு
    - அவரது சைவப்பணிக்கு உதவியாக இருந்தவர் முதன் மந்திரி குலச்சிறையார்
- **மங்கையற்கரசியார் காலத்தில் சமய நிலை**
    - சமணசமயம் மேலோங்கிக் காணப்பட்டது
    - சைவசமயத்தவர் பலர் சமணசமயத்தைத் தழுவினர்

      (உ-ம்) பாண்டிய மன்னனும் அவனைப் பின்பற்றி பாண்டி நாட்டு மக்களும் சமண சமயத்தைத் தழுவினர்.
    - சைவ சமயம் தாழ்ந்த நிலையில் காணப்பட்டது.
    - சைவசமயத்தை மீள் எழுச்சியடையச் செய்தவர் மங்கையற்கரசியார்.
- மங்கையற்கரசியரின் நற்பண்புகள்
    - சங்கம வழிபாட்டில் சிறந்தவர்.
    - சிவனடியார்களுக்கு மதிப்பளித்துத் தொண்டு செய்பவர்
    - கல்வி, வேள்விகளில் சிறந்தவர்.
    - பட்டத்து அரசியாக இருந்தும் ஆடம்பர வாழ்க்கையை விடுத்து சாதாரண வாழ்க்கை வாழ்ந்தவர்
    - பாண்டிய அரசனுக்கும் பாண்டி நாட்டுக்கும் நல்லனவற்றை சிந்தித்துச் செயலாற்றும் திறன்படைத்தவர்.
    - சைவசமயத்தை மேன்மையடையச் செய்யும் நோக்கில் தொண்டு செய்தவர்.
    - திருஞான சம்பந்தரின் வழிகாட்டலுடன் பாண்டி நாட்டில் மீண்டும் சைவசமயத்தை தழைத்தோங்கச் செய்தவர்.
    - திருநீற்றின் மகிமையை உலகறியச் செய்தவர்.
    - மங்கையற்கரசியின் சிவதொண்டினை சம்பந்தர் தனது தேவாரங்களில் பாடுமளவுக்குச் சிறப்புப் பெற்றவர்.

      (உ-ம்) மங்கையற்கரசி வளவர்கோன்....
    - பெரியபுராணத்தில் சேக்கிழார் பின்வருமாறு பாடியுள்ளார் - மங்கையரக்குத் தனி அரசி எங்கள் தெய்வம்....
    - மங்கையற்கரசியார் சித்திரை மாத ரோகிணி நட்சத்திரத்தன்று முக்தியடைந்தார்.

**தரவிருத்தி உள்ளீடுகள் : -**

- மஙகையர்கரசியார் படம்
- டிமைன் கடதாசி, பேனா, பாடநூல்
- செயற்பாட்டுப்படிவம்.

**படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்**

- மங்கையற்கரசியாரின் சைவப் பணிகளை இனங்கண்டு கூறுவார்.
- மங்கையற்கரசியாரிடம் காணப்பட்ட நற்பண்புகளை இனங்கண்டு மதிப்பளிப்பார்.
- பெரிய புராணத்தில் மங்கையற்கரசியாரின் வரலாறு இடம்பெற்றதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை வெளிப்படுத்துவார்.
- மங்கையற்கரசியாரைப் பின்பற்றித் தாமும் சமயப் பணி செய்ய முன்வருவார்

**மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம் இணைப்பு 1.1.1**

குழு 1

- மங்கையற்கரசியார் காலத்தில் சைவசமயத்தின் நிலை பற்றி எழுதுங்கள்
- மங்கையற்கரசியார் வாழ்ந்த காலப் பின்னணியையும், அவர் முன்னெடுத்த பணிகளையும் குறிப்பிடுங்கள்

குழு 2

- மங்கையற்கரசியாரின் இறைவன் மீதான பக்தி பற்றி உங்கள் குழுவின் கருத்துக்களைத் தொகுத்து எழுதுங்கள்.
- பெரியபுராணத்தில் மங்கையற்கரசியாரின் வரலாறு இடம்பெற்றது சரியானது இதற்கான காரணங்களைக் குறிப்பிடுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துங்கள்.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- மங்கையற்கரசியார் பற்றிய கதைகளைப் பிள்ளைகளிடம் கலந்துரையாடுங்கள், நாயன்மார் வாழ்க்கை வரலாறுகளுடாக சமூகத்தில் வாழவேண்டிய நிலையை உணர்த்துங்கள் அனைவரிடத்திலும் அன்பு காட்ட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0** : திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பஞ்ச புராணத்தையும், தோத்திரப்பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு** : திருஞானசம்பந்த நாயனார் பாடியருளிய தேவாரங்களைப் பண்ணோடும், பக்தியோடும் பாடுவோம்.

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- தேவாரங்களினது சிறப்பினை அறிவார்.
- தேவாரங்களை மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- தேவாரத்தினை எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவார்.
- தேவாரம் பாடும் பொழுது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் கூறும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.
- தேவாரங்களின் பொருள் விளக்கத்தையும் அவைகள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பார்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1.1.1** :

- மாணவர்களுக்குத் தெரிந்த திருஞான சம்பந்தருடைய தேவாரங்களைக் கூற இடமளியுங்கள்.
- தேவாரங்களை மாணவர்கள் பண்ணுடன் பாட இடமளியுங்கள்.
- ‘‘துஞ்சலும் துஞ்சலில்லாத போழ்தினும்......’’ ‘‘காதலாகிக் கசிந்து....’’ எனும் பாடல்களை பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.

**படி 1.1.2 :**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தர உள்ளீடுகளை வழங்குங்கள்

**படி 1.1.3 :**

- குழுச் செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றி தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4 :**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- **“துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்......”**

  பஞ்சாக்கரப் பதிகம்

  ஞான சம்பந்தருக்கு உபநயனம் புரிவதற்கு ஏற்பாடாகியது. அந்தணர்கள் வேத விதிப்படி சடங்குகள் புரிந்தனர். சம்பந்தர் மான்தோலுடன் கூடிய முப்புரிநூலைத் தாங்கி அருளினார். ஒரு பிறப்பும் எய்தா உத்தமரை இரு பிறப்பாளராகச் செய்து, நான்கு வேதங்களையும் தந்தோம் என்று அவர் திருமுன் நின்று மந்திரங்களை மொழிந்தார்கள். அப்பொழுது சம்பந்தர் எண்ணிறைந்த புனித வேதங்களைத் தமது மெய்மதுர வாகத்கினால் தேன்மதுருத் தமிழில் அவர்களுக்கு ஓதியருளினார். அந்த அற்புதத்தைக் கண்ட அந்தணர்கள் தமது கண்முன் உருவெடுத்து வந்த தியானப் பொருளே பிள்ளையார் என்று கருதி, அவரது திருவடித் தாமரைகளை வணங்கினார்கள். தாம் முன் கற்ற தேவங்களில் தமது சந்தேகங்களைச் சம்மந்தரிடம் கேட்டு ஐயம் தீர்ந்து அக மகிழ்ந்தார்கள்.எல்லா மந்திரங்களும் தோன்றுவதற்கு மூலகாரணமாகியது முழு முதல்வனது திருவைந்தெழுத்தாகும் என்று அவர்களை நோக்கி உபதேசித்து பஞ்சாக்கரப் பதிகம் பாடியருளினார்.
- **“காதலாகிக் கசிந்து.....”**

  இது நமச்சிவாய திருப்பதிகம்.

  சம்பந்தருடைய திருமணத்தில், சிவபெருமான திருவருள் புரிந்து, ஞானசம்பந்தா! நீயும் நின் மனைவியும் திருமணம் கண்ட புண்ணிய சீலர்கள் யாவரும் நமது சிவஜோதியில் புகுந்து வருக! என்று கூறியருளினார். ஆங்கு ஒரு பெரிய அற்புத ஜோதி தோன்றியது. அதில் ஒரு வாயிலும் தோன்றியது ஞானசம்பந்தர், ஞான மெய்ந்நெறி நமச்சிவாயவே என்று இந் நமச்சிவாய திருப்பதிகத்தை விண்ணும் மண்ணுங் கேட்கப் பாடியருளி ‘‘திருமணத்திற்கு வந்த அனைவரும் பிறவிப்பிணி தீர இச்சோதியில் புகுமின்’’ என்று அருளிச்செய்தார்.

- முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும். முதல் மூன்றும் சம்பந்தருடையவை ஆகும்.
- தேவாரம் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் சொல்லுதல் வேண்டும்.
- தேவாரங்களை எழுத்துப்பிழையின்றி உச்சரித்துப் பண்ணோடு பாட வேண்டும்.
- மனனம் செய்தல் வேண்டும்.
- தேவாரங்களை உரிய விதிகளின் படி வரிக்கிரமமாக எழுதுதல் வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் : -**

- திருமுறைத்தொகுப்பு, இறுவட்டு, ஒலிநாடா
- டிமைன் கடதாசி, பேனா,
- செயற்பாட்டுப்படிவம்.

**படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்**

- தேவாரங்கள் எத்தலங்கள் மீது பாடப்பட்டன என்பதைக் கூறுவார்.
- தேவாரங்களைப் பாடும் போது இறைவனை மெய்யன்போடு துதித்துப்பாடிக் குறைகள் இன்றி வாழலாம் என்பதை விளக்குவார்.
- தேவாரங்களை பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- தேவாரங்களை வரிக்கிரமமாக எழுதுவார்.

**மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம் இணைப்பு 1.1.1**

குழு 1

- "காதலாகிக் கசிந்து....." என்ற தேவாரம் யாரால், எச்சந்தர்ப்பத்தில் எத்தலம் மீது பாடப்பட்டது?
- இத்தேவாரத்தைக் குழுவாக ஒன்று சேர்ந்து பண்ணோடு பாடிக்காட்டுக? பாடலை வரிக்கிரமமாக எழுதுக.

குழு 2

- "துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்......." என்ற தேவாரம் யாரால் எச்சந்தர்ப்பத்தில்? எத்தலம் மீது பாடப்பட்டது?
- இத்தேவாரத்தைக் குழுவாக ஒன்று சேர்ந்து பண்ணோடு பாடிக்காட்டுக. பாடலை வரிக்கிரமமாக எழுதுக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..............................................................................................................................
2. ..............................................................................................................................
3. ..............................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் சுவாமி அறையில் (காலை, மாலை) விளக்கேற்றி வழிபடும் போது பிள்ளைகளை பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- பிள்ளைகளுடன் இணைந்து நீங்களும் இச்செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 3.0** : திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பஞ்ச புராணத்தையும், தோத்திரப்பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு** : திருநாவுக்கரச நாயனார் பாடியருளிய தேவாரங்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம்.

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- தேவாரங்களினது சிறப்பினை அறிவார்.
- தேவாரங்களை மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- தேவாரத்தினை எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவார்.
- தேவாரம் பாடும் பொழுது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றபம்பலம் கூறும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.
- தேவாரங்களின் பொருள் விளக்கத்தையும் அவைகள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1** :

- மாணவர்களுக்குத் தெரிந்த திருநாவுக்கரசருடைய தேவாரங்களைக் கூற இடமளியுங்கள்.
- தேவாரங்களை மாணவர்கள் பண்ணுடன் பாட இடமளியுங்கள்.
- "இல்லக விளக்கது......", "காப்பதோர் வில்லும் அம்பும்...." எனும் பாடல்களைப் பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.

**படி 1.1.2 :**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தர உள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3 :**

- குழுச் செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவு படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக் கருத்துக்களை வெளிப்படுத்தசசந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4 :**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- ''இல்லக விளக்கது......''

  இது நமச்சிவாயத் திருப்பதிகம்.

  இல்லத்தில் ஏற்றப்படும் விளக்கானது புற இருளை நீக்குவது போல திருவைந் தெழுத்தானது அக இருளை நீக்கும் பெருமை பெற்றது. அத்திருவைந் தெழுத்து சொல் முறையிலும், சோதி நிலையிலும் விளங்கிப் பயில்வோரும் பயிற்றப்படுவோரும் இதனைக் கேட்போரும் ஆகிய பல்வேறு திறத்தார்க்கும் விளங்கும் சிறப்புடையது.

- ''காப்பதோர் வில்லும் அம்பும்........''

  பஞ்சாக்கரப் பதிகம்

  கண்ணப்பர் வில்லையும் அம்பையும் ஒரு கையிலே தாங்கி இறைவனுக்கு காவல் புரிகின்றார். மற்றக் கையில் இறைவனுக்கு ஊட்டுவதற்காக கல்லையில் வைக்கப்பட்ட ஊனமுதைத் தாங்கி நிற்கின்றார். காலிலே தோற்செருப்பு அணிந்திருக்கின்றார். வாயில் முகந்து கொண்டு வந்த நீரினால் இறைவனுக்குத் திருமஞ்சணம் ஆட்டுகின்றார். இறைவனின் கண்களிலிருந்து குருதி வடிவதைப் பார்க்கின்றார். அதை நிறுத்துவதற்காகத் தமது கண்ணை இடந்து அப்புவதற்கு முயல்கின்றார். அம்பினாலே தம் கண்களைத் தோண்டும் பொழுது இறைவன் திருக்குறுக்கை வீரட்டானத்தில் எழுந்தருளியுள்ளார்.

- முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும். நான்கு தொடக்கம் ஆறு வரையானவை திருநாவுக்கரசருடையவை ஆகும்.
- தேவாரம் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் சொல்லுதல் வேண்டும்.
- தேவாரங்களை எழுத்துப்பிழையின்றி உச்சரித்துப் பண்ணோடு பாட வேண்டும்.
- மனனம் செய்தல் வேண்டும்.
- தேவாரங்களை உரிய விதிகளின் படி வரிக்கிரமமாக எழுதுதல் வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் : -**

- திருமுறைத்தொகுப்பு, இறுவட்டு, ஒலி நாடா
- டிமைன் கடதாசி, பேனா,
- செயற்பாட்டுப்படிவம்.

**படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்**

- தேவாரங்கள் எத்தலங்கள் மீது பாடப்பட்டன என்பதைக் கூறுவார்.
- தேவாரங்களைப் பாடும் போது இறைவனை மெய்யன்போடு துதித்துப்பாடிக் குறைகள் இன்றி வாழலாம் என்பதை விளக்குவார்.
- தேவாரங்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- தேவாரங்களை வரிக்கிரமமாக எழுதுவார்.

**மாதிரி செயற்பாட்டுப் பத்திரம் இணைப்பு 1.1.1**

குழு 1
- ‘‘இல்லக விளக்கது.....’’ யாரால்? எச்சந்தர்ப்பத்தில்? எத்தலம் மீது பாடப்பட்டது?
- இத்தேவாரத்தைக் குழுவாக ஒன்று சேர்ந்து பண்ணோடு பாடிக்காட்டுக பாடலை வரிக்கிரமமாக எழுதுக.

குழு 2
- ‘‘காப்பதோர் வில்லும் அம்பும்.....’’ என்ற தேவாரம் யாரால்? எச்சந்தர்ப்பத்தில்? எத்தலம் மீது பாடப்பட்டது?
- இத்தேவாரத்தைக் குழுவாக ஒன்று சேர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடிக்காட்டுக, பாடலை வரிக்கிரமமாக எழுதுக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் சுவாமி அறையில் (காலை, மாலை) விளக்கேற்றி வழிபடும் போது பிள்ளைகளைப் பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- பிள்ளைகளுடன் இணைந்து நீங்களும் இச்செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 3.0** : திருமுறைப்பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பஞ்சபுராணத்தையும், தோத்திரப்பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு** : சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய தேவாரங்களை பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம்.

**நேரம்** : 02 பாடவேளைகள்.

**கற்றற் பேறுகள்** :

- தேவாரங்களினது சிறப்பை அறிவார்.
- தேவாரங்களை மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- தேவாரத்தினை எழுத்துப்பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவார்.
- தேவாரம் பாடும் பொழுது ஆரம்பத்திலும் இறுதியிலும் திசிருச்சிற்றம்பலம் சொல்லும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.
- தேவாரங்களின் பொருள் விளக்கத்தையும் அவைகள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1**:
- ஏற்கனவே மாணவர்கள் கற்றறிந்த சுந்தரருடைய தேவாரங்களை வினவுங்கள்.
- அத்தேவாரங்களைப் பண்ணுடன் பாட இடமளியுங்கள்.
- ‘‘ஏழிசையாய் இசைப்பயனாய்.....’’, ‘‘மற்றுப்பற்றெனக்கின்றி....’’ எனும் பாடல்களைப் பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- ஒலிப்பேழையில் ஒலிக்கச் செய்யுங்கள்.

**படி 1.1.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள். செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3**:
- குழுச் செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனையை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4 :**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- ‘‘ஏழிசையாய் இசைப்பயனாய்.....’’

  சுந்தரா் திருவொற்றியூா்ப் பெருமான் முன்பாக உன்னைப் பிரியேன் என சங்கிலியாரை மணம்முடித்து தங்கியிருந்த காலத்தில் திருவாரூா்ப் பெருமானுக்குத் திருவிழா என நினைவு வந்தது. அங்கே செல்ல வேண்டும் என்ற எண்ணமும் வந்தது. எனினும் அவரால் அங்கு செல்ல முடியாத வேளையில் திருவொற்றியூா் நாதரை வணங்கி தியானித்த சுந்தரா் இப்பதிகத்தைப் பாடினாா்.
- ‘‘மற்றுப் பற்றெனக் கின்றி....’’

  அன்புள்ளம் கொண்ட அடியாா்கள் ஏசினாலும் இகழ்ந்தாலும் அருள்புரியும் சிவபெருமான் நம்பியாரூரது பேரன்புக்கு உளம் இரங்கி பொற்குடை தந்தருளினாா். பொற்குடை பெற்ற சுந்தரா் திருப்பைஞ்ஞீலியையும் திருஈங்கோய் மலையையும் தரிசித்து கொங்குநாடு சென்றாா். காவிரிக்குத் தென்கரையில் விளங்கும் கொடுமுடி சென்று அங்கு கொடுமுடி நாதரை வணங்கி நமச்சிவாய திருப்பதிகத்தைப் பாடினாா்.
- முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும். ஏழாம் திருமுறை சுந்தரருடையவை ஆகும்.
- தேவாரங்களைப் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் எனச் சொல்லுதல் வேண்டும்.
- தேவாரங்களை எழுத்துப் பிழையின்றி உச்சரித்துப் பண்ணோடு பாட வேண்டும்.
- மனனம் செய்து, தேவாரங்களை உரிய விதிகளின் படி வரிக்கிரமமாக எழுதுதல் வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் : -**

- திருமுறைத்தொகுப்பு, இறுவட்டு, ஒலிநாடா
- டிமைன் கடதாசி, பேனா
- செயற்பாட்டுப்பத்திரம்.

**படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்**

- தேவாரங்கள் எத்தலங்கள் மீது பாடப்பட்டன? என்பதைக் கூறுவாா்.
- தேவாரங்களைப் பாடும் போது இறைவனை மெய்யன்போடு துதித்துப்பாடி குறைகள் இன்றி வாழலாம் என்பதை விளக்குவாா்.
- தேவாரங்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவாா்.

  தேவாரங்களை வரிக்கிரமமாக எழுதுவாா்.

**மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம் இணைப்பு 1.1.1**

குழு 1
- "மற்றுப்பற்றெனக்கின்றி....." என்ற தேவாரம் யாரால்? எச்சந்தர்ப்பத்தில் எத்தலம் மீது பாடப்பட்டது?
- இத்தேவாரத்தைக் குழுவாக ஒன்று சேர்ந்து பண்ணோடு பாடிக்காட்டுங்கள்.
- பாடலை வரிக்கிரமமாக எழுதுக.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக
  1. ..............................................................................................................................
  2. ..............................................................................................................................
  3. ..............................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் சுவாமி அறையில் காலை, மாலை விளக்கேற்றி வழிபடும் போது பிள்ளைகளைப் பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- பிள்ளைகளுடன் இணைந்து நீங்களும் இச்செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 3.0** : திருமுறைப்பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பஞ்சபுராணத்தையும், தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு** : மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகத்தினைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம்.

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- திருவாசகத்தின் சிறப்பினை அறிவார்.
- திருவாசகத்தினை மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- திருவாசகத்தினை எழுத்துப்பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவார்.
- திருவாசகம் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் சொல்லும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.
- திருவாசகத்தின் பொருள் விளக்கத்தையும் அவை பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1**:
- மாணவர்களிடம் திருவாசகம் பற்றி வினவுங்கள். அது பற்றி கலந்துரையாடுங்கள்.
- திருவாசகத்தைப் பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- பாடலை ஒலிப்பேழையில் ஒலிக்கச்செய்யுங்கள்.

**படி 1.1.2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள். செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**
- குழுச்செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் தொடர்பாக ஏனைய குழுவினரின் விமர்சனக்கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4:**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- திருப்பெருந்துறையில் அருளப்பட்டது ஆகும்.
- திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என சிறப்பிக்கப்படுகிறது. திருவாசகத்தில் முதலில் விளங்குவது சிவபுராணம் ஆகும்.
- சிவபுராணத்தில் செருக்கு, சினம், சிறுமை, இழிவரல், மாண், பிறந்தமானம், என்ற ஆறு பகையினை விலக்குவதற்கு வா ஆழ்க என்றுள்ளது.
- திருவாசகம் என்பது தமிழ்மறையாய், எட்டாம் திருமுறையாய், சிவமந்திரமாய், சிவானுபச் செல்வமாய் விளங்குவது ஆகும்.
- இது நூற்றெட்டு உபநிடதங்களின் சாரமாக விளங்குகின்றது.

  தேன் மலரிலிருந்து வண்டு தரக்கிடைப்பது. வாதவூரராகிய வண்டு வேதாகமங்களாகிய மலர்களிலிருந்து எடுத்துச் சுவைபட வழங்கிய தேன் திருவாசகம் ஆகும்.
- தேன் - தானுங்கெடாது, தன்னைச் சார்ந்த பொருளையும் கெடவிடாது. அதுபோல் திருவாசகம் தானும் அழியாது நின்று, தன்னை ஓதுவாரையும் பிறவித்துயரில் வீழ்ந்து அழியாத அருட்பாங்கினை வழங்குவது. திருவாசகம் அறியாமையை அகற்றி சிவபோகமாகிய பேரின்பத்தைத் தரும்.
- திருவாசகம் சொற்சுவை, பொருட்சுவை என்பன ஒருங்கே அமையப் பெற்றது ஆகும்.
- திருவாசகம் மாணிக்கவாசகர் சொல்ல இறைவன் எழுதிய சிறப்பினை உடையது. மாணிக்கவாசகருடைய மனத்திலே இறைவன் தன்னை அடைந்தவர் அன்பில்லாதவராயினும் பாடிப் பணிகின்றவர்களுக்கு அருள்புரிவார் என்ற எண்ணம் திருவருளால் உண்டாயிற்று. உடனே திருவாசகத்தைப் பாடினார்.
- போற்றி ஓம் நமச்சி வாய.. புயங்கனே மயங்கு கின்றேன்.....

  ஓம் நமச்சிவாய, புயங்கனே பிராரத்த வினையால் அறிவு மயங்குகின்றேன், காத்தருள்க, ஓம் நமச்சிவாய நான் அடைக்கலமாக அடையத் தகுந்த நின்னை யொழியப் பிறிதொன்றில்லை, ஆதலாற் காத்தருள்க, ஓம் நமச்சிவாய என்னைப் புறத்தே போகவிடாதே, காத்தருள்க, ஓம் நமச்சிவாய காத்தருள்க, நின் புகழ் வெல்க வெல்க, காத்தருள்க காத்தருள்க என்பதாம்.
  - பக்தியுணர்வுடனும் இசையுடனும் பாடுதல் வேண்டும்.
  - ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் சொல்லுதல் வேண்டும். பொருள் உணர்ந்து பாடுதல் வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் : -**

- திருவாசகம், போற்றிஓம் நமச்சிவாய பாடல் எழுதிய அட்டை
- ஒலிப்பேழை
- செயற்பாட்டுப்பத்திரம்

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- திருவாசகம் யாரால்? எங்கே பாடப்பட்டது? என்பதைக் கூறுவார்.
- சிவபுராணத்தின் சிறப்பினை விளக்குவார்.
- சிவபுராணத்தை மனனம் செய்து பக்தியுணர்வுடனும் இசையுடனும் பாடுவார்.
- சிவபுராணம் பாடிய சந்தர்ப்பத்தினை விளக்குவார்.

## மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம் இணைப்பு 1.1.1

குழு 1
- திருவாசகத்தின் சிறப்பினை விளக்குங்கள்.
- திருவாசகம் பாடிய சந்தர்ப்பத்தை விளக்குங்கள்.
- திருவாசகம் பாடும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை?

குழு 2
- திருவாசகத்தை மனனம் செய்து கொள்ளுங்கள்.
- போற்றிஓம் நமச்சி வாய.. பாடலைப் பக்தியுடனும் இசையுடனும் பாடுங்கள்
- பாடலைத் தொடர்ந்து அதன் பொருளை விளக்கிக் கூறுங்கள்

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ....................................................................................................................
2. ....................................................................................................................
3. ....................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் சுவாமி அறையில் காலை மாலை விளக்கேற்றி வழிபடும் போது பிள்ளைகளைப் பக்தியுணர்வுடனும் இசையுடனும் பாட வழிப்படுத்துங்கள்.
- பிள்ளைகளுடன் இணைந்து நீங்களும் இச்செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 3.0** : திருமுறைப்பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பஞ்சபுராணத்தையும் , தோத்திரப்பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு** : திருவிசைப்பாப் பாடல்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம்.

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்** :

- திருவிசைப்பாவினது சிறப்பினை அறிவார்.
- திருவிசைப்பாவினை மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- எழுத்துப்பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவார்.
- திருவிசைப்பாவினை பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் சொல்லும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.
- திருவிசைப்பாவினது பொருள் விளக்கத்தையும் அவை பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1.1.1:**
- மாணவர்களுக்குத் தெரிந்த திருவிசைப்பாப் பாடல்களைக் கேட்டறியுங்கள்.
- அவற்றில் ஒன்றை பண்ணுடன் பாட இடமளியுங்கள்.
- "நையாத மனத்தினை..." எனும் பாடலைப் பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- பாடலை ஒலிப்பேழையில் ஒலிக்கச்செய்யுங்கள்.

**படி 1.1.2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தர உள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3 :**
- குழுச்செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனையை வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவு படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4:**
- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- திருவிசைப்பா ஒன்பது அடியார்களால் பாடப்பட்டது ஆகும்.
- "நையாத மனத்தினை..." எனும் திருவிசைப்பா பாடியவர் கருவூர்த்தேவர் ஆவார்.
- திருவிசைப்பா பன்னிரு திருமுறைகளில் ஒன்பதாந் திருமுறையில் அடங்குகின்றது.

- திருவிசைப்பா பாடிய ஒன்பது அடியார்கள்

  | | |
  |---|---|
  | திருமாளிகைத்தேவர் | சேதிராயர் |
  | கருவூர்த்தேவர் | வேணாட்டடிகள் |
  | கண்டாராதித்தர் | திருவரியமுதனார் |
  | புருடோத்த நம்பி | சேந்தனார் |
  | பூந்துருத்தி நம்பிகாடநம்பி | |

- "நையாத மனத்தினை..." எனும் திருவிசைப்பா பாடல் திரைலோக்கிய சுந்தரம் எனும் இடத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் பாடப்பட்டது.
- திருவிசைப்பா என்பது தெய்வத்தன்மை பொருந்திய இசையுடன் பாடப்படும் பாடலாகும்.
- திருவிசைப்பா பாடும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை
  - பாடமுன்பும் பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் சொல்லுதல் வேண்டும்.
  - எழுத்துப்பிழையின்றி உச்சரித்துப் பொருளுணர்ந்து பண்ணோடு பாட வேண்டும்.
  - மனனம் செய்தல் வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருமுறைத்தொகுப்பு, இறுவட்டு, ஒலிநாடா
- டிமைன் கடதாசி, செயற்பாட்டுப்பத்திரம், பாடல் எழுதப்பட்ட அட்டை

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- திருவிசைப்பா எத்தனையாம் திருமுறையில் அடங்குகின்றது? என அறிந்து கூறுவார்.
- திருவிசைப்பாவினை பாடியவர்கள் யாவர்? எனக் குறிப்பிடுவார்.
- திருவிசைப்பாவினை பண்ணோடு பொருளுணர்ந்து பக்தியுடன் பாடுவார்.
- திருவிசைப்பாவினை வரிக்கிரமமாக எழுதுவார்.

## மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம் இணைப்பு 1.1.1

குழு 1 • திருவிசைப்பா பாடிய ஒன்பது அடியார்களையும் பட்டியற்படுத்துக

குழு 2 • "நையாத மனத்தினை" எனும் திருவிசைப்பா பாடலைப் பண்ணோடு குழுவாக சேர்ந்து பாடிக்காட்டுக.

குழு 3 • பாடலை வரிக்கிரமமாக எழுதுக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ....................................................................................................................
2. ....................................................................................................................
3. ....................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் சுவாமி அறையில் காலை மாலை விளக்கேற்றி வழிபடும் போது பிள்ளைகளை பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- பிள்ளைகளுடன் இணைந்து நீங்களும் இச் செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 3.0** : திருமுறைப்பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பஞ்சபுராணத்தையும், தோத்திரப்பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு** : சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டினைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம்.

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்** :

- திருப்பல்லாண்டின் சிறப்பினை அறிவார்.
- திருப்பல்லாண்டினை மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார். எழுத்துப்பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவார்.
- திருப்பல்லாண்டினைப் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் சொல்லும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.
- திருப்பல்லாண்டின் பொருள் விளக்கத்தையும் அவை பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்

**படி 1.1.1:**
- மாணவர்களுக்குத் தெரிந்த திருப்பல்லாண்டுப் பாடல்களைக் கேட்டறியுங்கள். அவற்றில் ஒன்றைப் பண்ணுடன் பாட இடமளியுங்கள்.
- ''சொல்லாண்ட சுருதி.....'' எனும் பாடலைப் பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- பாடலை ஒலிப்பேழையில் ஒலிக்கச் செய்யுங்கள்.

**படி 1.1.2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**
- குழுச்செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனையை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக்கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4:**
- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- பன்னிரு திருமுறைகளில் திருப்பல்லாண்டும் அடங்குகின்றது. அது ஒன்பதாம் திருமுறையில் உள்ளது.
- திருப்பல்லாண்டு சேந்தனாரால் பாடப்பட்டது ஆகும்.
- திருப்பல்லாண்டு இறைவனைப் பல்லாண்டுகள் வாழ்க என வாழ்த்திப்பாடும் பாடல் ஆகும்.
- திருப்பல்லாண்டு சிதம்பரத்தில் திருவாதிரைத் தேர்த்திருவிழாவின் போது தேர்ச்சில்லுகள் சேற்றில் அழுத்தி, தேர் ஓடாது நின்ற போது இறைவனுடைய அசரீரி வாக்கிற்கு ஏற்ப சேந்தனரால் பாடப்பட்டது ஆகும். அப்போது தேர்ச்சில்லுகள் உருண்டன. இச்சந்தர்ப்பத்திலேயே சேந்தனாரால் பல்லாண்டு பாடப்பட்டதாகும்.
- திருப்பல்லாண்டின் முதற்பாடல் "மன்னுகதில்லை...." என்பதாகும். திருப்பல்லாண்டுப் பாடல்கள் எல்லையில்லாத இன்பத்தை ஈந்தருளும் இன்னருள் அமுதமாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் : -**
- திருமுறைத்தொகுப்பு
- இறுவட்டு, ஒலிநாடா, டிமைன் கடதாசி, செயற்பாட்டு படிவம்.

**படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்**
- திருப்பல்லாண்டு எத்தனையாம் திருமுறையில் அடங்குகின்றது எனக் குறிப்பிடுவார்.
- திருப்பல்லாண்டு பாடிய சந்தர்ப்பத்தை குறிப்பிடுவார்.
- திருப்பல்லாண்டைப் பண்ணோடும் பக்தியோடும் இறைவனைப் போற்றிப் பாடுவார்.
- திருப்பல்லாண்டை வரிக்கிரமமாக எழுதுவார்.

**மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம் இணைப்பு 3.1.1**

குழு 1
- திருப்பல்லாண்டு பாடல் யாரால் எச்சந்தர்ப்பத்தில் எத்தலம் மீது பாடப்பட்டது?
- பாடலைக் குழுவாக இணைந்து பண்ணோடு பாடிக்காட்டுக?

குழு 2
- பாடலை வரிக்கிரமமாக எழுதுக
- திருப்பல்லாண்டின் சிறப்புக்களை குறிப்பிடுக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ....................................................................................................................
2. ....................................................................................................................
3. ....................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் சுவாமி அறையில் காலை மாலை விளக்கேற்றி வழிபடும் போது பிள்ளைகளை பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- பிள்ளைகளுடன இணைந்து நீங்களும் இச்செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 3.0** : திருமுறைப்பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பஞ்சபுராணத்தையும், தோத்திரப்பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு** : திருமூலர் பாடிய திருமந்திரப் பாடலை பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம்.

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்** :

- திருமந்திரத்தின் சிறப்பினை அறிவார்.
- திருமந்திரத்தினை மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- திருமந்திரத்தினை பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் சொல்லும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.
- எழுத்துப்பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவார்.
- திருமந்திரத்தினது பொருள் விளக்கத்தையும் அவை பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1.1.1:**

- மாணவர்களுக்குத் தெரிந்த திருமந்திரப்பாடல்களைக் கேட்டறியுங்கள். அவற்றைப் பண்ணுடன் பாட இடமளியுங்கள்.
- "சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை..." எனும் பாடலை பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- பாடலை ஒலிப்பேழையில் ஒலிக்கச் செய்யுங்கள்.

**படி 1.1.2:**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு பத்திரங்களை வழங்குங்கள். செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**

- குழுச்செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனையை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றி தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக்கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4:**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- திருமந்திரம் பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருறையில் அடங்குகின்றது.
- திருமூலரால் பாடப்பட்டதாகும். திருமந்திரம் ஒன்பது தந்திரங்களையும் 3000 பாடல்களையும் கொண்டதாகும்.
- திருமந்திரம் சைவசமய தத்துவக் கருத்துக்களையும் (முப்பொருள், மூவகை உயிர், நால்வகை நெறி) நாம் பின்பற்றவேண்டிய அறச் செயல்களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.
- திருமந்திரப் பாடலைப் பாடும் போது கவனிக்க வேண்டியவை.
  - ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் சொல்லுதல் வேண்டும்.
  - எழுத்துப்பிழையின்றி உச்சரித்துப் பண்ணோடும் பக்தியோடும் பாடுதல் வேண்டும்.
  - மனனம் செய்து கொள்ளுதல் வேண்டும்.
  - உரியமுறைப்படி வரிக்கிரமமாக எழுதுதல் வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் : -**

- திருமுறைத் தொகுப்பு, திருமந்திரங்கள், பாடல் எழுதிய அட்டை
- இறுவட்டு, ஒலிநாடா, டிமைன் கடதாசி, செயற்பாட்டுப் படிவம்.

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- திருமந்திரம் எத்தனையாம் திருமுறையில் அடங்குகின்றது? எனக் கூறுவார்.
- திருமந்திரம் எத்தனை பாடல்களை கொண்டது? என்பதை அறிந்து கூறுவார்.
- திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ள அறச் செயல்களைப் பட்டியற்படுத்துவார்.
- திருமந்திரத்தை வரிக்கிரமமாக எழுதுவார்.

## இணைப்பு 3.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1
- திருமந்திரப்பாடலை குழுவாக இணைந்து பண்ணுடனும் பக்தியுடனும் பாடுங்கள்.
- திருமந்திரப் பாடலில் குறிப்பிட்டுள்ள அறச்செயல்களைப் பட்டியற்படுத்துங்கள்.
- பாடலை வரிக்கிரமமாக எழுதுக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..........................................................................................................................

2. ..........................................................................................................................

3. ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் சுவாமிஅறையில் காலை மாலை விளக்கேற்றி வழிபடும் போது பிள்ளைகளைப் பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- பிள்ளைகளுடன் இணைந்து நீங்களும் இச்செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 3.0** : திருமுறைப்பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பஞ்சபுராணத்தையும், தோத்திரப்பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு** : சேக்கிழார் பாடிய பெரியபுராணப் பாடலைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம்.

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்** :

- பெரியபுராணத்தினது சிறப்பினை அறிவார்.
- பெரியபுராணத்தினை மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- பெரியபுராணத்தினை எழுத்துப்பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவார்.
- பெரியபுராணம் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் சொல்லும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.
- பெரியபுராணத்தின் பொருள் விளக்கத்தையும் அவைகள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1.1.1:**
- மாணவர்களுக்குத் தெரிந்த பெரிய புராணப் பாடல்களைக் கூற இடமளியுங்கள்.
- பெரிய புராணப் பாடல்களைப் பாடும் போது பண்ணுடன் பாட இடமளியுங்கள்.
- “ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள....” எனும் பாடலைப் பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- பாடலை ஒலிப்பேழையில் ஒலிக்கச் செய்யுங்கள்.

**படி 1.1.2 :**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3 :**
- குழுச்செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனையை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றி தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4 :**
- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- பஞ்சபுராணத்தொகுதியில் திருப்பல்லாண்டுக்கு அடுத்து வருவதாகும். பெரியபுராணத்தைப் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் சொல்லுதல் வேண்டும்.

- பெரியபுராணத்தை எழுத்துப் பிழையின்றி உச்சரித்து பண்ணோடு பாடவேண்டும்.
- மனனம் செய்து பாட வேண்டும்.
- பெரிய புராணத்தை உரிய விதிகளின் படி வரிக்கிரமமாக எழுதுதல் வேண்டும்.
- ''ஐந்துபேரறிவும்.....''

  சேக்கிழார் சுவாமிகளால் பாடப்பட்டதாகும். இங்கு சுந்தரர் தில்லையம்பதிக்கு சென்று தூலலிங்கத்தை வழிபட்டு பின் வேதவொலியும் ஆகம கீத ஒலியும், தேவார நாதவொலியும், ஆடல் ஒலியும் வேள்விப் புகையும் மிகுந்த திருவீதியை வணங்கி அடியார்களும் முனிவர்களும் நெருங்கியுள்ள திருக்கோயிலுக்குள் சென்று பொன்னம்பலத்துக்கு முன்னின்று நடேசப்பெருமானைக் கண்குளிரக் கண்டார். அவ்வேளை மதுவுண்ட வண்டு போல் கூப்பியகரத்துளன் அசைவற்று நின்ற சுந்தரரின் பக்திப்பரவசத்தினைப் பாடுகிறார்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பெரியபுராணம், பாடல் எழுதப்பட்ட அட்டை.
- இறுவட்டு, ஒலிநாடா, டிமைன் கடதாசி, பேனா, செயற்பாட்டுப் பத்திரம்.

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- ''ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள....'' யாரால் பாடப்பட்டது? எனக் கூறுவார்.
- 63 நாயன்மார்களுள் எந்த நாயனார் பற்றிப் பாடப்பட்டது? எனக் கூறுவார்.
- பெரியபுராணம் பாடும் போது இறைவனைப் பக்தியுடன் பாடி குறைகள் இன்றி வாழலாம் என்பதை விளக்குவார்.
- பெரிய புராணத்தை வரிக்கிரமமாக விளக்குவார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1,2
- பெரியபுராணத்தில் யாரைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது?
- ''ஐந்து பேரறிவும்....'' எனும் பாடல் எந்நாயனாருடைய பக்தி பரவச நிலையை பற்றிக் குறிப்பிடப்படுகிறது?
- அப்பக்தி நிலை எந்த தல இறைவன் மீது ஏற்பட்டது? எனக் குறிப்பிடுங்கள்
- பாடலை வரிக்கிரமமாக எழுதுங்கள்.
- பாடலின் கருத்தினை விளக்கமாக எடுத்துக்காட்டுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக

  1. ..........................................................................................................
  2. ..........................................................................................................
  3. ..........................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் சுவாமிஅறையில் காலை மாலை விளக்கேற்றி வழிபடும் போது பிள்ளைகளைப் பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- பிள்ளைகளுடன் இணைந்து நீங்களும் இச்செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 3.0** : திருமுறைப்பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பஞ்சபுராணத்தையும், தோத்திரப்பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு** : அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் பாடலை பக்தியோடு பாடுவோம்.

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்** :

- திருப்புகழின் சிறப்பினை அறிவார்.
- திருப்புகழை மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- எழுத்துப்பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவார்.
- திருப்புகழினது பொருள் விளக்கத்தையும் அவை பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1:**
- மாணவர்களுக்குத் தெரிந்த தோத்திரப்பாடல்களைக் கேட்டறியுங்கள்.
- அவற்றைப் பண்ணுடன் பாட இடமளியுங்கள்.
- "கைத்தல நிறைகனி...." எனும் பாடலைப் பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- பாடலை ஒலிப்பேழையில் ஒலிக்கச் செய்யுங்கள்.

**படி 1.1.2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**
- குழுச் செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றி தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக்கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4:**
- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- தோத்திரப்பாடல்களில் திருப்புகழ், சகலகலாவல்லி மாலை, அபிராமி அந்தாதி என்பனவும் அடங்குகின்றன.
- திருப்புகழ் அருணகிரிநாதரால் பாடப்பட்ட ஒன்றாகும்.

- அருணகிரிநாதர் ஒரு முருக பக்தர். அவர் முருகப் பெருமானின் புகழை திருப்புகழில் பாடியுள்ளார். இதில் முருகப் பெருமானின் பெருமை பற்றி கூறப்பட்டுள்ளது.
- முருகப்பெருமானே "முத்தைத்தரு...." என அடியெடுத்துக் கொடுக்க திருப்புகழை பாடினார்.
- இவர் 16000 திருப்புகழைப் பாடியருளியுள்ளார்.
- தமிழகத்தில் திருவண்ணாமலை, பழனி, திருச்செந்தூர், திருத்தணிகை, இலங்கையில் கதிர்காமம் முதலான தலங்கள் மீது பாடியுள்ளார்.
- "கைத்தல நிறைகனி...." எனும் திருப்புகழ் விநாயகர் துதியாக அமைந்துள்ளது. இதில் விநாகயருடைய அருட்திறத்தையும் அற்புதங்களையும் பற்றிப் பாடியுள்ளார்.

**தரவிருத்தி உள்ளீடுகள் : -**

- திருப்புகழ் எழுதப்பட்ட அட்டை
- எழுதுகருவி, செயற்பாட்டுப் படிவம், ஒலிப்பேழை

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- தோத்திரப் பாடல்கள் என்பதற்கு விளக்கம் கூறுவார்.
- திருப்புகழ் என்பதன் விளக்கத்தைக் குறிப்பிடுவார்.
- தோத்திரப் பாடல்களைப் பட்டியற்படுத்துவார்.
- திருப்புகழை மனனம் செய்து பக்தியுடனும் சந்தத்துடனும் பாடுவார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1
- தோத்திரப் பாடல்கள் என்பதன் விளக்கத்தைத் தருக
- தோத்திரப் பாடல்களைப் பட்டியற்படுத்துக.

குழு 2
- திருப்புகழ் யாரால் பாடப்பட்டது?
- திருப்புகழில் கூறப்பட்டுள்ளவை எவை?
- "கைத்தல நிறைகனி...." எனும் திருப்புகழ் யார் மீது பாடப்பட்டுள்ளது? அப்பாடலில் கூறப்பட்டுள்ளவை யாவை?

குழு 3
- திருப்புகழை மனனம் செய்து, குழுவாக இணைந்து பொருளுணர்ந்து சந்தத்துடன் பாடுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக

  1. ..................................................................................................................
  2. ..................................................................................................................
  3. ..................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் சுவாமிஅறையில் காலை மாலை விளக்கேற்றி வழிபடும் போது பிள்ளைகளை பண்ணுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- பிள்ளைகளுடன் இணைந்து நீங்களும் இச்செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 4.0** : சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : ஆன்மீக வழியில் தலயாத்திரை பற்றி அறிந்து தமது வாழ்வில் பேணும் முறையை எடுத்துரைப்பார்.

**செயற்பாடு** : ஆன்மீக வளர்ச்சியில் தலயாத்திரை பற்றி அறிந்து கொள்வோம்.

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- தலயாத்திரை சைவ மக்களின் வாழ்வில் பெறும் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- தலயாத்திரையின் ஆன்மீக முக்கியத்துவத்தைக் கூறுவார்.
- தலயாத்திரை மூலம் இறைபக்தியும் ஆன்மீக விருத்தியும் ஏற்படும் என்பதை விவரிப்பார்.
- தலயாத்திரை மூலம் வளர்க்கப்படும் விழுமியங்களைத் தனிமனித வாழ்விலும், சமூக வாழ்விலும் கடைப்பிடித்து நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1.1.1:**
- மாணவர்களிடம் ஆலயங்களுக்குச் செல்லல் தலயாத்திரை செய்தல் என்பவற்றுக்கு இடையிலான நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- அவர்கள் சென்ற உள்நாட்டு, வெளிநாட்டுத் தலயாத்திரை பற்றிய தகவல்களைக் கேட்டறியுங்கள்.
- தலயாத்திரையின் மூலம் நாம் அடையும் பயன்களை விளக்குங்கள்.

**படி 1.1.2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக்களைப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**
- குழுச்செயற்பாட்டின் போது மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றிக் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்குங்கள்.
- தலயாத்திரை என்பது பல்வேறு தலங்களுக்கும் சென்று எமது ஆன்மீக அறிவை வளர்த்துக் கொள்வதாகும்.
- தலயாத்திரையானது இருவகைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.
    - உள்நாட்டு தலயாத்திரை.
    - வெளிநாட்டு தலயாத்திரை

- தலயாத்திரையால் இறைபக்தியும், மனஅமைதியும் கிடைக்கின்றன.
- தலயாத்திரை மேற்கொள்ளும் திருத்தலங்களைக் காலத்தால் முந்தியவை, பாடல்பெற்றவை, சமகாலத்தில் எழுச்சி பெற்றவை எனவும் மூலவரைக் கொண்டும் வகைப்படுத்தப்படும்.
- தலயாத்திரை ஒன்றைத் தொடங்குமுன் அதனை மேற்கொள்வோர் தமது யாத்திரையின் ஒழுங்கு முறையைத் திட்டமிட்டுக் கொள்வது அவசியமாகும்.
- யாத்திரை புறப்படுமுன் விநாயகப்பெருமானை வேண்டி அவரிடம் அருளாசி பெற்று தமது பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.
- உடல், உளத்தூய்மையுடன், சைவபோசனம் உடையவராய் இறைசிந்தனையுடன் தமது பயணத்தைத் தொடங்க வேண்டும்.
- எமது நாட்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க பல ஆலயங்கள் உள்ளன.
- கதிர்காமம், திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், மாவிட்டபுரம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம், உகந்தை முருகன் கோயில், தாந்தாமலை, வல்லிபுர ஆழ்வார் கோயில், நகுலேச்சரம், தெவிநுவர விஷ்ணு ஆலயம்என்பவற்றைக் குறிப்பிடலாம்.
- எமது சமயத்தை வளர்த்த பலநூறு ஆலயங்கள் தமிழ் நாட்டில் இராமேஸ்வரம் முதல் திருக்கேதாரம் வரை உள்ளன.
- தலயாத்திரையானது குடும்பத்தினர் உற்றார் உறவினர் அல்லது ஊர் அடியவர்கள் சேர்ந்து மேற்கொள்ளும் வழமை உள்ளது.
- காலங்காலமாகப் பின்பற்றப்படும் இந்நடைமுறையானது சமூக நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும், சமூக உறவுகளையும் வளர்க்க உதவும், மனநிறைவு, ஆன்மீக ஈடுபாட்டில் வளர்ச்சி, கலையார்வம், சமூகப் புரிந்துணர்வு, வரலாற்று மூலங்கள் அறியப்படுதலும் பேணப்படுதலும்
- நாயன்மார்களின் வரலாறுகளில் தலயாத்திரையின் முக்கியத்துவத்தைக் காணலாம்.
- தலயாத்திரை மேற்கொள்வதன் பயனாக கலைக் கருவூலங்களைக் கண்டு இரசிக்கலாம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் : -**

- தலயாத்திரை பற்றிய படங்கள், வீடியோக்கள்
- செயற்பாட்டுப்பத்திரம்
- எழுது கருவிகள்

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- தலயாத்திரையின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவார்.
- தலயாத்திரை மேற்கொள்ளும் போது பின்பற்ற ேண்டிய நடைமுறைகளை விளக்குவார்.
- யாத்திரை மேற்கொள்ள வேண்டிய ஆலயங்களைப் பட்டியற் படுத்துவார்.
- அடியார்களுடன் சேர்ந்து தலயாத்திரை மேற்கொள்வார்.
- தலயாத்திரை மூலம் வளர்க்கப்படும் பண்பாட்டுக் கூறுகளை மதித்து வாழப் பழகுவார்.
- தலயாத்திரை மூலம் சமூக நல்லிணக்கத்தையும் ஆன்மீக விருத்தியையும் வளர்த்துக் கொள்வார்

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1
- தலயாத்திரை என்றால் என்ன?
- சமய வாழ்விற்கும், தலயாத்திரைக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.
- நீங்கள் உங்கள் குடும்பத்தினருடன் மேற்கொண்ட தலயாத்திரையைப் பற்றிக் குறிப்பிடுக.

குழு 2
- நீங்கள் கதிர்காமத்திற்கு உங்கள் பெற்றோருடனும், வகுப்பு நண்பர்களுடனும் செல்லப் போகின்றீர்கள் எனக் கருதிக் கொண்டு, அதற்கான ஆயத்தங்களைத் திட்டமிட்டு எழுதிக்காட்டுக.

குழு 3
- சமயகுரவர் நால்வரும் செய்த தலயாத்திரைகள் நான்கினை எழுதி அப்போது அவர்கள் செய்த அற்புதங்கள் அல்லது சமூகப் பணிகளை விளக்குக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ........................................................................................................................
2. ........................................................................................................................
3. ........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- நீங்கள் தலயாத்திரை மேற்கொள்ளும் போது பிள்ளைகளையும் அதில் ஈடுபடுவதை ஊக்குவியுங்கள்.
- தலயாத்திரையின் உயர்வையும், அவசியத்தையும் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறுங்கள்.
- தலயாத்திரையின் மூலம் எவ்வாறு தனிமனித வாழ்வையும், சமூக வாழ்வையும் செம்மைப்படுத்தலாம் என்பதைக் கலந்துரையாடுங்கள்.

**தேர்ச்சி 5.0** : சைவசமய குரவர்கள், சமயப்பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : சமயகுரவர்கள் வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகும் முறையை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு** : நாயன்மார்களின் வரலாறுகளுக்கூடாக நாற்பாதங்களை அறிந்து அவற்றை வாழ்வில் பின்பற்றுவோம்.

**நேரம்** : 04 பாடவேளைகள்.

**கற்றற் பேறுகள்** :

- சமயகுரவர் நால்வரும் இறைவன் அருள் பெற்றவர்கள் என்பதை அறிந்து கொள்வார்.
- சமய குரவர்கள் நால்வரும் இறைபக்தியுடன், அற்புதங்களைச் செய்து மக்களின் துன்பங்களை நீக்கினார் என்பதைக் கதைகளினூடாக விபரிப்பார்.
- சமய குரவர்கள் நாற்பாதங்களின் வழிநின்று எம்மையும் வழிப்படுத்தியமையையும் விளங்கிக் கொள்வார்.
- சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நெறிகளை அறிந்து அவற்றைப் பின்பற்றுவார்.
- சைவ நாற்பாதங்களைப் பின்பற்றுவதன் பயன்களைத் தேடி அறிவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1:**
- மாணவர்களை நாயன்மார்களின் வரலாறுகள் மூலம் அவர்கள் அறிந்த சமயப்பணிகளைக் கூற இடமளியுங்கள்.
- சமயகுரவர்கள் நால்வரினதும் நின்ற நெறிகளைக் கேட்டு, விளக்கம் கூற வழி காட்டுங்கள்.
- சைவ சமயத்தில் ஆன்ம ஈடேற்றத்திற்கான வழிமுறைகளே சைவ நாற்பாதங்கள் என்பதையும் அதன்வழி நின்று இறைவனை அடைய வழிகாட்டியவர்கள் சமய குரவர்கள் நால்வர் என்பதையும் விளக்குங்கள்.

**படி 1.1.2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**
- குழுச்செயற்பாட்டின் போது மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினர் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4:**

- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்குங்கள்.
- ''பிறவாமையாகிய பேரின்பப் பெருவாழ்வை அடைதலே மனிதப் பிறவியின் இறுதி இலட்சியம்'' என்று சைவசமயம் கூறுகிறது.
- இந்த ஆன்மீக இலட்சியத்தை அடையும் வழிமுறைகளாக சைவ நாற்பாதங்கள் விளங்குகின்றன.
- எனவே நாயன்மார்கள் நாற்பாதங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டி ஆன்மீக ஈடேற்றத்திற்கு வழிகாட்டினர்.
- இவற்றின் சிறப்பினை தாயுமானவர் ''விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்பு மலர் காய் கனி போல் அன்றோ பராபரமே'' என எடுத்துக் கூறுகின்றார்.

- **சரியை**
    - சரியை என்பது சரீரத்தால் சிவாலயத்திற்கும் சிவனடியார்களுக்கும் செய்கின்ற புறத்தொண்டுகள் ஆகும்.
    - ஆலயங்களில் இறைவழிபாட்டின் பொருட்டுத் திருக்கோயிலைக் கூட்டுதல், மெழுகுதல், கழுவுதல், பூ, பத்திரம் எடுத்தல், பூமாலை கட்டுதல், இறைவன் புகழ்பாடுதல், சிவனடியார்களுக்குத் தண்ணீர் பந்தல் அமைத்தல், அவர்களுக்குச் சத்திரம் அமைத்து உணவும், உடையும் வழங்குதல் போன்றவை சரியைத் தொண்டுகளில் அடங்கும்.
    - சரியை வழிபாட்டை நான்காக வகுக்கலாம்.
        - சரியையிற் சரியை - ஆலயத்தொண்டுகள்
        - சரியையிற் கிரியை - ஒரு மூர்த்தியை வழிபடல்
        - சரியையில் யோகம்- வழிபடும் மூர்த்தியைத் தியானித்தல்
        - சரியையில் ஞானம் - சரியை வழிபாட்டால் அனுபவம் வாய்க்கப் பெறல்
    - சரியைநெறி நின்றோர் பெறும் முத்தி - சாலோகம். இறைவனுடன் வாழ்தல் அதாவது சிவபெருமான் திருமேனிகொண்டு எழுந்தருளி இருக்கும் உலகில் வீற்றிருந்து, அவ்வுலக போகங்களை அனுபவித்தல்.
    - இந்நெறியானது இறைவனை ஆண்டானாகவும் பக்தரை அடிமையாகவும் பாவனைச் செய்வதால் தாசமார்க்கம் எனவும் அழைக்கப்படும். திருநாவுக்கரசர் இந்நெறி நின்று முத்தியடைந்தார்.
- **கிரியை நெறி**
    - இறைவனை அகத்தாலும் புறத்தாலும் பூசித்தல். அதாவது சிவபெருமானது அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்க மூர்த்தியை அணுகி அப்பெருமானை மந்திரம், கிரியை, பாவனை என்னும் மூன்றாலும் அகத்தினாலும், புறத்தினாலும் வழிபடல்.
    - திருவுருவை அபிஷேகம், அலங்காரம், தீப தூப ஆராதனை செய்தல், தோத்திரம் பாடல், பிரார்த்தனை செய்தல் முதலானவை கிரியைத் தொண்டுகளாகும்.

- கிரியை நான்கு வகைப்படும்
    - கிரியையிற் சரியை - பூசைப் பொருட்களை ஆயத்தம் செய்தல்
    - கிரியையிற் கிரியை - புறத்தில் பூசித்தல்.
    - கிரியையில் யோகம் - அகத்தில் பூசித்தல்.
    - கிரியையில் ஞானம்- கிரியையில் ஒரு அனுபவம் வாய்க்கப் பெறுதல்.
- கிரியை நெறி நின்றோர் அடைகின்ற முக்தி - சாமீபம் மைந்தருக்குரிய உரிமையோடு சிவனுக்கு அருகில் இருந்து போகங்களை நுகர்தல்.
- இந்நெறியானது இறைவனை தந்தையாகவும் அடியவரை புதல்வராகவும் பாவனை செய்வதால் சற்புத்திரமார்க்கம் எனவும் அழைக்கப்படும். திருஞானசம்பந்தர் இந்நெறி நின்று முத்தி அடைந்தார்.

- **யோக நெறி**
    - யோகம் என்பது அகத்தால் மட்டும் இறைவனை வழிபடுதலாகும். உள்ளத்தால் இறைவனுடன் சேர்ந்துறைதல் எனவும் பொருள்படும்.
    - யோகம் எட்டு அங்கங்களை உடையது. இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன அவையாகும். இதனை நான்காக வகைப்படுத்தலாம்.
    - யோக நெறி நான்கு வகைப்படும்
        - யோகத்தில் சரியை - இயமம்,நியமம்,ஆசனம், பிராணாயாமம்
        - யோகத்தில் கிரியை - பிரத்தியாகாரம், தாரணை
        - யோகத்தில் யோகம் - தியானம்
        - யோகத்தில் ஞானம் - சமாதி
    - யோகநெறி நின்றோர் அடைகின்ற முத்தி சாரூபம், சிவலோகத்தில் தோழர் போல ஒத்த உருவும் பெயரும் பெற்று இறைவனுடன் அளவளாவி இருக்கும் உரிமை பெற்றிருத்தல்.
    - இந்நெறியானது பக்தன் தன்னை இறைவனின் தோழனாக கருதுவர். எனவே இது சகமார்க்கம் எனவும் அழைக்கப்படும்.
    - இந்நெறி நின்று முத்தி பெற்றவர் சுந்தரமூர்த்தி நாயனார்.
- **ஞானநெறி**
    - ஞானம் என்பது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் இலக்கணங்களை அறிவிக்கும் நூல்களைக் கேட்டு, சிந்தித்து, தெளிந்து, நிட்டை கூடல் என்னும் நான்கு படிநிலைகளை உடையது.
    - இதனை மேலும் நான்காக வகுக்கலாம்.
        - ஞானத்தில் சரியை - கேட்டல்
        - ஞானத்தில் கிரியை - சிந்தித்தல்
        - ஞானத்தில் யோகம் - தெளிதல்
        - ஞானத்தில் ஞானம் - நிட்டைகூடல்
        - ஞான நெறி நின்றோர் அடைகின்ற முத்தி சாயுச்சியம்.
    - இது ஆன்மாவானது சிவனொடு இரண்டறக் கலந்து நிற்கும் பேரின்ப நிலையாகும்.
    - நாயகன் நாயகி உறவு நிலையில் ஞானமார்க்கம் - சன்மார்க்கம் எனவும் அழைக்கப்படும்
    - இந்நெறி நின்று முத்தி அடைந்தவர் மாணிக்கவாசகர்.
    - சரியை, கிரியை யோகத்தால் பெறுவது ஞானம் . ஞானத்தால் அடைவது முத்தி ஆகும்.
    - ஒவ்வொரு மனிதனும் தன்னாலியன்ற சாதனைகளைக் கடைப்பிடித்து முத்தி இன்பம் பெற முயற்சிக்க வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் : -**

- சைவ நாற்பாதங்கள் தொடர்பான அட்டவணைகள்
- நாயன்மார் படங்கள், வீடியோக்கள்
- செயற்பாட்டுப் பத்திரம்

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- சைவ நாற்பாதங்கள் பற்றியும் அவற்றைக் கடைப்பிடிக்கும் முறை பற்றியும் அறிந்து கூறுவார்.
- நாற்பாதங்களின் முக்கியத்துவத்தினை உணர்ந்து அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவார்.
- நாயன்மார் அடைந்த முத்திகளை விளக்குவார்.
- சரியை நெறி நின்று ஆலயத் தொண்டுகளை செய்வார்.
- சைவ நாற்பாதங்களைக் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளைப் பிறருக்கும் எடுத்துக்கூறி வழிப்படுத்துவார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1
- சமய குரவர்கள் நால்வரும் நின்ற நெறி, அடைந்த முத்தி என்பவற்றை அட்டவணைப்படுத்துக.

குழு 2
- சரியை நெறியானது அனைவருக்கும் எளிதாகச் செய்யக்கூடிய தொண்டுகள் ஆகும். என்பதற்கான காரணங்கள் ஐந்தினை முன்வையுங்கள்.

குழு 3
- சகமார்க்கநெறி நின்ற சுந்தரருக்கு இறைவன் உதவிய சந்தர்ப்பங்களை எழுதுக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..........................................................................................................................

2. ..........................................................................................................................

3. ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- கோயிலில் செய்யத்தக்க சிறுசிறு தொண்டுகளை மனமகிழ்வுடன் செய்ய வழிகாட்டுங்கள்..
- சிவனடியார்கள், ஏழை எளியவர்களுக்கு உதவும் பழக்கத்தினை வாழ்வில் கடைப்பிடிக்கப் பழக்குங்கள்.
- ஞான நூல்களில் கூறப்பட்டுள்ள சிறந்த கருத்துக்களை பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள்.

**தேர்ச்சி 5.0** : சைவசமய குரவர்கள், சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன் மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : ஈழத்தில் சமயம் வளர்த்த பெரியார்களையும், அவர்களது பணிகளையும் அறிந்து அவர்களுக்கு மதிப்பளிக்கும் முறையை விளக்குவார்.

**செயற்பாடு** : அருணாசலதேசிகரின் சமயப் பணிகளை அறிந்து அவருக்கு மதிப்பளிப்போம்.

**நேரம்** : 2 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- ஈழத்தின் சைவப் பெரியார்களை அறிவார்.
- ஈழத்தின் சைவப் பெரியார்கள் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளைத் தொகுப்பார்.
- ஈழத்தின் சைவப் பெரியார்களின் பணிகளை அறிந்து தாமும் சமயத்திற்கு ஆற்றவேண்டிய பணிகளை அறிந்து செயற்படுவார்.
- சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு சைவர்களாகிய நாம் செய்ய வேண்டிய பணிகளை அருணாசலதேசிகரின் வாழ்க்கை வரலாறு மூலம் அறிந்து எடுத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1.1.1:**
- இலங்கையில் சைவம் வளர்த்த பெரியார்கள் பற்றி மாணவர்கள் அறிந்த விடயங்களை எடுத்துக்கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அந்நியர் ஆட்சியில் சுதேச சமயங்கள் எதிர்நோக்கிய சவால்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பான விடயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துங்கள்.
- 20ஆம் நூற்றாண்டில் கிழக்கிலங்கையில் வாழ்ந்த சைவசமயப் பெரியவராவார்.
- ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சைவசமயப் பணியும், சைவசித்தாந்தப் பணியும் புரிந்த பெரியார்களுள் அருணாசலதேசிகரும் குறிப்பிடத்தக்கவர்.

**படி 1.1.2:**
- மாணவர்களை வகுப்பிலுள்ளோரின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**
- குழுச்செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தின் நோக்கத்தினை குழுக்களுக்குத் தெளிவு படுத்துங்கள். செயற்பாட்டின் போது குழுக்களுக்கு உதவுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினர் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4:**

- குழுக்கள் முன்வைத்த விடயங்கள் செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பு ஒன்றினை மேற்கொள்ளுங்கள். கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்குங்கள்.
- 20 ஆம் நூற்றாண்டில், கிழக்கிலங்கையில் சைவசமயப்பணியும் சைவசித்தாந்தப் பணியும் புரிந்த பெரியார்களுள் அருணாசல தேசிகர் குறிப்பிடத்தக்கவர்.
- இவர் 1888 முதல் 1969 வரை 81 ஆண்டுகள் மட்டக்களப்பில் வாழ்ந்தவர்.
- பெற்றோர்: தந்தை - காசிநாத சாஸ்திரியார்<br>தாய் - சின்னப்பிள்ளை அம்மையார்
- பிறந்த இடம் - மட்டக்களப்பிலுள்ள புளியந்தீவு
- வேறு பெயர்கள் - தேசிகமணி, சைவமெய்ப்போதகர், சைவசித்தாந்தமணி
- இவருக்குத் “தேசிகர் “ என்ற பட்டத்தைச் சூட்டிப் பெருமைப்படுத்தியவர் இராமகிருஷ்ண சங்கத் துறவி அவிநாசாநந்த அடிகளார் ஆவார். (இத்துறவியார் சுவாமி விபுலானந்தரோடு தொடர்புபட்டு உழைத்தவர்).
- சமயப்பணிகள் - சொற்பொழிவுகள், பிரசங்கம் செய்தல், பிரசங்கம் செய்ய மாணவர்களைப் பயிற்றுதல், சைவசமயப் பேச்சாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல், சைவசமய நூல்களையும், சைவசித்தாந்த விளக்க நூல்களையும் எழுதுதல், சைவசமயக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகளை எழுதுதல், மணிப்பிரவாள நடை தர்க்கரீதியான வசன நடைகளைக் கையாண்டு எழுதுதல், செய்யுள் இயற்றுதல், கோயில் தொண்டு செய்தல்.
- சைவசமய மாணவர்களுக்காக எழுதிய நூல்கள். உ-ம் சைவசமய ஆரம்ப போதினி (1962), சைவசமய இளைஞர் போதினி (1958), இந்து மாணவர் பக்திப் பாடல் பாமணி மாலை (1961), இந்து சமய மாத மகத்துவ மான்மியம் (1960), சைவ இலக்கிய கதாமஞ்சரி (1964), சைவசமய சிந்தாமணி (1960) முதலியன.
- நிறுவன ரீதியான அவரது பங்களிப்பு இராமகிருஷ்ண சங்கம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- அருணாசலதேசிகரின் உருவப்படம், அவருடைய வரலாற்று நூல், டிமைன் கடதாசி, பிளாற்றினம் பேனா,
- பாடநூல்.

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- அருணாசலதேசிகரின் முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.
- அவரது அர்ப்பணிப்புடனான சேவைகளை மதித்துப் போற்றுவார்.
- அவரது வரலாற்றைக் கதையாகக் கூறுவார்.
- ஈழத்தில் வாழ்ந்த சைவப் பெரியார்களின் விபரங்களைத் தேடிச் சேகரிப்பார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1 • அருணாசல தேசிகர் பற்றிய பின்வரும் விபரங்களை எழுதுக.
அவருடைய பெற்றோர்.
அவர் பிறந்த ஆண்டு, இடம்.
அவர் பெற்ற கல்வி, பட்டங்கள்

குழு 2 • அவர் செய்த கல்விப் பணிகள் மூன்றினைக் கூறி விளக்குக.

குழு 3 • சைவசமய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் அவர் செயலாற்றிய விதத்தினை விளக்குக.

குழு 4 • அவர் புரிந்த சைவப்பணிகளை அட்டவணைப்படுத்துக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

சைவசமய வளர்ச்சிக்காக சைவசமயிகள் ஒவ்வொருவரும் செய்யத்தக்க பணிகளைக் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்பதைப் பிள்ளைகளுக்கு எடுத்துரையுங்கள்.
பணிகளில் பங்குபற்றச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள்.

**தேர்ச்சி 6.0** : சைவசிந்தாந்தக் கோட்பாடுகளை விளங்கிக் கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : சைவ சித்தாந்தம் தொடர்பாக அடிப்படை விளக்கம் பெற்று தத்துவத்தின் அடிப்படை அம்சங்களை இனங்காண்பார். அவை தொடர்பாக விளக்கம் பெறுவார்.

**செயற்பாடு** : முப்பொருள்களில் பாசம் பற்றி அறிந்து, பாசமானது பதி,பசு ஆகியவற்றுடனுள்ள தொடர்பினை அறிவோம்.

**நேரம்** : 03 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்கள் பற்றி அறிவார்.
- ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களும் பாசத்தினுள் அடங்கும் என்பதை அறிவார்.
- மும்மலங்களுள் முதலில் நீங்குவது மாயை இறுதியில் நீங்குவது ஆணவம், ஆணவத்தின் வலிமையை அறிந்து கொள்வார்.
- மும்மல நீக்கத்திற்கான வழிமுறைகளை அறிந்து விளங்கிக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1:**
- சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- இவை மூன்றும் உண்மைப் பொருள்களாகும்.
- இவை கொண்டு விளங்கும் இயல்புகளின் அடிப்படையில் தனித்தன்மை உடையவை என்பதற்கு விளக்கமளியுங்கள்.
- பதி - தலைவன் (உயிர்+உலகம்) கடவுள், இறைவன், ஆண்டவன் என்னும் மறுபெயர்கள்.
- பசு - உயிர், ஆன்மா, ஜீவன், பசுவை இறைவனுடன் சேரவிடாது தடுப்பவை மும்மலங்களாகும்.
- பாசம் - பசுவை பந்தித்து வைத்திருப்பது பாசத்தால் கட்டப்பட்டுள்ள ஆன்மாவானது இறைவனை அறியவிடாது தடுப்பவை ஆணவம், கன்மம், மாயை ஆகும்.

**படி 1.1.2:**
- மாணவரின் தொகைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் உரிய செயற்பாட்டுப்படிவம், தர உள்ளீடுகளைப் பகிர்ந்தளியுங்கள்.
- குழுச் செயற்பாட்டின் போது உதவுங்கள்.

**படி 1.1.3:**
- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது அறிக்கைகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க நேரம் வழங்குங்கள்.
- செயற்பாடுகள் பற்றிய கருத்துக்களைக் கூறவிடுங்கள்.

**படி 1.1.4:**

- மாணவர் செயற்பாட்டின் பின் பின்வருமாறு தொகுப்பு ஒன்றினை மேற்கொள்ளுங்கள். பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.
- **ஆணவம்**
  - ஆணவம் ஆன்மாவின் அறிவை மயக்கும். ஆன்மாவானது சிவனோடு அத்துவிதமாக கலக்கும் வரையிலும் ஆணவம் ஆன்மாவோடு சேர்ந்தே இருக்கும்.
  - ஆன்மாவோடு ஆணவம் செம்பிற் களிம்பு போல் காணப்படும்.
  - ஆன்மாவோடு கூடிநின்று அதன் இயல்பை மறைக்கும்.
  - இறைவன் தனு, கரண, புவன போகங்களைக் கொடுத்து ஆணவத்தின் வலிமையை அழிப்பான்.
  - ஆணவம் வலிமைகுன்றும் மலபரிபாக காலத்தில், ஆன்மா இறைவனை அறியும் இயல்பை அடையும்.
- **கன்மம்**
  - ஆன்மாக்கள் செய்யும் வினைகள் கன்மமாகும்.
  - இது நல்வினை, தீவினை என இருவகைப்படும்.
  - கன்மக் கோட்பாடானது வினைகளின் தொகுதியை பிராரத்துவம், ஆகாமியம்,சஞ்சிதம் என மூன்றாக வகுத்துள்ளது.
  - பிராரத்தம் என்பது முற்பிறவிகளில் செய்த வினைகளில் நாம் அனுபவிப்பவை.
  - ஆகாமியம் - பழவினைகளை அனுபவிக்கும் போது நாம் புதிதாகப் புரியும் வினைகளாகும்.
  - சஞ்சிதம் - முற்பிறவியிலும், இப்பிறவியிலும் செய்த வினைகளில் அனுபவிக்கப்படாமல் அடுத்துவரும் பிறவிகளுக்கென எஞ்சும் வினைத்தொகுதியாகும்.
  - ஆன்மாக்கள் அனுபவிக்கும் இன்பதுன்பங்களுக்குக் காரணமாய் அமைவது கன்மமாகும்.
  - கன்மத்தை ஆன்மாக்கள் மனம், மெய், மொழி ஆகியவற்றால் செய்கின்றன.
  - கன்மத்தின் பயனை ஆன்மாக்களிடம் சேர்ப்பித்து அனுபவிக்கச் செய்பவன் இறைவன்.
- **மாயை**
  - சைவசித்தாந்தத்தில் மாயை உள்பொருள், உலகின் தோற்ற ஒடுக்கங்களுக்கு காரணமாக அமைவது மாயை ஆகும். மாயையை சித்தாந்தம் மூன்றாக வகுத்துள்ளது.
    1. சுத்தமாயை - சிவதத்துவம்
    2. சுத்தாசுத்தமாயை - வித்தியாதத்துவம்
    3. அசுத்தமாயை - ஆன்ம தத்துவம்
  - உயிரானது ஆணவ இருளிலிருந்து விடுபடுவதற்கு உதவும் ஒளியே மாயையாகும்.
  - மாயையின் தோற்றங்களான தனு, கரண, புவன போகங்களால் ஆன்மாக்கள் அனுபவிக்கும் இன்பதுன்ப அனுபவங்கள் உயிர்களின் ஈடேற்றத்திற்கு உதவும் சாதனங்களாக அமைந்துள்ளன.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- டிமைன் கடதாசி, பிளாற்றினம் பேனை,
- செயற்பாட்டுப் பத்திரம்.
- எண்ணக்கரு விளக்கப்படங்கள்

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் பற்றி கூறுவார்.
- சைவசித்தாந்தம் பாசம் பற்றிக் கூறியுள்ள விடயங்களைத் தெளிவுபடுத்துவார்.
- பாசம் பற்றிய விளக்கம் பெற்று அதன் முக்கிய அம்சங்களை விளக்கி எழுதுவார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1 -
- சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் யாவை?
- பதியானவர் எவ்வாறு உயிர்கள் உய்ய உதவி புரிகின்றார் என்பதை விளக்குக.

குழு 2 -
- பாசம் என்பதனுள் அடங்குவன யாவை?
- ஆணவத்தால் உயிர் அனுபவிக்கும் துன்பங்கள் இரண்டினை எழுதுக.
- ஆணவத்தின் துன்பத்திலிருந்து ஆன்மா விடுபட இறைவன் எவ்வாறு அருள்கின்றார் என விளக்குக.

குழு 3 -
- கன்மம் என்றால் என்ன?
- கன்ம கோட்பாடு கூறும் பிரதான விடயங்கள் எவை?
- கன்மத்திற்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு யாது?

குழு 4 -
- மாயையின் முக்கியத்துவம் யாது?
- மாயை எத்தனை வகைப்படும்?
- மாயை ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவும் வகையினை விளக்குக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ....................................................................................................................
2. ....................................................................................................................
3. ....................................................................................................................

**பெற்றோருக்கானது:**

ஆன்மாக்கள் பாசத்திலிருந்து விடுபட இறைவனின் அருள் வேண்டும் என்பதையும், நாம் இப்பிறவியில் அனுபவிக்கும் இன்பதுன்பங்களுக்குக் காரணமாக அமைவது கன்மம் என்பதையும், நாம் மனம், மொழி, மெய்களால் இறைவனை வழிபட்டு நற்பேறு அடையலாம் என்பதையும் பிள்ளைகளுக்கு விளக்கிக் கூறுங்கள்.

**தேர்ச்சி 7.0** : நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : நாட்டார் வழிபாட்டு முறைகளை அறிந்து தமது வாழ்வில் கடைப்பிடிக்கும் முறைகளை எடுத்துரைப்பார்.

**செயற்பாடு** : நாட்டார் வழிபாட்டில் பத்ததி (பத்தாசி) பற்றிய அடிப்படை விடயங்களை அறிந்து கொள்வோம்

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்** :

- ஈழத்தின் வரலாற்றில் நாட்டார் வழிபாடுகளின் தனித் தன்மையை அறிய உதவும் ஆதாரங்களைப் பட்டியற்படுத்துவார்.
- சைவசமயத்தின் ஆகம சிற்ப சாத்திர நெறிமுறைக்கமையாத வழிபாட்டு விதிமுறைகளைக் கூறும் பத்ததிகள் பற்றி அறிந்து அதனைப் போற்றுவார்.
- சடங்கு முறைகளில் காணப்படும் அதி உன்னத பக்தி வெளிப்பாடுகளையும் நம்பிக்கைகளையும் பாதுகாக்க முன்வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1:**

- சைவசமயம் பின்பற்றப்படும் நாடுகளைப் பற்றி மாணவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நாட்டார் வழிபாடுகளில் பத்ததி முதன்மை பெற்று விளங்குகிறது என்பதை எடுத்துக் கூறுங்கள்.
- இலங்கையில் நாட்டார் வழிபாடு வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் மக்களால் பின்பற்றப்பட்டுவருகிறது என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள்.
- பத்ததிகள் விதந்துரைக்கும் பல்வேறு வழிபாட்டுக் கூறுகள் நீடித்து நிலைத்து நிற்கப் பல காரணங்கள் காணப்படுகின்றன.

**படி 1.1.2:**

- மாணவரின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் உரிய செயற்பாட்டுப் படிவம் தர உள்ளீடுகளைப் பகிர்ந்தளியுங்கள்.
- குழுச் செயற்பாட்டின் போது உதவுங்கள்.

**படி 1.1.3:**

- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது அறிக்கைகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அவர்கள் தமது கருத்துக்களை முன்வைக்க நேரம் வழங்குங்கள்.
- செயற்பாடுகள் பற்றிய கருத்துக்களைக் கூற விடுங்கள்.

**படி 1.1.4:**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.

**பத்ததிகள்**

- இலங்கையின் இந்துப் பண்பாட்டுமரபில் வழிபாட்டு மரபுகளுக்கும் சமுதாய வழமைகளுக்கும் முக்கியத்துவமுண்டு.
- இலங்கைத் தமிழரிடையே பயில் நிலையிலுள்ள வழிபாட்டுப் பாரம்பரியங்கள் பல. அவற்றுள் ஆகம சிற்பசாத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட வழிபாடுகள்,ஆகம வரையறைக்குள் அடங்காத பத்ததி வழிபாடுகள்,பாரம்பரியங்களையும் சமுதாய வழமைகளையும் இணைத்துக் கொண்டு இயற்றப்படும் வழிபாடுகள் என்பன பிரதானமானவை.
- மரபுசார் பத்ததி வழிபாடுகளை சடங்கு எனக் கூறுவதுமரபு. மட்டக்களப்பில் சடங்குகள் என்பவை மதத்தோடு அல்லது மந்திரத்தோடு சம்பந்தப் பட்டவையாகும்.
- தேசவழிபாட்டிக்குரிய பூசைவிதிமுறைகளையும் அதற்கான மந்திரங்களையும், பாவனைகளையும் தொகுத்துக் கூறும் ஆவணமே பத்ததி எனப்படும். பத்ததி என்பதை பத்தாசி எனவும் அழைப்பர்.
- பத்ததிகள் பெரும்பாலும் எத்தெய்வத்தின் பூசைவிதிமுறைகளைக் கூறுகின்றனவோ அத்தெய்வத்தின் பெயராலேயும், வேறு பெயர்களாலேயும் அழைக்கப்படுகின்றன.

  (உ-ம்) மாரியம்மனுக்குரியவை- மாரியம்மன் பத்ததி எனவும்
  காளியம்மனுக்குரியவை - கும்பப் பத்ததி எனவும் அழைப்பர்,
- பத்ததிகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியனவாகக் காணப்படுகின்றன. வழிபாட்டிடம், அமைக்கும் முறை,மண்டபம், காவல் செய்யும் முறை,அம்மனுக்கு அடுக்குச் சாத்தும் முறை, அம்மனைக் கும்பத்தில் வைத்தலும் அவைகளுக்கான மடைப்பிரிவுகளும், அம்மனுக்கு இணை, துணை, பரிவாரத் தெய்வங்களை நிறுத்தும் இடம் பற்றியவையும் அவைகளுக்கான மடைப்பிரிவுகளும் மந்திர,யந்திரங்களும்,அம்மனை ஆராதிக்கும் முறைகள்,பூசைசெய்பவர் கைக்கொள்ளவேண்டிய அனுட்டான முறைகள் முதலிய விதிகளும் பிறவும் அடங்கும். இவை ஒவ்வொன்றும் விரிவாகஆராயப்படவேண்டியவை.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பத்ததி மாதிரிகள், சடங்கு பற்றிய வீடியோக்கள்
- குழுத்தேடல் ஆய்வுப்பத்திரம்
- எழுது கடதாசி, நிறப்பேனாக்கள்

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- பத்ததிகளின் சிறப்பினை எடுத்துக் கூறுவார்.
- பத்ததிகளின் பொருள் மரபு பற்றி விளக்குவார்
- சடங்கு முறைகளில் சைவமக்களின் ஈடுபாடும் அதில் உள்ள நம்பிக்கைகளையும் முன்வைப்பார்.
- சடங்கு முறைகளில் பத்ததிகள் பெறும் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைப்பார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1 • பத்ததிகள் என்பதன் பொருள் விளக்கத்தைக் குறிப்பிடுங்கள்

குழு 2 • நாட்டார் வழிபாடுகளில் காணப்படும் பத்ததிகளைப் பட்டியற் படுத்துங்கள்

குழு 3 • சடங்கு முறையில் சைவமக்களின் நம்பிக்கைகள் பற்றி விளக்குங்கள்

குழு 4 • பத்ததிகளின் பொருள் மரபு பற்றியும் இன்றைய காலகட்டத்தில் பத்ததிகளின் பொருத்தப்பாடும் பற்றி மேடைப் பேச்சொன்றைத் தயார் செய்யுங்கள்

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ........................................................................................................................
2. ........................................................................................................................
3. ........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் அனைவரும் ஆலயத்திற்கு நேரடியாகச் சென்று வழிபாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள்.
- சடங்கு முறையான நாட்டார் வழிபாடுகளின் மீதுள்ள நம்பிக்கையையும் பக்தியையும் மேம்படுத்தி பத்ததிகள் பற்றிய தேடலுக்கு ஊக்கப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 7.0** : நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : நாட்டார் வழிபாட்டு முறைகளை அறிந்து தமது வாழ்வில் கடைப்பிடிக்கும் முறைகளை எடுத்துரைப்பார்.

**செயற்பாடு** : நாட்டார் வழிபாட்டில் பெரியதம்பிரான், காத்தவராயன், ஐயனார் வழிபாட்டு முறைகளை அறிந்து வழிபடுவோம்.

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்** :

- ஈழத்தின் வரலாற்றில் நாட்டார் வழிபாடுகளின் தனித் தன்மையை அறிய உதவும் ஆதாரங்களைப் பட்டியற்படுத்துவார்.
- சைவசமயத்தின் ஆகம சிற்ப சாத்திர நெறிமுறைக்கமையாத வழிபாட்டு விதிமுறைகளைக் கூறும் பத்ததிகள் பற்றி அறிந்து அதனைப் போற்றுவார்.
- சடங்கு முறைகளில் காணப்படும் பெரியதம்பிரான், காத்தவராயன், ஐயனார் வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் பாதுகாக்க முன்வருவார்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1:**
- மரபும் பாரம்பரியமும், வழக்காறுகள், செல்நெறி முறைகள் என்பவற்றுக்கு ஊடாக, நாட்டார் வழக்காற்றிலுள்ள அறவியல் பண்புகள் வளர்த்துச் செல்லப்படுவதை எடுத்துக்காட்டுகளுடன் கலந்துரையாடுங்கள்.
- நாட்டார் வழிபாடுகளில் பத்ததி முதன்மை பெற்று விளங்குகிறது என்பதை எடுத்துக் கூறுங்கள்.
- இலங்கையில் நாட்டார் வழிபாடு வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் மக்களால் பின்பற்றப்பட்டுவருகிறது என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள்.
- பெரியதம்பிரான், காத்தவராயன், ஐயனார் வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் எடுத்துரையுங்கள்.

**படி 1.1.2:**
- மாணவரின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் உரிய செயற்பாட்டுப் படிவம், தர உள்ளீடுகளைப் பகிர்ந்தளியுங்கள்.
- குழுச் செயற்பாட்டின் போது உதவுங்கள்.

**படி 1.1.3:**
- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது அறிக்கைகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அவர்கள் தமது கருத்துக்களை முன்வைக்க நேரம் வழங்குங்கள்.
- செயற்பாடுகள் பற்றிய கருத்துக்களைக் கூற விடுங்கள்.

**படி 1.1.4:**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- ஆகம சிற்ப சாத்திர விதிமுறைகளுக்குட்படாத வழிபாட்டு முறைகளே நாட்டார் வழிபாடு அல்லது ஆகமம் சாரா வழிபாடு எனப் போற்றப்படுகின்றது.
- இத் தெய்வங்களை மக்கள் மிகுந்த பக்தியுடனும் நம்பிக்கையுடனும் வழிபடுகின்றனர்.

## பெரியதம்பிரான் வழிபாடு

- தக்கன் யாகம் செய்கின்றபோது ஓம குண்டலத்தில் தோன்றிய தெய்வமாகவும், தக்கனின் யாகத்தை அழிக்க வீரபத்திரரால் தோற்றுவிக்கப்பட்ட தெய்வமாகவும் போற்றப்படுகின்றது.
- வழிபாட்டு முறை பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுகின்றது
- தமக்குள்ளே ஒரு பத்ததி முறையினைக் கடைப்பிடித்து ஒழுங்கு படுத்தப்பட்ட சடங்கு முறைகள் பின்பற்றப்படுகின்றன.
- சடங்கை நடாத்துபவர் குறிப்பாக பூசாரிகள் எனக் கொள்ளப்படுகின்றனர்.
- விரதமிருத்தல், பொங்கல், நேர்த்தி செய்தல், காய்கறி பழங்கள் படைத்தல்

**பிரபந்தங்கள்**

- பெரியதம்பிரான் காவியம், பெரியதம்பிரான் துதி, பெரியதம்பிரான் பதிகம், அடைக்கல அகவல் என்பன இவற்றுள் அடங்கும்

**சமூக முக்கியத்துவம்**

- புனிதத் தன்மை, சமூக ஒழுகலாறுகள் விருத்தி செய்யப்படுதல், கூட்டுப் பொறுப்பு, இடையூறற்ற வழிபாடு, புரிந்துணர்வு, பகைமை ஒழித்தல்

## காத்தவராயன் வழிபாடு

- காத்தவராயன் எனும் தெய்வம் ‘ காத்தான்’ என்றும் வழிபடப்படுகின்றார்.
- மரபுசார் வழிபாடுகளை உள்ளடக்கி ஆண்டுப் பொங்கல், வைகாசி விசாக தினத்தில் நடைபெறும், மடைபரவி வழிபாடாற்றல், சடங்கை அடிப்படையாகக் கொண்டு கலையாடுதல், கட்டுச் சொல்லல் (வாக்குச் சொல்லல்) நூல் கட்டுதல், போன்ற சமய நிகழ்வுகள் இடம்பெறுதல்.
- வழிபாட்டின் நோக்கம் வேளாண்மை, சிறு பயிர்கள் அதிக விளைச்சலைத் தரும், அம்மை நோய், கண் நோய் போன்றவை நீங்கும் எனும் நம்பிக்கை.

## ஐயனார் வழிபாடு

- ஐயனார் ஒரு நாட்டுப்புறக் காவல் தெய்வம். பழங்காலம் தொட்டே ஐயனார் வழிபாடு தமிழர் இடையே இருந்து வருகிறது. குறிப்பாக இலங்கையில் இது தொன்றுதொட்டு இருந்து வருகிறது. ஐயனார் வழிபாட்டைச் சிறுதெய்வ வழிபாடு என்று சமய ஆய்வாளர் குறிப்பிடுவதுண்டு.
- ஐயனார் என்ற சொல்லானது ஐ அன், ஆர் என்ற மூன்றால் ஆனதாகும். இதில் ஐ என்ற எழுத்து தலைவன் என்றும் அன் என்பது ஆன்பால் ஈரு ஆகும். ஆர் என்பது மரியாதைக்குரிய விருதியாகும்.
- கிராமங்களில் ஊருக்கு வெளியே காடுகளிலும் கோவில்கள் அமைத்து ஐயனார் கிராமத்தைக் காப்பவராகவும் விளைச்சலைப் பெருக்குபவராகவும் கால்நடைகளைக் காப்பாற்றுபவராகவும் திகழ்கின்றார்.
- கிராமத் தேவதை வழிபாடு விரைந்து பயனளிக்கும் என்ற நம்பிக்கை கிராமத்து மக்களிடம் மிகுந்து காணப்படுவதால் கருப்பர், வீரபத்திரர், காளியம்மன், மாரியம்மன் முதலியவைகளைக் காவல் தெய்வமாய் கருதி உத்திராயண காலத்தில் சிவராத்ரி, பங்குனி உத்திரம் ஆகிய நாட்களில் பச்சை வாழை இலையைப் பரப்பி பொங்கல், பயறு வகைகள் வைத்துப் படைத்து தங்களுடைய வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகள் நன்கு நடைபெற வேண்டுமென்றும், தங்களுடைய கால்நடைச் செல்வங்களான மாடு, ஆடு, சேவல் முதலியவைகளை நோய்நொடி இல்லாமல் இருக்க வேண்டுளமன்றும் தங்களுக்குச் சொந்தமாயுள்ள கால்நடைகளைத் தானமாய் நேர்த்திக்கடன் என்று ஒன்றைவிட்டுச் செல்கின்றனர். இவைகளை கோயில் நிர்வாகம் ஏற்றுக் கொள்கின்றது. வழிபடல் சிறப்புற்று விளங்குகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பத்ததி மாதிரிகள், சடங்கு பற்றிய வீடியோக்கள்
- குழுத்தேடல் ஆய்வுப்பத்திரம்
- எழுது கடதாசி, நிறப்பேனாக்கள்

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- பத்ததிகளின் சிறப்பு, பொருள் மரபு பற்றி எடுத்துக் கூறுவார்.
- சடங்கு முறைகளில் சைவமக்களின் ஈடுபாடும் அதில் உள்ள நம்பிக்கைகளையும் முன்வைப்பார்.
- வழிபாட்டு முறைகளில் பெரியதம்பிரான், காத்தவராயன், ஐயனார் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைப்பார்.
- தேச வழமைகள், தேச வழக்காறுகள் என்பன அறம், நீதி, சட்டம் போன்ற விடயங்களையும் அறக் கருத்துக்களையும் பொதுமக்களிடம் எடுத்துச் செல்லும் ஊடகமாகவே நாட்டார் வழக்காறு அமைந்துள்ளது என்பதை ஆணித்தரமாக முன்வைப்பார்.
- நாட்டார் வழக்காற்றிலுள்ள அறப்பண்புகள் அழிந்துவிடாது பாதுகாக்க, தாம் எடுக்கும் செயற்பாடுகளை முன்வைப்பார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1 • பத்ததிகள் என்பதன் பொருள் விளக்கத்தைக் கூறி, நாட்டார் வழிபாடுகளில் காணப்படும் பத்ததிகளைப் பட்டியற் படுத்துங்கள்

குழு 2 • நாட்டார் வழக்காற்றிலுள்ள அறவியல் பண்புகளையும், அறம்சார்ந்த விழுமியப் பண்புகளையும் எடுத்துக் காட்டுங்கள்

குழு 3 • பெரியதம்பிரான், காத்தவராயன், ஐயனார் வழிபாடுகளின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரையுங்கள்.

குழு 4 • பத்ததிகளின் நாட்டாரியல் வழக்குகள், அறவியலை எடுத்துச் செல்லும் மிக எளிமையான வழி முறையாகப் காணப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டுகளுடன் எடுத்துரைக்குக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..............................................................................................................................
2. ..............................................................................................................................
3. ..............................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- உலகமயமாதலும் விஞ்ஞான வளர்ச்சியும் ஏற்பட்டாலும் நாட்டாரியல் கூறுகள் இல்லாத பண்பாடு, அத்திவாரம் இல்லாத கட்டடத்திற்கே ஒப்பிடப்படுகின்றது. மூதாதையரின் செல்நெறிகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது மிக அவசியமாகும் என்பதைப் பிள்ளைகளுக்கு எடுத்துரைத்து அவற்றுக்கான செயற்பாடுகளில் பங்குபற்றச் செய்யுங்கள்.

**தேர்ச்சி 8.0** : ஈழத்தில் சைவத்தின் தொன்மை யையும்,வரலாற்றுச் சிறப்பையும் ஆதாரங்கள் துணைக் கொண்டு வெளிப்படுததுவார்.

**தேர்ச்சி மட்டம் 8.1** : ஈழத்து சைவ சமய வளர்ச்சியின் தொன்மை,வரலாறு என்பவற்றை ஆதாரத்துடன் முன் வைப்பார்.

**செயற்பாடு** : ஈழத்துச் சைவசமய வளர்ச்சியின் தொன்மையையும், வரலாற்றையும் அறிந்து போற்றுவோம்.

**நேரம்** : 3 பாடவேளைகள்.

**கற்றற் பேறுகள்** :

- ஈழத்தின் வரலாற்றுத் தொன்மையை அறிய உதவும் ஆதாரங்களைப் பட்டியற்படுத்துவார்.
- ஈழத்தின் சைவசமயத் தொன்மை, வரலாற்றையும், சைவமரபின் தொன்மையையும், அறிந்து அதனைப் போற்றுவார்.
- ஈழத்தின் சைவமரபின் தொன்மை வரலாற்றைத் தேடி அறிந்து பாதுகாக்க முன்வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1.1.1:**

- சைவசமயம் பின்பற்றப்படும் நாடுகளைப் பற்றி மாணவர்களிடம் கேட்டறியுங்கள்.
- இந்தியாவின் தமிழ் நாட்டினைப் போல சைவசமயத்தவர்கள் பெருமளவில் வாழும் நாடாக இலங்கை விளங்குகிறது என்பதை எடுத்துக் கூறுங்கள்.
- இலங்கையில் சைவசமயம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் மக்களால் பின்பற்றப்பட்டுவருகிறது என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள்.

  (உதாரணம்) திருமூலர் - சிவபூமி எனப் போற்றியமை இதிகாச கதைகளில் காணப்படும் விடயங்கள் புராதன காலம் தொட்டு இன்றுவரை நிலைத்திருத்தல்.

**படி 1.1.2:**

- மாணவரின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் உரிய செயற்பாட்டுப் படிவம் தர உள்ளீடுகளைப் பகிர்ந்தளியுங்கள்.
- குழுச் செயற்பாட்டின் போது உதவுங்கள்.

**படி 1.1.3:**

- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது அறிக்கைகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அவர்கள் தமது கருத்துக்களை முன்வைக்க நேரம் வழங்குங்கள்.
- செயற்பாடுகள் பற்றிய கருத்துக்களைக் கூற விடுங்கள்.

**படி 1.1.4:**

- மாணவர் செயற்பாட்டின் பின் பின்வருமாறு தொகுப்பு ஒன்றினை மேற்கொள்ளுங்கள். பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.
- ஈழநாட்டைச் சிவபூமி எனத் திருமூலர் போற்றுவார்.
- பண்டு தொட்டு இன்று வரை சைவசமயம் ஈழத்தில் பின்பற்றப்படுவதற்குத் தென்னிந்தியாவின் புவியியல் அண்மையும், அரசியல், பொருளாதார உறவுகளும் காரணமாகும்.
- சைவமரபின் பழைமையை எமக்கு எடுத்துக்காட்டும் ஆதாரங்களை பழந்தமிழ் இலக்கியங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், கட்டட வழிபாட்டுச் சிற்பங்கள், தொல்பொருள் சின்னங்கள், சிற்பம், ஓவியம், மேனாட்டார் குறிப்புகள் என்பன அமைகின்றன.
- புராதன இலங்கையில் வாழ்ந்த நாகர், இயக்கர் என்னும் மக்கள் கூட்டத்தினர் சிவவழிபாட்டில் ஈடுபட்டனர்.
- தென்னிந்திய ஆதிச்சநல்லூர், திருநெல்வேலி முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட ஈழத்தாழிகள் வேலாயுதங்கள், சேவற்சிலைகள், காவடிச்செடில்கள் என்பன கி.மு 2000 ஆண்டுகள் பழைமையானவை. இவை போன்ற பழைமையான பொருட்கள் இலங்கையில் 1955 ஆம் ஆண்டில் இடம் பெற்ற அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்டன. உ-ம் பொம்பரிப்பு, வளகங்கைப் பள்ளத்தாக்கு, கதிரைவெளி, மாந்தோட்டம், கந்தரோடை அகழ்வுகள்.
- நாகர்கள் நாக வழிபாட்டை உடையவர்களாகவும் விளங்கினர். வட இலங்கையின் புளியம் பொக்கணை, புதூர், நாகர் கோயில் ஆகிய இடங்களில் இன்றும் நாகவழிபாடு இடம்பெறுகிறது.

**அநுராதபுரம்:**

- கி.மு.3ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பௌத்தம் இங்கே மகிந்த தேரரால் புகுத்தப்பட முன் இங்கு வாழ்ந்த சிங்கள - தமிழ் மக்களின் மூதாதைகள் இந்துக்களாக வாழ்ந்தமைக்கு அவர்களின் பெயர்களில் அமைந்திருந்த சிவன் என்னும் அடைமொழி சான்றாக உள்ளது. உதாரணம் மூத்தசிவன், மகாசிவன் என்னும் பெயர்கள்.
- விஜயன் இலங்கைக்கு வருகை தந்த போது பல்வேறு பகுதிகளில் ஈச்சரங்கள் காணப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.
- கி.மு 101 - 77வரை இலங்கையை ஆண்ட துட்டகாமின் கதிர்காமத்தில் தனது நேர்த்திக்கடனைச் செலுத்தினான் என்னும் குறிப்பு அக்காலத்தில் ஈழத்திலும் முருக வழிபாடு நிலவியதை எடுத்துக்காட்டுகிறது.
- ஏறக்குறைய 1300 ஆண்டுகள் வரை இலங்கையின் பல்வேறு இடங்களில் பல சிற்றரசர்களும் பொதுமக்களும் இந்து சமயத்தைப் பின்பற்றி வாழ்ந்தனர் எனலாம்.

## பொலநறுவை

- கி.பி 1017 ஆம் ஆண்டு சோழர்களால் இலங்கை கைப்பற்றப்பட்ட போது பொலநறுவை இலங்கையின் தலைநகரானது இக்காலப்பகுதியில் இந்து சமயம் மீண்டும் புத்துயிர் பெற்றது.
- சோழர்கள் பொலநறுவைக்கு கணநாதபுரம் (ஜனநாதமங்களம்), புலத்திய நகரம் என்னும் பெயர்களால் அழைத்தனர்.
- பதவியா, திருக்கோணமலை, மாதோட்டம் ஆகிய இடங்களில் தென்னிந்திய வர்த்தக சமூகத்தினர், அரச நிர்வாகிகள் என்போர் வசித்து வந்தனர்.
- இவர்கள் வாழ்ந்த இடங்களில் அமைந்திருந்த சிவாலயங்கள் திருத்தி அமைக்கப்பட்டன, சிவாலயங்கள் கட்டப்பட்டன.
- பொலநறுவையில் நடந்த அகழ்வின் போது பல சிவாலய, விஷ்ணு ஆலய, காளிகோயில் இடிபாடுகள் மற்றும் பல்வேறு திருவுருவங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- பொலநறுவை சிவாலயங்களில் சோழர்களால் கட்டப்பட்ட மூன்று சிவாலயங்கள் இன்றும் காலத்தால் அழியாது எஞ்சி நிற்கின்றன.
- சோழரின் பின் பொலநறுவையைக் கைப்பற்றிய முதலாம் விஜயபாகு இந்து மதத்தை ஆதரித்தான். அவனுக்குப் பின்வந்த முதலாம் பராக்கிரமபாகு நிசங்க மல்லன் என்போரும் இந்து சமயத்தை ஆதரித்தனர் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.
- இவ்வாறு வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களிலும் இந்து சமயமானது பாரம்பரியமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வளர்ச்சி அடைந்த போக்கினைக் காணக்கிடைக்கிறது.
- இலங்கைக்கும் சைவசமயத்திற்கும் இடையிலான தொன்மையை இலகுவில் வரையறுத்துவிட முடியாது என்பது தெளிவாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- டிமைன் கடதாசி, ஆலயங்களின் படங்கள்
- திருவுருவங்களின் பிரதிகள்,
- பேனா, செயற்பாட்டுப்பத்திரம்.

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- ஈழத்தின் சைவசமயமரபினைப் பற்றிய விபரங்களைக் கூறுவார்.
- சைவமரபின் தொன்மைக்குரிய ஆதாரங்களை முன் வைப்பார்.
- வரலாற்றுத் தகவல்களைச் சேகரிப்பார்.
- சைவ சமயத் தொன்மை சிறப்பைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்னும் மனப்பாங்கை விருத்தி செய்து கொள்வார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1 • வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் ஈழத்தில் சைவசமயம் நிலவியது என்பதற்கான ஆதாரங்கள் யாவை?

குழு 2 • அநுராதபுர காலத்தில் சைவசமயம் எவ்வாறு நிலைத்திருந்தது என்பதை எடுத்துக் காட்டும் சான்றுகள் எவை?

குழு 3 • பொலநறுவை காலத்தில் சைவசமயம் எழுச்சி அடைந்தமைக்கான காரணங்கள் யாவை?

குழு 4 • சைவசமயத்தைப் பேணிப் பாதுகாக்க நீங்கள் செய்யக் கூடிய செயற்பாடுகளை அட்டவைணப்படுத்துக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..................................................................................................................................
2. ..................................................................................................................................
3. ..................................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான தொடர்பு புராண, இதிகாசங்களில் கூறப்பட்டுள்ளமை, நாயன்மார்கள் எமது சிவாலயங்களைப் பாடிப் போற்றியமையைப் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறுங்கள்.

**தேர்ச்சி 9.0** : ஈழத்துச்சைவமரபுகளையும் , தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : ஈழத்துச் சைவ ஆலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பார்.

**செயற்பாடு** : கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம் பற்றிய சிறப்பம்சங்களை அறிந்து கொள்வோம்

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்** :

- கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம் பற்றிய சிறப்பம்சங்களை அறிந்து கொள்வார்.
- கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயத்தின் வரலாற்றை அறிந்து பக்தியுடன் வழிபடுவார்.
- கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயத்தின் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்களை எடுத்துக் கூறுவார்.
- கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் சிறப்புப் பூசைகளில் பங்கு கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1.1.1:**
- மாணவர்களுக்குத் தெரிந்த ஈழத்திலுள்ள விநாயகர் ஆலயங்கள் பற்றிக் கேட்டறியுங்கள்.
- கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- மலையகத்தில் பிரசித்தி பெற்ற விநாயகர் ஆலயங்கள் பற்றி வினவுங்கள்.
- கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயச் சிறப்புக்களை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**படி 1.1.2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**
- குழுச்செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனையை வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக் கருத்துக்களை வழிப்படுத்துங்கள்.

**படி 1.1.4:**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.

**அமைவிடம்**

- கண்டி மாநகரின் மத்தியில் கட்டுக்கலை என்ற இடத்தில் அமைந்துள்ளது.

**வரலாற்றுச் சிறப்பு**

- இத்தலம் விஜய நகரப் பேரரசின் சமயச் செல்வாக்கு இருந்த காலத்தில் “ செங்குந்த” என்னும் பிராமணர் தியானம் செய்த இடமாக இருந்தது.
- பௌத்தர்கள் இவ்வாலய மூர்த்தியை “கணதெவியோ” என அழைப்பர்
- நாட்டுக் கோட்டை செட்டிமாரால் இவ்வாலயம் நிர்வகிக்கப்படுகின்றது.

**மூர்த்தி**

- இத்தலத்தின் மூர்த்தியாக ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரப் பெருமாள் விளங்குகிறார். ஆனால் ஸ்ரீ செல்வ விநாயகருக்கும் அருகில் சந்நிதானம் அமைக்கப்பட்டு பூசைகள் நடைபெறுகின்றன.
- கண்டி எசல பெரஹறாவின் போது நீர்வெட்டுத் திருவிழா முடிந்த பின்னர், பெரஹறா செல்வ விநாயகர் ஆலயம் திரும்பும், பின்னர் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் நடைபெற்று ஊர்வலம் தலதா மாளிகையை நோக்கிப் புறப்படும்.

**தீர்த்தம்**

- பங்குனி உத்தர தினத்தில் தீர்த்தத் திருவிழா மகாவலி கங்கையில் நடைபெறும்.
- பூசைகள் விழாக்கள்
- இக் கோயிலின் வருடாந்த மகோற்சவங்களின் போது ஒன்பதாம் நாளில் தேர்த்திருவிழா நடைபெறும். இத் தேர்த் திருவிழாவானது பஞ்சரத பவனியாக சர்வ அலங்காரத்துடன் நடைபெறும்.
- விநாயகர் சதுர்த்தி, விநாயக சஷ்டி போன்ற விசேட தினங்களில் சிறப்புப் பூசைகள் நடைபெறும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயப்படங்கள்
- குழுத்தேடல் ஆய்வுப்பத்திரம்
- எழுது கடதாசி, நிறப்பேனாக்கள்

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலய சிறப்பினை எடுத்துக் கூறுவார்.
- கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலய வரலாற்றுக் கதையினை விளக்கமாகக் கூறுவார்
- கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயப் பூசைகள், விசேட வழிபாடுகள் பற்றி எடுத்துக்கூறுவார்.

## இணைப்பு 1.1.1 மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1
- கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம் பற்றிய வரலாற்றுக் கதையைத் தேடி எழுதுங்கள்

குழு 2
- இவ்வாலயத்தின் பூசைகள் விழாக்கள் பற்றி விளக்கமாக முன்வையுங்கள்

குழு 3
- இவ்வாலயத்தின் சிறப்பினை மேடைப் பேச்சாக முன்வையுங்கள்.

குழு 4
- இவ்வாலயத்திற்கும் ஏனைய சமுகத்திற்குமான இணக்கப்பாடு பற்றி கருத்துக்களை முன்வையுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..............................................................................................................................
2. ..............................................................................................................................
3. ..............................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் அனைவரும் ஆலயத்திற்கு நேரடியாகச் சென்று வழிபாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள்.
- ஆலய வரலாறு பற்றிய தகவல்களைப் பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்தி இறைவன் மீதுள்ள நம்பிக்கையை மேம்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0** : ஈழத்துச்சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : ஈழத்துச் சைவ ஆலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்ளையும் விபரிப்பார்.

**செயற்பாடு** : ஈழத்திலுள்ள சிவாலயங்களின் சிறப்பம்சங்களை அறிந்து வழிபடுவோம்.

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்** :

- பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் பற்றிய சிறப்பம்சங்களை அறிந்து கொள்வார்.
- ஈழத்துச் சிதம்பரம் (காரைநகர் சிவன் ஆலயம்) பற்றிய சிறப்பம்சங்களை அறிந்து கொள்வார்.
- சிவாலயங்களிற்குச் சென்று பக்தியுடன் வழிபடுவார்.
- ஆலயம் பற்றிய வரலாற்றுக் கதைகளை வாசித்துக் காட்டுவார்.
- சிவாலயங்களிற்குச் சென்று பக்தியுடன் வழிபடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1:**
- மாணவர்களுக்குத் தெரிந்த ஈழத்திலுள்ள சிவாலயங்கள் பற்றிக் கேட்டறியுங்கள்.
- இலங்கையின் தலைநகர் கொழும்பில் அமைந்துள்ள சிவாலயங்கள் பற்றிக் கேட்டறியுங்கள்.
- பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், காரைநகர் சிவன் ஆலயம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**படி 1.1.2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**
- குழுச்செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலாசனையை வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக்கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 1.1.4 :**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.

**கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரம்**

- கொழும்பு மாநகரத்தின் வடபகுதியில் அமைந்துள்ளது. கொழும்பு துறைமுகத்தின் முன்பாக கொட்டாஞ்சேனைப் பகுதியில் அமைந்துள்ளது.
- தென்னிந்தியாவில் மூவேந்தராலும், நாயக்க, பல்லவ மன்னர்களாலும் கட்டப்பட்டதைப் போன்ற கருங்கற்களால் அமைக்கப்பட்ட ஆலயம் ஆகும்.
- இலங்கையின் கருங்கற்களால் ஆகமமுறைப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களில் ஒன்றாகும்.
  - இறைவன் - சுவர்ணசபேஸ்வரர்
  - இறைவி - ஸ்ரீ சிவகாமசௌந்தரி
  - தலவிருட்சம் - மகிழம் மரம்
  - யாழ்மண்ணின் மானிப்பாயில் பிறந்து கொழும்பு செட்டியார் தெருவில் வசித்து வந்தவருமாகிய கொடை வள்ளலும் தேசாபிமானியுமான ஸ்ரீமான் அருணாசலம் பொன்னம்பலம் முதலியாரால் 1856ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.
- முதல் மகாகும்பாபிஷேகம் 1857 ஆம் ஆண்டு சிறப்பாக நடைபெற்றது.
- மூலமூர்த்தி 22 அங்குலம் உயரம் கொண்ட சிவலிங்கத்தையும் 32 அங்குலம் உயரங் கொண்ட சிவகாமி அம்மையும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.
- பொன்னம்பல முதலியாரின் இரண்டாவது மகன் ஸ்ரீமான் இராமநாதன் அவர்களால் கருங்கற்களைக் கொண்டு ஆலயத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கென வியாங்கொடையில் இருந்து கருங்கற்கள் கொண்டுவரப்பட்டு 1907 ஆம் ஆண்டு புனருத்தாபனம் செய்யப்பட்டது.
- மீண்டும் 1912ஆம் ஆண்டு கார்த்திகை 21ஆம் திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.
- பங்குனி உத்தரத்தை அந்தமாகக் கொண்டு 10 தினங்கள் மகோற்சவம் நடைபெறுகின்றன.
- ஆடிப்பூரத்திற்கு முந்திய 9 தினங்களும் ஸ்ரீ சிவகாமசௌந்தரி அம்பாளுக்கு தினமும் அபிஷேகம், பூசை, இயந்திரபூசை, இலட்சார்ச்சனை, ஓமம், உற்சவம் ஆகியன இடம்பெறும். இறுதிநாளான ஆடிப்பூரத்தன்று அம்பாளுக்குத் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

**ஈழத்துச் சிதம்பரம் (காரைநகர் சிவன் ஆலயம்)**

- **அமைவிடம்** - யாழ்ப்பாணத்தில் இருந்து சுமார் 20 கி.மீ தொலைவில் உள்ள காரைநகர் என்ற இடத்தில் அமைந்துள்ளது.
- இது 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதில் அமைக்கப்பட்டது.
- **மூர்த்தி தலம் தீர்த்தம்**

  இறைவன் - சுந்தரேஸ்வரர்

  இறைவி - சௌந்தராம்பிகை

  தலவிருட்சம் - அரசு, வன்னி, இலுப்பை

  தீர்த்தங்கள் - பரமானந்தகூடம், சித்தாமிர்தவாவி, துர்வாசவாகரம்

- **பூசைகளும் விழாக்களும்**

  பங்குனி உத்தரத்தில் நிறைவடையும் வகையில் சிவபெருமான் திருவிழா பத்து தினங்களும், ஆடிப்பூரத்தில் நிறைவடையும்படி அம்பாள் திருவிழா பத்துத் தினங்களும், ஆருத்திரா தரிசனத்தில் நிறைவடையும் வகையில் ஐயனார் திருவிழா பத்துத் தினங்களும் நடைபெறுகின்றன. இதைவிடத் தைப்பூசம், மாசிமகம் முதலானவையும் சிறப்பாக நடைபெறுகின்றன.

- **நூல்கள்** - திண்ணபுரம் அந்தாதி, திண்ணபுர திருப்பதிகம், திண்ணபுர ஊஞ்சல், திண்ணபுர வெண்பா, திண்ணபுர சுந்தரேஸ்வரர் பதிகம் முதலானவை.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- பொன்னம்பலவாணேஸ்வரர், ஈழத்துச் சிதம்பரம் (காரைநகர் சிவன்) ஆலயத்தின் ஆலயப் புகைப்படங்கள், திருவிழா வீடியோக்கள்
- குழுத்தேடல், ஆய்வுப்பத்திரம், நூல்கள்
- எழுதுகருவி, நிறப்பேனாக்கள்.

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர ஆலயம் பற்றி வரலாற்றினைச் சுருக்கமாக விபரிப்பார்.
- ஈழத்துச் சிதம்பரம் (காரைநகர் சிவன்) ஆலயம் பற்றிய வரலாற்றினை சுருக்கமாக விபரிப்பார்.
- பொன்னம்பலவாணேஸ்வர ஆலய கட்டடக்கலையின் சிறப்பினைத் தேடி எழுதுவார்.
- ஈழத்துச் சிதம்பரம் (காரைநகர் சிவன்) ஆலயத்தின் திருவிழா பற்றிய விடயங்களை தெளிவுபடுத்துவார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1
- ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர ஆலயம் பற்றி வரலாற்றினைச் சுருக்கமாக விபரிக்குக.

குழு 2
- ஈழத்துச் சிதம்பரம் (காரைநகர் சிவன்) ஆலயம் பற்றிய வரலாற்றினைச் சுருக்கமாக விபரிக்குக.

குழு 3
- பொன்னம்பலவாணேஸ்வர ஆலய கட்டடக்கலையின் சிறப்பினைத் தேடி எழுதுங்கள்.

குழு 2
- ஈழத்துச் சிதம்பரம் (காரைநகர் சிவன்) ஆலயத்தின் திருவிழா பற்றிய விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் அனைவரும் ஆலயத்திற்கு நேரடியாகச் சென்று வழிபாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துங்கள்.
- ஆலய வரலாறு, கட்டடக்கலை பற்றிய தகவல்களுடாக எமது பாரம்பரியத்தை எடுத்துச் சொல்லுங்கள்.

**தேர்ச்சி 9.0** : ஈழத்துச்சைவமரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : ஈழத்துச் சைவ ஆலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பார்.

**செயற்பாடு** : மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம், பெரியபோரைதீவு பத்திரகாளியம்மன் ஆலயம் பற்றிய சிறப்பம்சங்களை அறிந்து செயற்படுவோம்.

**நேரம்** : 02 பாட வேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- மாத்தளை முத்துமாரியம்மன், பெரியபோரைதீவு பத்திரகாளி அம்மன் ஆலயம் பற்றிய சிறப்பம்சங்களை அறிந்து கொள்வார்.
- அமம்மன் ஆலயத்திற்குச் சென்று பக்தியுடன் வழிபடுவார்.
- ஆலயங்களின் வழிபாட்டு முறைகளில் காணப்படும் அதீத நம்பிக்கைகள் பற்றி எடுத்துரைப்பார்.
- ஆலயங்களின் சமூக நலன் பேணும் செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1.1.1:**
- மாணவர்களுக்குத் தெரிந்த ஈழத்திலுள்ள அம்மன் ஆலயங்கள் பற்றிக் கேட்டறியுங்கள்.
- அம்மன் ஆலயங்களின் வழிபாட்டு முறைகளில் காணப்படும் அதீத நம்பிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- போரைதீவு பத்திரகாளி அம்மன் ஆலயம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- மேற்குறிப்பிட்ட ஆலயங்களின் சமூக நலன் பேணும் செயற்பாடுகளைக் கலந்துரையாடுங்கள்.

**படி 1.1.2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**
- குழுச்செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனையை வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக் கருத்துக்களை வழிப்படுத்துங்கள்.

**படி 1.1.4:**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.

**மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம்**

**அமைவிடம்**

- மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தின் தலைநகரில் அமைந்துள்ளது.

**வரலாற்றுச் சிறப்பு**

- ஆரம்ப காலத்தில் இவ் ஆலயம் வில்வ மரத்தடியில் சிறு குடிலாகவே காணப்பட்டது.
- 1852ஆம் ஆண்டிலே இக்கோயிலும் அதனைச் சூழ்ந்த நிலமும் சாசனம் செய்து வைக்கப்பட்டது. இதன்பின்னர் மாத்தளைச் செட்டிமாரால் நிர்வகிக்கப்படுகின்றது.

**பூசைகளும் விழாக்களும்**

- மாசிமகத்தில் ஸ்ரீ பஞ்சரத உற்சவம் நடைபெறக்கூடியவகையில் அதற்கு முன்னைய இருபத்தொரு நாள்களும் இக்கோயிலின் மகோற்சவ காலமாகும்
- கொடியேற்றத் தினத்தில் காலையில் கொடிச்சீலையை யானைமேல் வைத்து ஊர்வலமாகப் புறப்பட்டு அங்குள்ள காளி கோயிலுக்குச் சென்று பின்பு ஆலயத்தை அடைந்ததும் கொடியேற்றம் நிகழும்.
- மாசி மகத்துடன் கூடிய பௌர்ணமி நிலவில் சித்திரைத் தேர்கள் ஐந்தும் அசைந்து வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.
- அம்பாளின் பெரிய ரதத்தினைப் பெண்களே வடம் பிடித்து இழுத்து வருவர்.

**பெரியபோரைதீவு பத்திரகாளியம்மன் ஆலயம்**

**அமைவிடம்**

- மட்டக்களப்பில் இருந்து தெற்குநோக்கி முப்பது கிலோமீற்றர் தொலைவில் (படுவான்கரை) பெரியபோரைதீவில் அமைந்துள்ளது.

**வரலாற்றுச் சிறப்பு**

- 1556இல் இவ்வாலயம் உருவாக்கப்பட்டு 1825இல் கல்லால் கட்டப்பட்டது என கல்வெட்டுக் கூறுகின்றது. (மட்டக்களப்பு சைவக் கோயில் வரலாறு வி.சி.கந்தையா)

**பூசைகளும் விழாக்களும்**

- புராதன முறைப்படி நாட்டார் மரபுதழுவிய பத்ததி முறையில் சடங்கு நடைபெறுகின்றது.
- சடங்கு வழிபாடு வருடாந்தம் நடைபெறும் குறிப்பாக புரட்டாதி மாதம் நவராத்திரியின் இறுதிநாளான ஆயுத பூசைக்கு அண்மையாக வரும் புதன்கிழமையை தீமிதிப்பாகக் கொண்டு 12 நாட்கள் நடைபெறும்.
- இன,மத, சாதி வேறுபாடின்றி சடங்குகள் பிரிக்கப்பட்டு அனைவருக்கும் சடங்குகளில் பங்கு பற்றச் சந்தர்ப்பம் அளிக்கும் முறையும் உண்டு.
- சடங்குகள் நாட்டார் அறிவியலோடு தொடர்புபட்டதாக நடைபெறுவது சிறப்புக்குரியது.
- ஆலயத்தினூடாகச் சமய, சமூக விழுமியங்கள் வளர்க்கப்படுவதோடு, ஆலயத்தினூடாகப் பல்வேறு சமூகப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- குறிப்பிட்ட அம்மன் ஆலயப்படங்கள்
- குழுத்தேடல் ஆய்வுப்பத்திரம்
- திருவிழா, சடங்கு பற்றிய வீடியோக்கள்
- எழுது கடதாசி, நிறப்பேனாக்கள்

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- மாத்தளை முத்துமாரியம்மன் ஆலய சிறப்பினை எடுத்துக் கூறுவார்.
- போரைதீவு காளியம்மன் ஆலய சிறப்பினை எடுத்துக் கூறுவார்.
- ஆலயங்களின் வரலாற்றுக் கதையினை விளக்கமாகக் கூறுவார்
- மாத்தளை முத்துமாரியம்மன் ஆலய பூசைகள், விசேட வழிபாடுகள் பற்றி எடுத்துக்கூறுவார்.
- போரைதீவு காளியம்மன் ஆலயச் சடங்கு முறையான விசேட வழிபாடுகள் பற்றி எடுத்துக்கூறுவார்.

## இணைப்பு 1.1.1 மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1 • மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் பற்றிய வரலாற்றுக் கதையைத் தேடி எழுதுங்கள்.

குழு 2 • இவ்வாலயத்தில் சிறப்பாக நடைபெறும் பஞ்சரத தேர் பவனி பற்றி விளக்கமாக முன்வையுங்கள்.

குழு 3 • போரைதீவு காளியம்மன் ஆலய சடங்கு முறையான விசேட வழிபாடுகள் பற்றி எடுத்துக்காட்டுங்கள்

குழு 4 • மேற்குறிப்பிட்ட ஆலயங்களின் சமூக நலன் பேணும் செயற்பாடுகளைக் கலந்துரையாடி, மேடைப் பேச்சொன்றைத் தயார் செய்யுங்கள்

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் அனைவரும் ஆலயத்திற்கு நேரடியாகச் சென்று வழிபாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள்.
- ஆலய வரலாறு பற்றிய தகவல்களைப் பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்தி அம்மன் வழிபாட்டின் மீதுள்ள நம்பிக்கையை மேம்படுத்துங்கள்.

**தேர்ச்சி 9.0** : ஈழத்துச்சைவமரபுகளையும் , தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : ஈழத்துச் சைவ ஆலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பார்.

**செயற்பாடு** : தாந்தாமலை முருகன் ஆலயம் பற்றிய வரலாற்றுச் சிறப்பம்சங்களை அறிந்து வழிபடுவோம்.

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்** :

- தாந்தாமலை முருகன் ஆலயம் பற்றிய சிறப்பம்சங்களை அறிந்து கொள்வார்.
- தலயாத்திரைக்குச் சிறப்பான தலம் என்பதை அறிந்து ஆலயத்திற்கு சென்று பக்தியுடன் வழிபடுவார்.
- ஆலயத்தின் மூர்த்தி தல சிறப்புக்களை அறிந்து ஏனையவருக்கும் எடுத்துரைப்பார்.
- ஆலயத்தினால் முன்னெடுக்கப்படும் சமூக நலன்பேணும் செயற்பாடுகளை பட்டியற்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1:**

- மாணவர்களுக்குத் தெரிந்த ஈழத்திலுள்ள முருகன் ஆலயங்கள் பற்றிக் கேட்டறியுங்கள்.
- முருக வழிபாட்டின் தோற்றம் பற்றிய செய்திகளைக் கலந்துரையாடுங்கள்
- கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள முருகன் ஆலயங்கள் பற்றி வினவுங்கள்.
- தாந்தாமலை முருகன் ஆலயம் பற்றிய புராண இதிகாசக் கதைகள், செவிவழிக் கதைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**படி 1.1.2:**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**

- குழுச்செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனையை வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக் கருத்துக்களை வழிப்படுத்துங்கள்.

**படி 1.1.4:**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- தாந்தாமலை திருத்தலம் நெல்வயல்களைக் கொண்ட மருதநிலத்தையும் குன்றுகளைக் கொண்ட குறிஞ்சி நிலத்தையும் காடும் காடு சார்ந்த நிலமான முல்லை நிலத்தையும் அண்மித்து இருக்கின்றது.
- தாந்தம் என்ற சொல் தாட்சண்யம் சாத்வீகம் சாந்தம் அமைதி என்ற கருத்துக்களையுடையது. தாந்தாமலை என்பது சாந்தி தரும் மலையாகும். அதனால் சாந்தமலை எனவும் பெயர் பெற்றது.
- குமரிக் கண்டத்திலிருந்து வந்த இலிங்கங்களில் ஐந்தாவது இலிங்கம் சாந்தலிங்கம் ஆகும். இது தாந்தாமலையில் நிறுவப்பட்டது.
- தாண்டவமும் சாந்தியும் என்ற புராணக்கதையில் இறைவனின் தாண்டவம் தாந்தாமலையிலும் பிரதிபலித்தது. அதனால் இம்மலை தாண்டவ கிரியாயிற்று.
- தில்லையில் நடனம் புரிந்த நடராஜப் பெருமான் தாந்தா மலையிலும் நடனம் புரிந்தமையாலே தாண்டவகிரி எனப் பெயர் பெற்றதாகும்.
- 1956இன் பின்னர் முருகனது தலமாகியது.
- தாந்தாமலை வருடாந்த உற்சவம் ஆடிமாதம் வளர்பக்க பிரதமையில் கொடியேற்றி ஆடிப் பௌர்ணமியும் திருவோண நட்சத்திரமும் கூடிய திருநாளில் தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது,
- மகோற்சவம் 22 நாட்கள் இடம்பெறும். ஒவ்வொரு நாட்திருவிழாக்களும் ஒவ்வொரு ஊர்மக்களால் நடாத்தப்படும்.
- இங்கு நித்திய நைமித்திய பூசைகளும் விழாக்களும் இடம்பெறுகின்றன.
- தினமும் பூசை மதியத்தில் நடைபெறுகின்றன.
- விசேட பூசைகளாக ஆடிஅமாவாசை,ஆடிப்பூரம், ஆவணிச்சதுர்த்தி, நவராத்திரி, கந்தசஷ்டி விரதம், கார்த்திகைத்திருவிழா, விநாயகர் சஷ்டி, தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், சிவராத்திரி, வருடப்பிறப்பு, பங்குனி உத்தரம், சித்திரைச் சித்திரை என்பன விசேடமாக நடைபெறுகின்றன.
- இங்கு முற்காலத்தில் மழைவேண்டிப் பொங்கல் செய்து விழா எடுக்கப் பெருமழை பெய்ததாகவும் இப்பொழுதும் இம்முறை பின்பற்றப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இதனை ‘‘இந்திர விழா’’ எனக் கூறுகின்றார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- தாந்தாமலை முருகன் ஆலயப்படங்கள்
- குழுத்தேடல் ஆய்வுப்பத்திரம்
- எழுது கடதாசி, நிறப்பேனாக்கள்

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- தாந்தாமலை ஆலயத்தின் சிறப்பினை எடுத்துக் கூறுவார்.
- தாந்தாமலை முருகன் ஆலய புராண இதிகாச, செவிவழிக் கதையினை விளக்கமாகக் கூறுவார்
- தாந்தாமலை முருகன் ஆலயப் பூசைகள், விசேட வழிபாடுகள் பற்றி எடுத்துக்கூறுவார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1 • தாந்தாமலை முருகன் ஆலயம் பற்றிய ஐதீகக் கதையை தேடி எழுதுங்கள்

குழு 2 • இவ்வாலயத்தில் அமைந்துள்ள ஏனைய ஆலயங்கள் பற்றி விளக்கமாக முன்வையுங்கள்

குழு 3 • இவ்வாலயத்தின் சிறப்பினை மேடைப் பேச்சாக முன்வையுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ........................................................................................................................
2. ........................................................................................................................
3. ........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் அனைவரும் ஆலயத்திற்கு நேரடியாகச் சென்று வழிபாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள்.
- ஆலய வரலாறு பற்றிய தகவல்களைப் பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்தி தலயாத்திரை மேற்கொள்ளுங்கள்.

**தேர்ச்சி 9.0** : ஈழத்துச்சைவமரபுகளையும் , தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : ஈழத்துச் சைவ ஆலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பார்.

**செயற்பாடு** : தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயம் பற்றிய வரலாற்றுச் சிறப்பம்சங்களை அறிந்து கொள்வோம்.

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்** :

- செல்வச் சந்நிதி ஆலயம் பற்றிய சிறப்பம்சங்களை அறிந்து கொள்வார்.
- முருகன் ஆலயத்திற்குச் சென்று பக்தியுடன் வழிபடுவார்.
- ஆலயங்களின் வழிபாட்டு முறைகளில் காணப்படும் அதீத நம்பிக்கைகள் பற்றி எடுத்துரைப்பார்.
- ஆலயங்களின் சமூக நலன் பேணும் செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1.1.1:**
- மாணவர்களுக்குத் தெரிந்த ஈழத்திலுள்ள முருகன் ஆலயங்கள் பற்றிக் கேட்டறியுங்கள்.
- வட மாகாணத்தில் அமைந்துள்ள முருகன் ஆலயங்கள் பற்றி வினவுங்கள்.
- செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**படி 1.1.2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**
- குழுச்செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனையை வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றி தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக் கருத்துக்களை வழிப்படுத்துங்கள்.

**படி 1.1.4:**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- **அமைவிடம்**

  யாழ்ப்பாணத்தின் வடகிழக்குத் திசையில் தொண்டமானாற்றங் கரையில் செல்வச் சந்நிதி ஆலயம் அமைந்துள்ளது.
- **செல்வச் சந்நிதி பதவிளக்கம்**

  முருகனின் திருவருட் செல்வம் நிறைந்த இடம் என்பதாலும் அடியார்களுக்கு வழங்குவதாலும் செல்வச் சந்நிதி என அழைக்கப்படுகின்றது.

**வரலாற்றுச் சிறப்பு**

- சிகண்டி முனிவரால் சாப நீக்கம் பெற்ற தேவ குலத்தவரான ஐராவசு என்பவர் அங்குள்ள தல விருட்சமான பூவரசு மரத்தடியிலிருந்து தவம் புரிந்து முத்தி பெற்றார்.
- ஒல்லாந்தர் இக்கோயிலை உடைத்தபோது மரணம் அடைந்தனர். தெய்வ பயத்தினால் மீதிக் கோயில் உடைக்கப்படவில்லை.
- ஒல்லாந்தர் காலத்திற்குப் பின், இவ்வாலயத்தைச் செட்டிமார் நிர்வகிக்க சைவக்குருமார் பூசைகளைச் செய்து வந்தனர்.
- முருகன், மருதர் கதிர்காமரைக் கதிர்காமத்திற்கு அழைத்துச் சென்று பூசைமுறைகளைக் காட்டி வெள்ளி வேலும் கொடுத்து,பூசை செய்யும் முறையையும் சொல்லிக் கொடுத்தார்.

**பூசைகளும் , விழாக்களும்**

- இவ்வாலயப் பூசகர், கதிர்காம முறைப்படி வாய்கட்டி, மந்திரமின்றி, பூசை செய்வார்.
- ஆவணிப் பூசையன்று தீர்த்தோற்சவம் நடைபெறக் கூடியதாக அதற்கு முதல் வரும் வளர்பிறைப் பிரதமையில் கொடியேற்றம் நிகழும்.
- இங்குள்ள பூவரசு மரத்தடியில் வள்ளிக் கொடி முளைப்பதே கொடியேற்றமாகும்
- இவ்வாலயத்தின் திருவிழாவில் மூன்று தேர்கள் இழுக்கப்படுகின்றன.

**மடங்கள்**

செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் பல மடங்கள் உள்ளன. அவற்றுள் சந்நிதியான் ஆச்சிரமம் தனித்துவமானது.

- அடியார்களுக்கு நாள்தோறும் அன்னதானம் வழங்கி வருகின்றது.
- ஏழைகளுக்கு சமூகப் பணி புரிந்து வருகின்றது.
- ''ஞானச்சுடர'' எனும் மாத சஞ்சிகை வெளியிடப்படுகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- சந்நதி முருகன் ஆலயப்படங்கள்
- குழுத்தேடல் ஆய்வுப்பத்திரம்
- எழுது கடதாசி, நிறப்பேனாக்கள்

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- செல்வச் சந்நிதி ஆலயச் சிறப்பினை எடுத்துக் கூறுவார்.
- செல்வச் சந்நிதி முருகன் ஆலய புராணக் கதையினை விளக்கமாகக் கூறுவார்
- செல்வச் சந்நிதி முருகன் ஆலயபூசைகள், விசேட வழிபாடுகள் பற்றி எடுத்துக்கூறுவார்.

## இணைப்பு 1.1.1 மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1 • செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் பற்றிய ஐதீகக் கதையைத் தேடி எழுதுங்கள்

குழு 2 • இவ்வாலயத்தில் அமைந்துள்ள ஏனைய ஆலயங்கள் பற்றி விளக்கமாக முன்வையுங்கள்

குழு 3 • இவ்வாலயத்தின் சிறப்பினை மேடைப் பேச்சாக முன்வையுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் அனைவரும் ஆலயத்திற்கு நேரடியாக சென்று வழிபாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள்.
- ஆலய வரலாறு பற்றிய தகவல்களை பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்தி இறைவன் மீதுள்ள நம்பிக்கையை மேம்படுத்துங்கள்.

**தேர்ச்சி 9.0** : ஈழத்துச்சைவமரபுகளையும் , தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : ஈழத்துச் சைவ ஆலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பார்.

**செயற்பாடு** : திமிலதீவு மகாவிஷ்ணு ஆலயம், யாழ்ப்பாணம் பெருமாள் ஆலயம் வரலாற்றுச் சிறப்பம்சங்களை அறிந்து கொள்வோம்.

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- திமிலதீவு மகாவிஷ்ணு ஆலயம் பற்றிய சிறப்பம்சங்களை அறிந்து கொள்வார்.
- யாழ்ப்பாணம் பெருமாள் ஆலயம் பற்றிய சிறப்பம்சங்களை அறிந்து கொள்வார்.
- ஆலயங்களின் வழிபாட்டு முறைகளில் காணப்படும் அதீத நம்பிக்கைகள் பற்றி எடுத்துரைப்பார்.
- ஆலயங்களின் சமூக நலன் பேணும் செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**:

**படி 1.1.1:**

- மாணவர்களுக்குத் தெரிந்த ஈழத்திலுள்ள விஷ்ணு ஆலயங்கள் பற்றிக் கேட்டறியுங்கள்.
- விஷ்ணு ஆலயங்களின் வழிபாட்டு முறைகளில் காணப்படும் அதீத நம்பிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- திமிலதீவு மகாவிஷ்ணு ஆலயம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- யாழ்ப்பாணம் பெருமாள் ஆலயம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- மேற்குறிப்பிட்ட ஆலயங்களின் சமூக நலன் பேணும் செயற்பாடுகளை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**படி 1.1.2:**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்குத் தேவையான தரஉள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி 1.1.3:**

- குழுச்செயற்பாட்டின் போது மாணவருக்குத் தேவையான ஆலோசனையை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரின் விமர்சனக் கருத்துக்களை வழிப்படுத்துங்கள்.

**படி 1.1.4:**

- கீழே தரப்பட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.

**திமிலதீவு மகாவிஷ்ணு ஆலயம்**

**அமைவிடம்**

- மட்டக்களப்பு நகருக்குத் தென்மேற்கில், சுமார் இரண்டரை மைல் தொலைவில் திமிலதீவில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

**வரலாற்றுச் சிறப்பு**

- ஈழத்தின் கிழக்கிலே அன்று ஐந்து லிங்கங்கள் நிறுவப் பெற்றிருந்தன கோணலிங்கம், மாமாங்க லிங்கம், திமில லிங்கம், தான்தோன்றிலிங்கம், சாந்தலிங்கம் காலமாற்றத்தால் மாமாங்கலிங்கம் மாமாங்கப் பிள்ளையாராயிற்று, திமில லிங்கம் திமிலை மகாவிஷ்ணுவாயிற்று, சாந்தலிங்கம் தாந்தாமலை முருகனாயிற்று.
- திமிலை மகாவிஷ்ணு ஆலய வழிபாடுகள் பற்றித் தான்தோன்றீச்சர புராணம் குறிப்பிடுகின்றது.
- திமிலை லிங்கமும் பாரம்பரிய இராமகதையோடு தொடர்புபடுத்தப் படுகின்றது.
- திமிலை லிங்கம் தொடர்பான மேலும் பல தகவல்களைத் திமிலத் திருமால் வரலாற்றுக் காவியம் குறிப்பிடுகின்றது. (இணைப்பு-1)
- ஆலய வரலாற்றுடன் தொடர்புடைய செவிவழிக் கதைகளும் உண்டு (இணைப்பு-1)
- குளக்கோட்டன் காலத்து திமிலைத்திருமால் ஆலயம் பற்றிய செய்திகளும் உண்டு (இணைப்பு-1)

**பூசைகளும் விழாக்களும்**

- வைகாசித்திங்களில் திருவிழா கோலாகலமாக நடைபெறும் திருவிழாக்கள் நாடகபாணியிலே நடைபெறுவது சிறப்புக்குரியது.
- **முதலாம் திருவிழா** - கஞ்சனின் சகோதரிகள் மாங்கனி பறிக்கக் கோரி உண்ணல்

  **இரண்டாம் நாள் திருவிழா** - கண்ணனால் பூதனை வதைக்கப்படுதல்

  **மூன்றாம் நாள் திருவிழா**- யசோதையால் உரலில் கட்டுண்ட மாதவன் மருதுகளைச் சாய்த்தல்

  **நான்காம் திருவிழா** - கண்ணன் கன்று கொண்டு கனிக் கெறிதலும்

  **ஐந்தாம் நாள் திருவிழா** - கூத்தாடிகள் கோபாலனால் மடிவதும்

  **ஆறாம் நாள் திருவிழா** - வாணன் யுத்தமும்

  **ஏழாம் நாள் திருவிழா** - நரகாசுரன் வதையும்

  **எட்டாம் நாள் திருவிழா** - கம்ச சம்காரமும்

  **ஒன்பதாம் திருவிழா** - கிருஷ்ணன் உருப்பிணி திருக்கல்யாணமும் நாடகப் பாணியில் நடைபெறும்
- அடுத்தநாள் அமுது வழங்கப் பெற்று திருவிழா இனிதே நிறைவுபெறும்.

யாழ்ப்பாணம் பெருமாள் ஆலயம்

- யாழ்நகரில் வைத்திய சாலையின் கிழக்குப் பக்கமாக ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.
- இவ்வாலயம் 1665 ஆம் ஆண்டளவில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது.
- இவ்வாலயம் நல்லூர் இராசதானியின் வாரிசு ஆன தமிழ் மன்னன் குணபூசணசிங்கை ஆரியன் செகராசசேகரனின் காலத்து சிறிய உருவில் பத்மசாலிச் செட்டிகளால் தமது வைணவ சமய சம்பிரதாயத்தையும் தமது சமூகத்தினரின் தெய்வ வழிபாட்டையும் வளர்ப்பதற்கு என உருவாக்கப் பெற்ற திருக் கோவிலாகும்.
- இவ்வாலயம் ஏறத்தாழ 14ம் நூற்றாண்டில் தாபிக்கப்பட்டதொன்றாகும். பின்னர் 1685 ம் ஆண்டளவில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டு மீண்டும் ஒல்லாந்தர் காலத்தில் புனரமைக்கப்பட்டது.
- பெருமாள் ஆலயம்
  - இறைவன் - ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள்
  - தீர்த்தம் - சந்திரபுஸ்கரணி
- இவ் உற்சவம் புரட்டாதி திங்களில் வரும் சுக்கில பக்ஷத் திதியில் வரும் அத்தம் அல்லது சித்திரை நட்சத்திரத்தில் துவஜா ஆரோகணத்துடன் பிரமோற்சவம் ஆரம்பமாகி ஒன்பதாவது தினமாகிய உத்தராட நட்சத்திரத்தன்று இரதோற்சவமும் பத்தாவது நட்சத்திரமாகிய திருவோண நட்சத்திரத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெற்று பின்பு துவஜா அவரோகணம் நடைபெறுகின்றது.
- இவ்வாலயத்தின் மீது மா.த.ந.வீரமணி ஐயர் வண்ணை வெங்கடேசப் பெருமாள் கீர்த்தனை பாடியுள்ளார்

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- குறிப்பிட்ட விஷ்ணு ஆலயப் படங்கள்
- குழுத்தேடல் ஆய்வுப்பத்திரம்
- திருவிழா பற்றிய வீடியோக்கள்
- எழுது கடதாசி, நிறப் பேனாக்கள்

## படி 1.1.5 கணிப்பீட்டு, மதிப்பீட்டிற்கான நியதிகள்

- திமிலதீவு மகாவிஷ்ணு ஆலய சிறப்பினை எடுத்துக் கூறுவார்.
- யாழ்ப்பாணம் பெருமாள் ஆலய சிறப்பினை எடுத்துக் கூறுவார்.
- ஆலயங்களின் வரலாற்றுக் கதையினை விளக்கமாகக் கூறுவார்
- திமிலதீவு மகாவிஷ்ணு ஆலய பூசைகள், விசேட வழிபாடுகள் பற்றி எடுத்துக்கூறுவார்.
- யாழ்ப்பாணம் பெருமாள் ஆலய விசேட திருவிழா வழிபாடுகள் பற்றி எடுத்துக்கூறுவார்.

## இணைப்பு 1.1.1 மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1 • திமிலதீவு மகாவிஷ்ணு ஆலயம் பற்றிய வரலாற்று கதையைத் தேடி எழுதுங்கள்

குழு 2 • திமிலதீவு மகாவிஷ்ணு ஆலயத்தில் சிறப்பாக நடைபெறும் வருடாந்த உற்சவம் பற்றி விளக்கமாக முன்வையுங்கள்

குழு 3 • யாழ்ப்பாணம் பெருமாள் ஆலயத் திருவிழா விசேட வழிபாடுகள் பற்றி எடுத்துக்காட்டுங்கள்

குழு 4 • மேற்குறிப்பிட்ட ஆலயங்களின் சமூக நலன் பேணும் செயற்பாடுகளை கலந்துரையாடி, மேடைப் பேச்சொன்றைத் தயார் செய்யுங்கள்

**ஆசிரியருக்கானது:**

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியற்படுத்துக.

1. ....................................................................................................................................
2. ....................................................................................................................................
3. ....................................................................................................................................

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் அனைவரும் ஆலயத்திற்கு நேரடியாகச் சென்று வழிபாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள்.
- விஷ்ணு ஆலய வரலாறு பற்றிய தகவல்களை பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்தி இறைவன் மீதுள்ள நம்பிக்கையை மேம்படுத்துங்கள்.

# இணைப்பு - 1

## திமிலதீவு ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயம்

முதன் முதல் மனிதகுலம் தோன்றிய இடம் 'இலமூரியாக் கண்டம்' என்பர். அது ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியாக் கண்டங்களுக்கிடையேயுள்ள பாரிய நீர்ப்பரப்பில் அமைந்திருந்ததாக, மேனாட்டு வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். அவ்விடத்தை 'மனித குலத்தின் தொட்டில்' எனவும் பாராட்டுவர். அக் கண்டத்தையே நமது தமிழ் இலக்கியங்கள் 'குமரிக் கண்டம்' எனக் குறிப்பிடுகின்றன.

> 'பஃறுளி யாற்றொடு பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள' எனச் சிலப்பதிகாரம் கூறுவதும் அதுவே.

குமரிக் கண்டத்திலலே 'எல்லம்' என்ற நாடு இருந்தது. 'எல்' என்பது ஒளி, 'எல்லம்' என்பது ஒளிநாடு. அந்த நாட்டை ஆண்டவன் முதலாம் எல்லாளன். அவன் துட்டகாமினி காலத்து எல்லாளன் அல்லன். எல்லாளன் என்பது காரணப்பெயர்.

அந்த நாட்டு மக்களுக்கு, நெற்றியிலே ஒரு புடைப்பு இருந்ததாக 'இழந்த இலமூரியா' நூலாசிரியர் குறிப்பிடுகிறார். அதனால் அவர்கள் எதிர்வு கூறக் கூடியவர்களாக இருந்தனர். அந்தப் புடைப்பை நமது முழுமுதற் கடவுளின் நெற்றிக் கண்ணோடு தொடர்பு படுத்தலாம்.

எல்லாளன் தமது நாடு கடலில் மூழ்கப் போகிறது என்பதை உணர்ந்தான். பாரிய கப்பல்களைக் கட்டினான். மக்களை ஏற்றி உலகின் பல திசைகளுக்கும் அனுப்பினான். உலகமெல்லாம் இலிங்கங்களை நிறுவலானான். பல திசைகளுக்கும் சென்ற மக்கள் ஆங்காங்கே நதியோரங்களில் வாழ்ந்து, நாகரிகங்களை வளர்த்தனர். அந்தந்த நாடுகளின் தட்ப, வெப்ப நிலைகளுக்கேற்ப, பல்வேறு நிற, மொழி, இன, மதபேதம் கொண்டவர்களாக வளரலாயினர்.

அன்றைய எல்லத்தின் மேற்கிலே இன்றைய ஈழத்தின் கிழக்கிலே அன்று சிவலிங்கங்கள் ஐந்து நிறுவப் பெற்றன. அவை : கோணலிங்கம், மாமாங்கலிங்கம், திமிலைலிங்கம், தான்தோன்றிலிங்கம், சாந்தலிங்கம் என்பனவே. கால மாற்றத்தால், மாமாங்கலிங்கம் மாமாங்கப் பிள்ளையாராயிற்று. திமிலைலிங்கம், திமிலை மகாவிஷ்ணுவாயிற்று. சாந்தலிங்கம் தாந்தாமலை முருகனாயிற்று. அந்த இலிங்கங்கள் எங்கே? நிலமடந்தை வயமாகியிருக்கலாமா? வெளிச்சம் இல்லை.

மாமாங்கலிங்கம், இராமகாதையோடு தொடர்புபடுத்தப்படுதல் போல, திமிலைலிங்கமும் பாரம்பரிய இராம காதையோடு தொடர்புபடுத்தப்படுகிறது. திமிலைலிங்கம் ஈழத்தின் ஆதிக்குடித் தமிழரான திமிலரால் பூசிக்கப் பெற்று வந்தது. இத்தகவலை தான்தோன்றீச்சரத்தொல் படர்நெறியமான தான்தோன்றீச்சரம் புராணமும் குறிப்பிடுகிறது. திமிலை லிங்கம் தொடர்பான மேலும் பல தகவல்களைத் திமிலைத் திருமால் வரலாற்றுக் காவியமும் குறிப்பிடுகிறது.

திமிலர்கள், தமது பாரம்பரியத் தொழில்களான நாவாய்ப்படகு செலுத்துதல், மீன்பிடித்தல் என்பனவற்றைப் புரிந்து வந்ததோடு, விவசாயமும் செய்யத் தலைப்பட்டனர். திமிலதீவில் நிறைய வயல்கள் உருவாக்கப் பெற்றன. திமிலை லிங்கத்திற்கு முன்னாகவும் பின்னாகவும் இரண்டு குளங்கள் கூடக் கட்டப் பெற்றன. திருமால் ஆலயத்திற்கு முன்னாலுள்ள "சோதயன் கட்டு' இதற்கு மேலும் சான்றாகிறது. விவசாயத்திற்குத் தோன்றாத் துணையான மந்தை வளர்ப்பிலும் ஈடுபட்டனர் அதனால், இடையர் தலைவனான கிருஷ்ணனையும் வழிபட ஆரம்பித்தனர்.

திமிலர் தலைவர்கள், திமிலதீவிலிருந்து மட்டக்களப்பை ஆட்சி செய்து வந்தனர். அவர்களில் ஒருவனான 'புலியன்' புளியந்தீவில் இருந்தே ஆளத் தலைப்பட்டான். அதனால் அத்தீவு 'புலியன் தீவு' ஆயிற்று. அது பின்னர் 'புளியந்தீவாக மருவிற்று.

**முற்குகர் வருகையும் மட்டக்களப்பும்**

திமிலருக்கும் முற்குகருக்கும் இடையில் பலவாறு இடம்பெற்ற போரிலே முற்குகர் வெற்றிகொண்டு திமிலையை தம்வசமாக்கிக் கொண்டனர். இந்தப் போர் தொடர்பாக சில ஊர்கள் காரணப்பெயர் பெறவும் நேரிட்டது. சத்துருக்கொன்றான், ஏறாவூர் வந்தாறு மூலை போன்றன இதற்கு எடுத்துக்காட்டாகும். இந்தப் போர்க்கால நிலையால் 'திமிலைலிங்கம்' தேடுவாரற்று மறையலாயிற்று. விஷ்ணு வழிபாடு ஓங்கலாயிற்று. திமிலதீவு முற்குகத் தமிழர் நிலமாயிற்று.

குளக்கோட்டன் மட்டக்களப்பை ஆளத் தொடங்கியதும் தான்தோன்றீச்சரம் முதற்கொண்டு பல ஆலயங்களை மீளக்கட்டினான். பல குளங்களை அமைத்ததோடு பலவற்றைப் புத்தமைத்தான். அவற்றில் ஒன்று திமிலதீவு ஆலயமாகும். அவன் முழுக்க முழுக்க சிவத்தொண்டையே மேற்கொண்டானாயினும் அதற்குப் புறநடையாக அமைந்தது இவ்வாலயமாகும். எதிர்கால சைவ வைணவ மதங்களின் ஒற்றுமைக்குக் கட்டியம் கூறுவது போல அவனது தொண்டு அமைந்ததாகக் கூட எடுத்துக்கொள்ளலாம்.

திமிலதீவில் அமைக்கப்பட்ட ஆலயம், கோபுரங்களோடு, சுற்று மதிலையும் கொண்டிருந்தது. அகழ்ந்து பார்த்தால், அந்த மதிலின் தடயங்களை இன்றும் காணலாம். ஆலயத்தின் பின்புறத்தும் முன்புறத்தும் இருந்து தூர்ந்து போன குளங்கள் புத்தாக்கம் பெற்றன. இன்றும் அவை பள்ள வயல்களாகக் காணப்படுகின்றன.

அன்று அக்குளங்களால் நீர் பாய்ச்சப் பெற்ற பெருந்தொகையான வயல் நிலங்கள், ஆலயத்துக்கே உரித்தானவையாயிருந்ததோடு ஆயமாக நல்ல வருவாயும் ஈட்டின. காலவோட்டத்தில் அவை தனியார் வசப்பட்டு விட்டன.

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் ஏராளமான சைவ ஆலயங்கள் அழித்தொழிக்கப்பட்டன. அதில் திமிலதீவு ஆலயமும் ஒன்றாகும். இதை திமிலைத்திருமால் வரலாற்றுக் காவியம் விபரமாகத் தருகிறது.

மட்டக்களப்புக்கு அண்மித்ததாக, திமிலத்தீவில் இருந்த குளக்கோட்டனால் நிறுவப்பெற்ற, பிரசித்தி பெற்ற திமிலைத்திருமால் ஆலயத்தை இடித்துத் தள்ள பறங்கித்துரை குதிரையில் புறப்பட்டான். அவனது வீரர்களும், வேலைக்கார அடிமைகளும் அவனைப் பின் தொடர்ந்தனர். சவுரிதுறையைக் கடக்க, தோணிகளை ஒன்றிணைத்து பலகைகளைப் பரப்பினர். துரையும் ஆட்களும் அதில் ஏறி ஆற்றைக் கடந்தனர். சேற்றுக்குடா, வீச்சுக்கல் முனையால் நடந்து திமிலதீவையடைந்தனர். ஊர்மக்களை அச்சுறுத்தி தம்மோடு சேர்த்துக் கொண்டு ஆலயத்தை இடித்துத் தரைமட்டமாக்கினர். கட்டடப் பொருட்களை, மக்களைச் சுமக்கவைத்து படகுகளில் ஏற்றினர். வாவியால் அவற்றை வீச்சுக் கல்முனைக்கு கொணருமாறு, பணித்துவிட்டு, பறங்கித்துரை சவரிதுறையை யடைந்தான். அங்கு கத்தோலிக்க ஆலயம் ஒன்று அமைப்பது நோக்கமாயிருந்தது. சவரிதுறையில் படகுகள் காத்திருந்தன. படகில் ஏற்ற குதிரையை முடுக்கிய போது, அது திமிறிக்கொண்டு ஆற்றில் பாய்ந்து நீந்தத் தொடங்கிற்று. சிறுபொழுதில் நீரில் மூழ்கப்போயிற்று. துரை ஆழ்ந்து போனான். காப்பாற்ற ஆற்றில் பாய்ந்த வீரர்களும் மீளவில்லை. அவர்கள் சேற்றில் புதைந்திருக்கலாம். அடுத்த நாளே மிகப் பிரயத்தனப்பட்டு சடலங்கள் மீட்கப்பட்டன. கட்டடப் பொருட்களோடு வீச்சுக்கல்முனை நோக்கி வந்த படகுகளும் கரைசேரவில்லை. அவையும் வாவியில் மூழ்கியிருக்கலாம். அவை மீட்கப்பட்டனவா? ஆலயம் கட்டப்பட்டதா? தெளிவில்லை. ஆனால் வீச்சுக்கல் முனையில் இப்போதும் ஒரு கன்னிமரியாள் ஆலயம், நிமிர்ந்து, கத்தோலிக்கத்தின் ஆதிக்கத்தைப் பறைசாற்றி நிற்கிறது.

திமிலத்தீவில் இப்போது காணப்படும் ஆலயம், பின்னர் - ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டதாகும். அதன் வரலாற்றை, 'ஈழத்துப் பழங்கோயில்கள்' என்ற தொடரில் 18.09.1954ஆம் நாள்,வீரகேசரியில் வெளிவந்த கட்டுரை தருகிறது.

மட்டக்களப்பு நகருக்குத் தென்மேற்கில், சுமார் இரண்டரை மைல் தொலைவில், திமிலதீவில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் மகிமை வாய்ந்ததாக, மக்களால் வணங்கப்படுகிறது. சாதி, சமய குல வேறுபாடின்றி, வெள்ளி சனி நாட்களில், சகலராலும் பூசிக்கப்படும் ஆலயம் இதுவாகும். திமிலதீவு பற்றி அறிய வேண்டாமா?

மட்டக்களப்பு நகருக்கு அண்மித்ததாக, வாவியில் நான்கு தீவுகள் மிதக்கின்றன. புளியந்தீவு, எருமைதீவு, திமிலதீவு, மான்தீவு, புளியந்தீவுக்கும், எருமைத் தீவுக்கும், மான்தீவுக்கும் இடையில் அமைந்து கிடப்பது தான் திமிலதீவு.

அக்காலத்தில் திமிலதீவு நாற்புறமும் நீரால் சூழப்பெற்ற ஒரு தீவாகவேயிருந்தது. கொத்துக்குளத்து மாரியம்மன் கோயில் இருக்கும் பகுதியும் சவரித்துறையென்னும் மட்டக்களப்பு நகருக்குச் செல்லும் குறுகிய பாதைப் பிரதேசமும் நீர் நிரம்பியனவாக இருந்திருக்க வேண்டும். அதனாலேயே திமிலர் வாழ்ந்த இந்த நிலப்பரப்பு ‘திமிலதீவு’ எனப் பெயர்பெற்றது. திமிலதீவில் இப்போது ஆறு கிராமங்கள் இருக்கின்றன. தீவின் கிழக்கில் சேற்றுக்குடா, வீச்சுக்கல்முனையும், வடக்கில் திருப்பெருந்துறையெனத் தற்போது வழங்கும் பெரியதுறையும், மேற்காக வலையிறவும், தெற்கில் திமிலதீவு எனப் பெயரிய பண்டைய கிராமமும் அமைந்துள்ளன. தீவின் மத்தியில், சின்னையா விதானையாரின் காலத்தில் உருப்பெற்ற ‘புதூர்’ என்ற கிராமமும் அமைந்துள்ளது.

திமிலர் என்போர் ஈழத்தின் ஆதித் தமிழ்க் குடியினராவர். அவர்கள் நாவாய், படகு செலுத்துவதையும், மீன் பிடித்தலையும் தொழிலாகக் கொண்டவர்கள். பலம் வாய்ந்த, உயர்ந்த தோற்றத்தினர். நீர்ப்பரப்பையண்டி வாழ்ந்தவர்கள். திமிலர் தலைவன் திமிலதீவிலே வாழ்ந்தான். மட்டக்களப்பை ஆண்டான்.

முற்குகத் தமிழர் திமிலதீவில் குடியேறிய பின்னர் மீண்டும் ஆலயம் தோற்றம் பெற்றது. இவ்வாலயம் ஆதியில் ஓலையாலும் பின்னர் குட்டைக் கற்களாலும் அடுத்துச் செங்கற்களாலும் அமைக்கப் பெற்றதாகத் தெரிகிறது. கிராமத்தின் தென்கோடியில் அமைதியான இடத்தில், மூன்று அறைகள் கொண்டதாக, தென்னோலையால் வேயப்பெற்ற வெளிமண்டபத்தோடு காணப்பெற்ற இவ்வாலயம், தற்போது கோபுரத்தோடு உயர்ந்து நிற்கிறது. வலப்புறத்தில் சிறிய சனீஸ்வரன் கோயிலும் குமரன் ஆலயமும் காணப்பெறுகின்றன.

### ஆலயத்திற்கு அடிகோலிய அரசு

எல்லாவற்றிற்கும் எழில் தந்து, பரந்து, விரிந்து, சேணுறு ஓங்கி நிற்கும் அரச விருட்சம், ஆலயத்திற்கு அணிசெய்கிறது. அதன் சுற்றளவு, இருபத்தைந்து - முப்பது அடியிருக்கலாம். கோயிலுக்கு முன்புற வலதுபக்கம் கம்பீரமாக நிற்கிறது. மீண்டும் இக்கோயில் எழுவதற்கு அடிகோலிய அரசு இதுவேயாகும். இதன் கண்ணுள்ள போர்களிலும், புற்றுக்களிலும் நாகங்கள் வாழ்ந்தன. தற்போதும் சிலதினங்களில் இவற்றைக் காணலாம். ஆயின் சனச் சந்தடியுள்ள நாட்களில் இவற்றின் ஊசலாட்டம் அபூர்வம், மக்கள், இவ்வரசடியில் நாக தம்பிரானுக்கு அதிகாலையில் பொங்குவது வழக்கம். இவ்வாலயத்துக்கும் அரச விருட்சத்திற்கும் கிட்டத்தட்ட ஒரேவயதெனலாம்.

### பாரம்பரிய செவிவழித் தகவல்.

இவ்வாலயத் தோற்றம் பற்றிய தகவல் ஒன்றுள்ளது. தவயோகி ஒருவர் இக்கிராமத்திற்கு வந்தார். கிராமத்தின் தென்கோடியில் நின்ற அரசிளங்கன்றைக் கண்டார். அதன்கீழ் அமர்ந்து தியானத்தில் மூழ்கினார். அவர் பூசனைக்காகக் கொணர்ந்த பொருட்கள் சில இருந்தன. ஆஞ்சநேயர்பொறித்த சின்னஞ்சிறு மணி, அதற்கேற்ற ஒரு கலசம், ஒரு சிறிய விஷ்ணு சிலை, அவ்வளவே.

இந்த யோகியால் கவரப்பெற்றவரும், இறைபக்தியில் சிறந்தவரும் கிராமத்தலைவரின் புதல்வருமாகிய ஒருவர் இருந்தார். அவர், யோகி பூசைசெய்யும் நேரங்களில் அவருக்கு உதவிகள் புரிவது வழக்கம். அவர் மூத்த தம்பியென உறவினரால் பாசமாக அழைக்கப்படுகின்ற சாம்பல் தின்னிப் போடியாவார். அவரது தந்தை, கண்டியரசனால் நிலாமைப்பதவி வழங்கப்பட்ட நிலாமைவேலாப் போடியாவார். அவர் ஒரு சிறந்த மந்திர வித்தகர் திருத் தான்தோன்றீச்சரத் தலைமை வணக்கராகவும் இருந்தார்.

மூத்ததம்பி ஒருநாள் சார்மணைக் கதிரையில் அமர்ந்த நிலையில் சித்தாயுர்வேதப், பழைய ஏட்டுச்சுவடி ஒன்றைப் படித்து பேச்சு மூச்சற்ற நிலைக்குள்ளானார்!. அன்னை, சின்னப்பிள்ளையம்மை வந்து மகனைப் பார்த்துத் திகில் கொண்டாள். உயிர் போய்விட்டதையுணர்ந்து, கூக்குரலிட்டாள். எல்லோரும் வந்து கூடினர். பின்னர் கதறிக்கொண்டு, அரசடியில் இருந்த யோகியிடம் ஓடினர். என்ன ஆச்சரியம்! மணி, கலசம், விக்கிரகம் எல்லாம் அப்படியே இருந்தன. யோகியைக் காணோம்.

அடுத்தநாள், சடலம் மயானத்துக்குக் கொண்டுபோக ஆயத்தமாகும் நேரம். சடலத்தின் உடல் அசைந்தது. உறங்கி எழுந்ததுபோல், மூத்ததம்பி எழுந்து அமர்ந்தார். அனைவரும் வியப்பின் உச்சத்துக்கேபோய் அதிசயித்தனர். ஆனந்தமடைந்தனர். சிறுபொழுது அமைதி. அவர் பேசத் தொடங்கினார்.
'அரசடியில் இருந்த சுவாமியார் என்னைக் கூப்பிட்டார். நான் போனேன், எல்லாம் சொன்னார். பூசை செய்த பின்பே நான் உணவு கொள்வேன்'.

சாவீட்டுக்கு வந்திருந்த சனங்களெல்லாம் சுவாமிக்குக் கோயில் அமைக்க முடிவு செய்தனர். ஆலையடிச் சோலையுள் புகுந்தனர். மரம் தடிகளை வெட்டிக் கொணர்ந்தனர். ஆலயம் உருப்பெற்றது. தென்னோலையால் வேயப்பெற்றுப் பூர்த்தியாயிற்று. அவர் எழுந்து, ஆலிலையில் துயில்வோன், ஆழியிற் பள்ளி கொள்வோனாகிய அழகனுக்கு, பக்தி மீதூரப்பூசை செய்தார். அதன் பின்பே அமுது கொண்டார். அந்த யோகி கொணர்ந்த பொருட்கள் இன்னும் உள்ளன.

அன்று தொட்டு, இன்றுவரை மூத்ததம்பியின் பரம்பரையினரே வாழையடி வாழையாக பூசைசெய்து வருகின்றனர். யோகி மேற்கொண்ட முறையிலேயே இன்றும் பூசை நிகழ்கிறது.

## நாடக பாணியில் திருவிழா

நிலாமை வேலாப் போடியாரின் மகனான, சாம்பல் தின்னிப் போடியின் பின் பூசை செய்தவர்களை, வரன்முறையாகத் தெளிய முடியவில்லை. அடுத்து கதிராமப் போடியைப் பூசகராகக் காண்கிறோம். அவரின் காலத்திலும் ஆலயம் ஓலைக்கொட்டிலாகவே இருந்தது. கதிராமப் போடியின் இறுதிக் காலத்திலே தான் ஆலயம் குட்டைக் கற்களால் கட்டப்பட்டு ஓலையால் வேயப்பட்டது. கதிராமப்போடியின் புத்திரன் வேலாப்போடியால் இதைச் சகிக்க முடியவில்லை. எப்படியும் கோயிலை செங்கல்லால் கட்டவேண்டுமெனத் திடம் பூண்டார். அவரது மாந்திரீக வித்தையும் துணைசெய்தது. அயராது படாத பாடுபட்டுக் கட்டி முடித்தார். மகன் சின்னையாவின் உறுதுணையும் பங்களித்தது. அப்போதும் வெளிமண்டபத்துக்கு ஓடுபோட முடியவில்லை. பூசை வெள்ளியிலும் விஷேச நாட்களிலும் நிகழ்ந்தது. வருடம் ஒரு தடவை அம்மன் கோயில்கள் போல, கதவு திறந்தது. சடங்கு நடந்தது. இறுதியில் கல்யாணச் சடங்கு விமரிசையாக நிகழ்ந்து நிறைவுற்றது.

சின்னையா விதானையார் பூசகராக வந்த பின்னர்தான், ஆலயத்திலும் ஆலய நடைமுறைகளிலும் பலமாற்றங்கள் ஏற்பட்டன. அவர் சாதாரணமானவரல்லர். பூசகர், மந்திரவாதி, போடியார், வைத்தியார், அண்ணாவியார், கவிவலவர், சோதிடர் எனப் பல்வேறு ஆளுமைகள் கொண்டவர். அப்பிரதேசத்து முடிசூடா மன்னர். திமிலதீவுக் கிராமங்கள் ஆறோடு மாந்தீவுக்கு கிராமாதிகாரி. கோயில் சடங்கை, கோயில் திருவிழாவாக மாற்றியவர் அவரே. அதுவும் ஈழத்தில் எங்குமே அறியப்படாத நாடக பாணித்திருவிழா.

வருடாவருடம் வைகாசித் திங்களில் திருவிழா கோலாகலமாக நிகழும். முதலாம் திருவிழா கஞ்சனின் சகோதரிகள் மாங்கனி பறிக்கக் கோரி உண்ணலும், இரண்டாம் திருவிழா, கண்ணனால் பூதனை வதைக்கப் படுதலும், மூன்றாம் திருவிழா யசோதையால் உரலில் கட்டுண்ட மாதவன் மருதுகளைச் சாய்த்தலும், நான்காம் திருவிழா கண்ணன் கன்று கொண்டு கனிக் கெறிதலும், ஐந்தாம் திருவிழா கூத்தாடிகள் கோபாலனால் மடிவதும், ஆறாம் திருவிழா வாணன் யுத்தமும், ஏழாம் திருவிழா நரகாசுரன் வதையும், எட்டாம் திருவிழா கம்சசம்காரமுமாக நாடகபாணியில் நிகழ்த்திக் காட்டப்படும். ஒன்பதாம் திருவிழா கிருஷ்ணன் உருப்பிணி திருக்கல்யாணமாக மிகுகோலாகலமாக இடம்பெற்று நிறைவுபெற, அடுத்தநாள் அமுது வழங்கப்பெறும். அத்தோடு திமிலைத்திருமால் திருவிழா இனிது பூரணத்துவம் பெறும்.

'கோயில்கள் தமிழர் கலைகள் பேணி வளரும் திருவிடம்' என்ற உண்மைக்குச் சான்று திமிலைத்திருமால் ஆலயம். இது வெறும் கதையல்ல. சின்னையாத் திருத்தொண்டனின் காலத்திலேயே அது சிறப்பிடம் பெற்றது. திருவிழா நாட்களில் ஆன்மீகச் சொற்பெருக்குகள், கதாப்பிரசங்கங்கள், இசைக்கச்சேரிகள், பக்திப் பஜனைப்பாடல்கள், நாடகங்கள் நாட்டுக் கூத்துக்கள், கரக ஆட்டங்கள் என்று இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் செழிக்குமிடமாக திமிலைத் திருமால் முன்றில் பொலிந்தது. அதற்கு மகுடம் சூட்டுவது போல திமிலை நளின கலாமன்றம் செயலாற்றியது. அதனைத் தோற்றுவித்து, பேணிவளர்த்து, இயக்கிப் பாராட்டுப் பெற்றவர் யார்? என்பதைக் கலையுலகம் நன்கறியும். திமிலை நளின கலாமன்றத்தால் ஆலய முன்றலில் மேடையேற்றப் பெற்ற நாடகங்கள் அழைத்தது நீதானா? முதற்கொண்டு இருபதுக்கும் மேற்பட்டவை. மன்றத்தால் மேடையேற்றப்பெற்ற மனோதத்துவரலாற்று நாடகம் 'ஈடிப்பஸ்' கலைக்கழக விருது பெற்றது. 'தமிழருவி' சஞ்சிகை நடாத்திய மேடை நாடக எழுத்துப் போட்டியில் 'முல்லைக்குமரி' தங்கப்பதக்கம் வென்றது. அந்த நாடகம், கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேற்றமும் பெற்றது. அந்த நாடகத்தில் 'மகேந்திரன்' (பிற்கால தமிழ் சினிமாத்துறை புகழாளர் பாலுமகேந்திரா) கதாநாயகனாக நடித்திருந்தார்.

அந்த நாட்களில் நாடகப் பாணியிலான திருவிழா பார்ப்பதற்கும், நளின கலா மன்றத்தின் நாடகம் கண்டு களிப்பதற்கும், பக்தர் வெள்ளம் பெருக்கெடுத்துக் கரைபுரளும்.திமிலைத் திருமால் ஆலயத்தைப் பொறுத்து, முத்தமிழ்க் கலை கலாசார பண்பாட்டுப் பணிகளில் முனைவர் திமிலைத்துமிலனின் பங்களிப்பு, ஒன்னார் உளத்திலும் உறைப்பாக நிலைபெறும் என்பதில் ஐயமில்லை. அந்தக் காலம் மீண்டும் மலர வேண்டும். அப்பொற்காலத்துக்காகக் காத்துக் கிடக்கும் நல்லடியார்களுக்கு, கேட்டதெல்லாம் கேட்டபடி நல்கும் திமிலைத்திருமால் அருள் பாலிப்பானாக. தமிழர் கலை பண்பாட்டு விழுமியங்களைப் பேணிக் காத்து நிலைபெறச் செய்யும் திருக்கோயில்களைக் கண்ணாகக் கருதிச் செயற்படுவோமாக.

'ஆலையடிச்சோலையான்'
10.08.2015

# வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

**அறிமுகம்**

காத்தற் கடவுளாகிய விஸ்ணு பகவான் அருளாட்சி புரியும் இடம் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலயமாகும். ''சர்வம் விஸ்ணு மயம் ஜகத்'' என்பது வைணவ சமயத் தலைவர்களின் கோட்பாடாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலயமும், வல்லிபுர ஆழ்வார் ஆலயமும், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயமும் சிறப்பு மிக்க விஸ்ணு தலங்களாகக் காணப்படுகின்றன.

**அமைவிடம்**

இலங்கையின் வட புலத்தில் யாழ் குடாநாட்டில் வண்ணையம்பதியில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் யாழ் நகரில் வண்ணையம்பதி பெரு நிலப்பரப்பை உடைய குறிச்சியாகக் கருதப்படுகிறது. இப்பெருநிலப்பரப்பில் தென் கிழக்குப் பகுதியில் இத் தேவஸ்தானம் அமையப்பெற்றுள்ளது.

**ஆலய வரலாறு**

இவ்வாலயம் நல்லூர் இராசதானியின் வாரிசு ஆன தமிழ் மன்னன் குணபூசணசிங்கை ஆரியன் செகராசசேகரனின் காலத்து சிறிய உருவில் பத்மசாலிச் செட்டிகளால் தமது வைணவ சமய சம்பிரதாயத்தையும் தமது சமூகத்தினரின் தெய்வ வழிபாட்டையும் வளர்ப்பதற்கு என உருவாக்கப் பெற்ற திருக் கோவிலாகும்.

இவ்வாலயம் ஏறத்தாழ 14ம் நூற்றாண்டில் தாபிக்கப்பட்டதொன்றாகும். பின்னர் 1685 ம் ஆண்டளவில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டு மீண்டும் ஒல்லாந்தர் காலத்தில் புனரமைக்கப்பட்டது. இத் தேவஸ்தானம் உருவாக்கப் பெற்ற காலத்து முதல் ஏறத்தாழ 1790 ம் ஆண்டு வரை ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் சிலா விக்கிரமாக ஸ்தாபிக்கப்பட்டு மூலமூர்த்தியாக இருந்து வந்தார். பின்பு தமிழ் நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட ஸ்ரீதேவி, பூமிதேவியுடன் கூடிய வரதராஜப்பெருமாள் சிலை விக்கிரகங்கள் கருவறையில் அமையப் பெற்றன. சிறிது காலத்தின் பின்பு இத்தேவஸ்தானத்தின் வருமானமும் சீரும் சிறப்பும் குன்றத் தொடங்கியது.இதன் தன்மையை ஆகம சாஸ்திர முறையில் ஆராய்ந்து இதற்குரிய பிராயச்சித்தத்தை இயற்றுவதற்காகத் தமிழ்நாடு சென்று வைணவ சமய ஆச்சார்ய விற்புன்னர்களின் ஆலோசனையைப் பெற்று வந்து 1940 ம் ஆண்டில் ஸ்ரீ வெங்கடேசப் பெருமானின் சிலை விக்கிரகத்தைக் கருவறையின் மத்தியில் அமைத்து இவரின் பின் புறத்து ஸ்ரீதேவி, பூமிதேவி ஸ்ரீவரதராஜப்பெருமாளை சாயா விக்கிரகமாக ஸ்தாபித்தனர்.

**பூசைகளும் விழாக்களும்**

வைணவ தலங்களில் இரு பெருங்கூறான கிரியை முறைகள் நடைபெறுகின்றன. வைகானச ஆகம, பஞ்சராத்திர ஆகம சம்பிரதாயத்திற்கு ஏற்ப பூஜா விதானங்களை அமைத்துள்ளனர். இத் தேவஸ்தானத்தில் வைகானச ஆகமத்திற்கு ஏற்ப பூஜா காரியங்கள் அன்று தொட்டு இன்று வரை நடைபெறுகின்றன.

**மகோற்சவ விழாக்கள்**

இத்தேவஸ்தானத்தில் கி.பி.1878 ம் ஆண்டு தொடக்கம் மகோற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. இவ் உற்சவம் புரட்டாதி திங்களில் வரும் சுக்கிலபட்ஷத் திதியில் வரும் அத்தம் அல்லது சித்திரை நட்சத்திரத்தில் துவஜா ஆரோகணத்துடன் பிரமோற்சவம் ஆரம்பமாகி ஒன்பதாவது தினமாகிய உத்தராட நட்சத்திரத்தன்று ரதோற்சவமும் பத்தாவது நட்சத்திரமாகிய திருவோண நட்சத்திரத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெற்று பின்பு துவஜா அவரோகணம் நடைபெறுகின்றது.

இவ்வாலயத்தில் மகோற்சவ காலங்களில் கஸ்தம் பாதச்சாத்துப்படி நடைபெற்று வருகின்றது. கருடன், ஆதிசேஷன், அன்னவாகனம், அனுமன், யானை, குதிரை, பூத்தண்டிகை, சப்பறம் ஆகியன மகோற்சவ கால வாகனங்களாகக் காணப்படுகின்றன.

மகோற்சவ விழா நிறைவு பெற்ற பின் பதினோராவது தினம் இரவு பகவானுக்கு திருக்கல்யாண உற்சவமும், பன்னிரண்டாம் நாள் திருவூஞ்சல் உற்சவமும், பதின்மூன்றாம் நாள் பகவான் யோக நிலையில் ஸ்ரீ வெங்கடேஸ்வரருடன் வீதி வலம் வந்து பதின் நான்காம் நாள் வீதி வலம் வந்த வாகனங்களுக்கு வாகன பூஜையும் நிகழ்த்தப்படுகின்றது.

**ஏனைய உற்சவங்கள்**

இத் தேவஸ்தானத்தில் மாதம் இரு முறை ஏகாதசி உற்சவங்கள் நடைபெறுகின்றன. அவை சுக்கில பக்ஷ, கிருஸ்ண பகஷ ஏகாதசிகளாகும். மார்கழித் திங்களில் வரும் சுக்கில பக்ஷ ஏகாதசித் திதியில் வரும் சுவர்க்க வாயில் துவாதசி சித்திரை உற்சவங்கள் மிகவும் விசேடமானவை.

மாத ஏகாதசி தினங்களில் ஆதி ஸ்ரீ வெங்கடேச மூர்த்திக்கு உற்சவம் நடாத்தப் பெறுகின்றது. வருடம் தோறும் தைப்பொங்கல் உற்சவம் நடாத்தப்படுகின்றது. .பட்டிப்பொங்கல் உற்சவத்தன்று பகலில் ஸ்ரீ வேணு கோபாலருக்கு அன்னாபிசேகம் நடைபெற்று மாலையில் கோபூஜை நடாத்திய பின் இவர் வீதியில் வலம் வருகிறார். வருடம் தோறும் மாசித்திங்களில் வரும் திருவோண நட்சத்திரத்தில் இலட்சார்ச்சனை விழா தொடங்கப் பெற்று ரோகிணி நட்சத்திரத்தில் இவ்விழா பூர்த்தியாகின்றது. (அகண்ட ஹோம காரியத்துடன்) வருடம் தோறும் பங்குனி சித்திரைத்திங்களில் ஸ்ரீராமரின் ஜனன தின விழா நிகழ்த்தப்பெறுகின்றது. இதை ஸ்ரீராம நவமி தினம் என வைணவர்கள் கொண்டாடுவர்.

பங்குனி உத்தரத்தன்று இராம பிரானுக்கு பட்டாபிஷேக விழா நடத்தப்படுகின்றது. சித்திரைத்திங்கள் அன்று தமிழ் வருடப்பிறப்பு உற்சவம் நடத்தப்படுகின்றது. சித்திரை மாத திருவோண நட்சத்திரத்தன்று சுதர்ஷன ஹோம வைபவம் மிகவும் சிறப்பாக நடத்தப் பெறுகின்றது. சித்திரைத்திங்களில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தன்று ஸ்ரீராமானுஜ ஆச்சாரியருக்கு விழா எடுக்கப்படுகின்றது. ஆனித்திங்களில் வரும் ரோகிணி வருட சங்காபிசேகமாகிய நவோத்திரசகஸ்ர சங்காபிசேகம் மூலமூர்த்திகட்கும் பரிவார மூர்த்திகளுக்கும் நவக்கிரகபீடம் வெளி ஆஞ்சநேயருக்கும் நடாத்தப்படுகின்றன. ஆடித்திங்களில் வரும் ஆடிப்பூர நட்சத்திரத்தன்று ஸ்ரீஆண்டாள் தேவிக்கு ருதுசாந்தி வைபவம் நிகழ்த்தப் பெற்று ஸ்ரீவைகுந்தவாசரால் திருமங்கல்யதார உற்சவம் நிகழ்த்தப் பெறுகின்றது.

ஆடித்திங்களில் வரும் சுக்கிலபக்ஷ சுக்கிலவாரத் தினத்தன்று வரலக்ஷ்மி விரத உற்சவம் நிகழ்த்தப் பெற்று அடியவர்கட்கு வரலக்ஷ்மி விரத நூல் வழங்கப்படுகின்றது. ஆவணித்திங்களில் வரும் கிருஷ்ணபக்க அஷ்டமித்திதியும் ரோகிணி நட்சத்திரமும் ஓர் அளவு கூடப்பெற்ற நள்ளிரவில் ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு ஜனன பூஜை நிகழ்த்தப் பெற்று அடியவர்கட்கு ஜனன காயம் வழங்கப்படுகின்றது. இவ்விழாவின் மறுதினம் மாலையில் உறியடி உற்சவம் நிகழ்த்தப் பெறுகின்றது. புரட்டாதி திங்களில் வரும் சனி வாரங்களில் நவக்கிரக நாயகர்களுக்கு அடியவர்கள் கிரகதோஷ நிவர்த்தி வழிபாடு செய்கின்றனர். இத்தினங்களில் இரவு, பகல் உற்சவம் நடைபெறுகின்றன.

ஆழ்வார்கள் பன்னிருவரின் தினங்களுக்கு விசேட உற்சவங்கள் நடத்தப்படுகின்றன. நவராத்திரி விழாக்காலத்தில் ஸ்ரீலக்ஷ்மி அம்பாள் கொலு வீற்றிருக்கின்றார். விஜயதசமித் தினத்தன்று சுவாமி சமீவிருஷ்ச பூஜையில் பங்கு பற்றி மானம்பூ உற்சவத்தில் பங்கு பெறுகின்றார்.

மகாலக்ஷ்மி தேவி மானம்பூ பூஜையில் பங்கு பெறும் வழக்கம் இல்லை. மகாலக்ஷ்மி படி தாண்டாப் பத்தினி. அவர் இக்காரணத்தினால் வெளி வீதி வருவதில்லை. சுமங்கலிகள் தீப பூஜை இத் தேவஸ்தானத்தில் நவராத்திரி விழாவின் இறுதியில் வரும் பௌர்ணமியன்று கொண்டாடப்படுகின்றது.ஐப்பசித் திங்களில் தீபாவளி தினத்தன்று ஸ்ரீவேணு கோபால சுவாமிக்கு அபிஷேக ஆராதனை நடைபெற்று உற்சவம் நிகழ்த்தப்படுகின்றது. கார்த்திகைத் திங்களில் வரும் ரோகிணி நட்சத்திரத்தன்று கார்த்திகைத் தீப உற்சவம் நடைபெறுகின்றது. மார்கழித் திங்கள் முழுமையும் திருப்பள்ளி எழுச்சி திருப்பாவை பாக்கள் பாடப்பெற்று தினமும் வைகறைப் பூஜைகள் நிகழ்த்தப் பெறுகின்றன.மார்கழித் திங்களில் வரும் கேட்டை நட்சத்திரத்தில் தொண்டரடிப் பொடியாழ்வார் உற்சவம் தொன்று தொட்டு இவ்வாலயத்தில் நடைபெற்று வருகின்றது.மார்கழித் திங்களில் வரும் மூல நட்சத்திரத்தன்று ஆஞ்சநேயருக்கு ஜனன உற்சவம் நிகழ்த்தப் பெறுகின்றது.

**நூல்**

இவ்வாலயத்தின் மீது மா.த.ந.வீரமணி ஐயர் வண்ணை வெங்கடேசப் பெருமாள் கீர்த்தனை பாடியுள்ளார்

**தேர்ச்சி 10.0** : பிறசமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிற்கு மதிப்பளிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 10.1** : பிறசமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து கொள்வர். அவை பற்றி விளக்குவார்.

**செயற்பாடு** : இலங்கையில் உள்ள சமயங்களின் வழக்காறுகளை அறிந்து மதிப்பளிப்போம்.

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றல் பேறு** :

- இலங்கையில் உள்ள சமயங்களை அறிவார்.
- பிற சமயங்களுக்கு மதிப்பளிப்பார்.
- சைவசமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து வாழ்வில் மதிப்பளிக்கப் பழகுவார்.
- தன்னுடைய நாட்டில் காணப்படும் சமயங்களைக் கடைப்பிடிக்கும் அனைவருடனும் சமூக நல்லிணக்கத்துடன் வாழப்பழகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்** :

படி 1:
- இலங்கையில் உள்ள சமயங்களைக் கூறும்படி மாணவர்களிடம் வினவுங்கள்.
- அவர்கள் வழிபடும் கடவுளர் பற்றிக் கேட்டு அறியுங்கள்.
- அவர்கள் கொண்டாடும் விழாக்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

படி 2:
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- டிமைன் கடதாசி, பேனா என்பவற்றை ஒவ்வொரு குழுவிற்கும் பகிர்ந்தளியுங்கள்
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து, தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

படி 3:
- ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவிற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களின் குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப் படுத்துங்கள்.

படி 4:
- ஒவ்வொரு குழுவினரும் எழுதிய அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவினரினதும் செயற்பாட்டிற்கும் ஏனைய குழுவினர்கள் கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடங்கள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.
- சைவம், கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் இலங்கையில் பின்பற்றப்படுகின்றன.
    - சைவம் - சிவன்
    - கிறிஸ்தவம் - இயேசு
    - பௌத்தம் - கௌதம புத்தர்
    - இஸ்லாம் - அல்லாஹ் ஆகிய கடவுள்களை வழிபடுகின்றனர்.
- இச் சமயங்களின் முதல் நூல்கள்
    - சைவம் - வேதம், ஆகமம்
    - கிறிஸ்தவம் - பைபில்
    - பௌத்தம் - திரிபிடகம், தம்மபதம்
    - இஸ்லாம் - திருக்குர்ஆன்
- விசேட விழாக்கள்
    - சைவம் - சித்திரைப் புத்தாண்டு, தைப்பொங்கல், தீபாவளி, விரதங்கள்
    - கிறிஸ்தவம் - பெரிய வெள்ளி , நத்தார் பண்டிகை
    - பௌத்தம் - புதுவருடம், வெசாக்
    - இஸ்லாம் - றம்ழான், ஹஜ் பெருநாள்
    - இம் மதங்கள் இறை உண்மையையும், அன்பையும், இறைபக்தியையும் விளக்குகின்றன.
- சகல மதங்களையும் போற்றி மதிப்பளித்தல் வேண்டும்
- இச் செயற்பாடுகள் மூலம் சமூகத்தில் நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 1.2.2 இல் உள்ள மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்
- சமயங்களின் பிரதான நூல்கள்,பண்டிகை தொடர்பான காட்சிகள், வீடியோ ஒளிப்படங்கள்
- டிமை கடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

**படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்
    - இலங்கையிலுள்ள சமயங்களை அறிவார்.
    - சமயங்களின் பிரதான தெய்வங்களைப் பட்டியற் படுத்துவார்.
    - ஒவ்வொரு சமயத்துக்குமுள்ள முதன்மையான நூல்களைக் கூறுவார்.
    - ஒவ்வொரு சமயத்தாரும் கொண்டாடப்படும் விழாக்களைக் கூறுவார்.
    - பிறசமயங்களுக்கு மதிப்பளித்து வாழ்வார்.

**இணைப்பு 9.1.1 செயற்பாட்டுப் பத்திரம்**

இலங்கையில் உள்ள சமயங்கள்

| சமயங்கள் | வழிபாட்டுக்குரியவர் | முதன்நூல் | விசேட விழாக்கள் |
|---|---|---|---|
| 1.சைவசமயம் | | | |
| 2.கிறிஸ்தவம் | | | |
| 3.பௌத்தம் | | | |
| 4.இஸ்லாம் | | | |

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு உங்களது அடுத்த நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள்

   1. ..............................................................................................................

   2. ..............................................................................................................

   3. ..............................................................................................................

2. **பெற்றோருக்கானது**

   இலங்கையில் உள்ள அனைத்து சமயங்களையும் அதன் கருத்துக்களையும் நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களையும் தேடி அறிந்து அவற்றுக்கு மதிப்பளிக்கும் வகையில் பிள்ளைகளை வழிநடத்துங்கள். சமயக்கருத்துக்களுடாக சமூக நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு வழிகாட்டுங்கள்.

# 8.3.0 கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம்

கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதையும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்னேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) கணிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும்போதே கணிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம்பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர் களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறைமையாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங் களையும் இனங்கண்டு அவற்றிற்குப் பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமுமாகும்.

கற்றல் - கற்பித்தற் செயன் மூலம், தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப் படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்கள் செய்யும் வேலை களை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாகக் கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவரது ஆற்றல், அபிவிருத்தி என்பன எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்குத் தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து, அவற்றை அவர்கள் சரியாகப் பெற்றுக் கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல் - கற்பித்தல் ஊடாக நிகழ வேண்டும். அத்தோடு அதற்குத் தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். கணிப்பீட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பின்னூட்டல் /முன்னூட்டல் என்பனவாகும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமை களையும் ஆற்றல்களையும் இனம் காணும்போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டலையும் வழங்குவதும் ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காகப் பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர் களுக்கு அவசியமாகின்றது. கணிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட கணிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல், மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்தத்தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே, அவை தொடர்பாகப் பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அணுகுமுறை வகைகள் வருமாறு:

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி/ முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூல் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தல் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடு